சுதந்திரச் சுழல்

ஆசிரியர்

N. R. பத்மநாபன்

அருள் நிலயம்

ராமச்சந்திரபுரம் : திருச்சி ஜில்லா

பதிப்புரிமை
முதற் பதிப்பு
ஜனவரி 1947

விலை ரூ 5/-

மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமசந்திரபுரம்

பதிப்புரை

நம் இந்தியத் தலைவர்களுள் முதன் மரியாதைக் குரியவர் நேதாஜி. இளைஞரின் இலட்சிய புருடரும் அவர்தான். அவரது வாழ்க்கைச் சித்திரம் ஒப்பற்ற அரசியல் போக்கினையும், தியாக வேள்வி, சுதந்திரச் சோதி ஆகச் சித்திரத்தை எழில் குறையாமல் தமிழருக்குத் தருவது இந்நூல். இதனைத் தீட்டிய சிற்பி திரு N. R. பத்மநாபன் அவர்கள் பத்திரிகைத் துறையிலும், அரசியல் துறையிலும் ஊழியம் புரிந்து சிறந்த அனுபவம் பெற்றவர். ஹரிஜன இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டு மகாத்மாஜியின் மனத்தைக் கவர்ந்தவர். அவரது ஆணித்தரமான பேனாவின் ஆற்றல் தமிழர் உள்ளத்தை அள்ளிப் பிடிக்குமென்பது உறுதி.

ராமசந்திரபுரம்
23-1-1947
[க அ ந.]

அருள் நிலயம்

அன்புக் காணிக்கை'

அன்னை பாரதத் தேவியின் சுதந்திர மாளிகையை நிர்மாணிக்கும் பொருட்டு அஹிம்சைப் போரிலும் ஆயுதப் போரிலும் தங்கள் தசை - எலும்பு - இரத்தம் ஆவிகளைச் சிந்திய தியாகிகளுக்கு இந்நூல் என் அன்புக் காணிக்கை

— **N. R. பத்மநாபன்** —

வந்தேமாதரம்!

முன்னுரை

மகாத்மா காந்தியடிகளின் காலத்திலே வாழக் கொடுத்து வைத்த நாம் பெற்றுள்ள பேறுகள் பல. அவைகளுள் தலை சிறந்தது இடைக்கால சர்க்கார். நாளை, பரிபூரண சுதந்திர சர்க்காரையும் பெற்று விடுவோ மென்பதில் சந்தேகமில்லை. அந்தச் சுதந்திர சர்க்காரின் தலைவர்களாக, ஒருவர் பின் ஒருவராக எத்தனையோ புனிதர்கள் வரவிருக்கின்றனர். எனினும் "சுதந்திர சர்க்காரின் **முதலாவது தலைவர்** யார்?" என்றொரு கேள்வி யெழுந்தால், **நேதாஜி** என்ற ஒரே பதில்தான் கிடைக்கும். இதை யாரும் மறுக்க வியலாது. ஏனெனில், 1943 அக்டோபர் 21-ம் நாளே அந்தப் புனிதப் பேற்றை அவர் அடைந்து விட்டார்.

நேதாஜியின் வாழ்க்கை முழுதுமே சோதனைகள் என்னும் வைரக் கற்களால் நிரம்பியிருப்பதைக் காண்கின்றோம். அவரது சரித்திர ஏடுகளிலே தலை சிறந்த பகுதி, 1941 ஜனவரி 15-ம் நாள் முதல் 1945 ஆகஸ்ட் 17-ம் நாள் வரையுள்ள நிகழ்ச்சிகள் கொண்டதுதான். அறுபது ஆண்டுகள் முயன்றும் அடையப் பெறாத சுதந்திர சர்க்காரைத் தோற்றுவித்து, மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்த முதலாவது தலைவர் அவரே தானென்றால் தவறில்லை.

நாற்பது கோடியினரின் பிரதிநிதிகளாகக் கிழக்காசியாவில் சிதறிக்கிடந்த முப்பது லட்சம் இந்தியர்களையும் ஒன்று சேர்த்து, கலப்பற்ற சுதந்திர சர்க்காரை யமைத்து, சரித்திர முறைப்படி ஆயுதந் தாங்கிய போரையும் நடத்திய வீரர் நேதாஜி ஐந்தே முக்கால் ஆண்டுகளில் அவர் பெற்ற வன்மையும் செல்வாக்கும் புகழும் வேறெவராலும் பெற முடியாதென்பது திண்ணம். அவருக்கு நேர்ந்த சோதனைகள், இன்னல்கள், ஆபத்துகள் வேறெவருக்கேனும் நேர்ந்திருந்தால், வெற்றி பெறுவதென்பது குதிரைக் கொம்பாகத்தானிருக்கும்.

மனித சக்தியையும் மீறிய ஆற்றல் படைத்த நேதாஜியின் புகழுக்கு, பெருந்துணையாக நின்றவர்கள் தமிழர்களே யாவர். ஆகவே, நேதாஜியின் புகழில் தமிழர் பெருமை மண்டியிருப்பதைத் தமிழ் நாட்டார் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டுவது, தவிர்க்க முடியாத கடமையாகும். இந்தக் கடமையைப் பறைசாற்றி, தமிழர் உள்ளத்திலே — உணர்ச்சியிலே — அறிவிலே — ஆற்றலிலே சுதந்திரக் கனலைக் கொழுந்துவிடும்படிச் செய்ய வேண்டுமென்பது எனது பேரவா. இந்த ஆசை நிறைவேற எனது தமிழ் நடை துணை செய்யுமா வென்பதைச் சோதனை செய்யத் துணிந்தேன். அந்தத் துணிவுதான் இந்தச் **சுதந்திரச் சுழலாக** வெளிவருகிறது.

நேதாஜி பற்றிய புத்தகங்கள் பல பல மொழிகளில் கணக்கின்றி வெளிவந்து கொண்டிருக்கும் இந்நேரம், அவரது சித்தக் கடலிலே எழுந்த இரத்த அலைகளால் தோன்றிய சுதந்திரச் சுழலை, அரசியல் கண்கொண்டு ஆராய்ந்து தொகுத்து எழுதுவதற்கு, கிழக்காசிய இந்தியச் சுதந்திரக் கழக வெளியீடுகள் - நேதாஜி பற்றி இதுவரை வெளிவந்துள்ள புத்தகங்கள் - பத்திரிகைச் செய்திகள் ஆகியன பெருந்துணை செய்தன. அவைகளின் ஆசிரியர்கள் உரிமையாளர்கள் ஆகியோருக்கு எனது உள்ளம் நிறைந்த நன்றியும் வந்தனமும் உரியன.

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பல்கியிருக்கும் இப்பாரதி சகாப்தத்திலே, எல்லா நூலாசிரியர்களும் கையாளும் முறைகளையேதான் நானும் கையாண்டிருக்கிறேன். ஆயினும் இந்த எனது ஊழியத்தைத் தமிழகம் நன்கு வரவேற்கு மென்பது எனது நம்பிக்கை.

ஜெய ஹிந்த்!

ராமச்சந்திரபுரம்
23—1—47

N. R. பத்மநாபன்

பொருள் அடக்கம்

வாழ்க்கைச் சித்திரம்	பக்கம்
அன்னையின் அருள்	17
பரம்பரைப் பண்பு ...	20
இளமையும் எழிலும்	22
முதலாவது சோதனைக் காலம்	25
இருளடர்ந்த இரு ஆண்டுகள்	29
பேராசிரியர் தளபதியானார்	34
சித்தரஞ்சரும் — சுபாஷ் சந்திரரும்	38
மத்தியிலே நிகழ்ந்தவை	44
தலைவர்கள் பிற்போக்காளர்களா?	50
சுதந்திர நினைவும் உப்புப் போரும்	56
சோகக் கதைகள்	61
ஐரோப்பாவில் மூன்று ஆண்டுகள்	65
ராஷ்டிரபதி போஸ்	70
பதவியைத் துறந்த பின்?	75
பட்டாணியர் உடையில்	81
காபூலில் காபூரா!	85
மருந்தும் விருந்தும்!	91
வெற்றிகரமான பிரயாணம்	94
ஜெர்மனியில் 'பரீஸ் இண்டியன்'	102
கிழக்காசியாவில் எழுச்சி	107
செய் அல்லது செத்துப்போ!	113
வலிய வந்த தலைமை	122
மூன்று முக்கிய நிகழ்ச்சிகள்	130
காந்தி ஜெயந்தி! ...	135

சரித்திரத்தில் புதிய சகாப்தம் .. 145
துடைப்பம் தூக்கிய கையில்? ... 151
போர்ப் பிரகடனப் அங்கீகாரம் 155
பிறநாட்டு சர்க்கார்கள் 164
டோக்கியோவில் புதிய சரித்திரம் . 167
ஓராண்டில் கண்ட காட்சிகள் 174
இரண்டே வாரத்தில் வெற்றி முரசு . 181
இம்பால் முற்றுகை . 187
காரிருள் கவிந்தது 196
குழம்பிய நிலைமை 205
பொய்யா? மெய்யா? 214
சிந்தனையின் தீர்ப்பு 219

இரத்த அலைகள்

புரட்சியை வளர்ப்பது? 231
தற்காலிக சர்க்கார் பிரகடனம் 241
ஆம், இந்தியா அளிக்கும்! . 249
இழந்த உயிர் திரும்புமா? .. 254
இரத்தம் கொடு! சுதந்திரம் இதோ! 264
காந்திஜிக்குக் காணிக்கை! .. 269
ஐரோப்பாவைப் பாருங்கள்! . 290
கற்றுக் கொண்ட பாடம்! . 306

சுதந்திர இந்தியாவின் தேசிய கீதம்

*

"ஸுப ஸுக க்ஷயன கி பாகஹா பாஸே பாரத பாக ஹை ஜாகா
பஞசாப ஸிநத குஜராத மராடடா தராவிட யுதகல பஙகா
சஞ்சல ஸாகா விநத ஹிமாலா நீலா ஜமுனா கஙகா
தேரே நித குண காயே துஜ ஸே ஜீவன பாயே
ஸப தன பாயே ஆஷா
ஸுராஜ பன கா ஜக பா க்ஷமகே பாரத நாம ஸுபாகா.
ஜயஹோ ஜயஹோ ஜய-ஹோ
ஜய ஜய ஜய ஜய ஹோ பாரத நாம ஸுபாகா"

"ஸப கே தில மெண பரித பஸாயே தேரி மீதி பாணி
ஹர ஸுபே கே ரஹனே வாலே ஹர மஸஹப கே பராணி
ஸப பேட ஓர பாக மிடடா கே
ஸப கோத மெண தேரி ஆககே
கூநதே பரேம கி மாலா
ஸுராஜ பன கா ஜக பா க்ஷமகே பாரத நாம ஸுபாகா
ஜய ஹோ ஜய ஹோ ஜய ஹோ
ஜய ஜய ஜய ஜய ஹோ. பாரத நாம ஸுபாகா"

"ஸுபாஹ ஸவேரே பணக பகஹேறு தேரே ஹீ குண காயேன
பாஸ பரீ பாபபூர ஹவாயேன ஜீவன மெண ருத லாயே
ஸப மில கா ஹிநத புககாரே ஜேய ஆஸாத ஹிநத கி நாரே
பயாரே தேஷ ஹமாரா
ஸுராஜ பன கா ஜக பா க்ஷமகே பாரத நாம ஸுபாகா
ஜய ஹோ ஜய ஹோ ஜய ஹோ
ஜய ஜய ஜய ஜய ஹோ. பாரத நாம ஸுபாகா."

[ஆஸாத ஹிநத சாககார அங்கிகரிததது]



இந்திய மாதர்கள் கூட்டத்தில் பேசுகிறார்

மலேயாப் பலியம் கேக்காஷியும்

பிளுங்கு
ஒலிபரப்பியில்
நேத்தாஜி



தியாகிகள் சின்னத்துக்கு வணக்கம்



சிங்கப்பூரில் கால்
வைத்ததும்
குதூகல வரவேற்பு



தியாகிகளின்
சின்னத்துக்கு
செல்லும் காட்சி



அணிவகுப்பைப்
பார்வையிடுகிருர்



சுதந்திர இந்திய
இராணுவத்தின்
அணிவகுப்பு

வீர ஜான்ஸி
ராணிப்படையின்
அதிகாரிகள்

போர்க்கோலத்தில்
பெண் தெய்வங்கள்

"நல்லுயிரிந்தும் கொடியினைக் காப்போம்"

போர்வீரர் சந்திப்பு

இந்தியப் பெண் சமூகமே! எம்மைப் பின்பற்றுக!

நேத்தாஜி! இதோ......எங்கள் அணிவகுப்பு!



க. அன்னையின் அருள்

அகில உலகும் அதிசயிக்கிறது, அங்காந்திருக்கிறது, இமயத்தைப் பார்த்து நொந்தரும் அதன் நிழலை நினைத்து நினைத்து அறிவைப் பறிகொடுக்கிறது விண்ணை யிடிக்கும் இமயம்போல, இந்திய மண்ணின் இயற்கை வளமும் இன்பச் சுனைகளும் விண்ணளவு புகழ் மணம் வீசுவதால், மண்ணாசை கொண்ட மன்னர்கள் மனம் புழுங்குகின்றனர், பேராசைப் பேய்க் கூட்டம், அவர்களது இதயக் கதவுகளை உடைத்து நொறுக்குகிறது. அதனால், மூண்ட போர்கள் எத்தனை? வெறி பிடித்த அன்னியரின் தறுதலைச் செயல்களுக்கு அளவு உண்டா? கொள்ளைக் கூட்டத்தார்களின் கொடுமைகளுக்குக் கணக்கு உண்டா? மதப் பித்தர்களின் மறச் செயல்களை மறக்க முடியுமா? மக்களை யிழந்து மனமுடைந்து மடிந்தனர் பெற்றோர்கள், கணவனைப் பறி கொடுத்துக் கதறினர் கற்பரசிகள் கலையும் தொழிலும் கொலையுண்டன. அம்மம்ம! மூளை கொதிக்கும், வாய் ஊமையாகும், மூச்சுத் திணறும், நெஞ்சு குமுறும், பேறு நடுங்கும் அத்தனைத் துன்ப அலைகள் பல நூற்றாண்டுகளாக இந்தியாவை முட்டி மோதி அழிக்கத் தலைப்பட்டன. ஆயினும் பாரத அன்னை சிறிதும் தயங்கினாளில்லை, இயற்கையாலமைந்த தன் அருள் ஒளியை ஒவ்வொரு சமயமும் உலகுக்கு அளித்து முன்னின்றாள் — இன்றும் நிற்கிறாள், இனி மேலும் அப்படித்தான்.

அஞ்ஞான இருள் படர்ந்த உலகுக்குச் சங்கரனைச் சமைத்தாள், இராமானுஜனை இசைத்தாள், கம்பனையும்

காளிதாசனையும் கொடுத்தாள், வான் புகழ் வள்ளுவனை அருளினாள், ஏன்? மனிதச் சாதியையே புனிதமாக்கினாள் பாரதத் தேவி யென்றால் மிகையன்று இவ்வாறு மங்காத விளக்குகள் பல இன்னும் வழி காட்டிக் கொண்டிருக்கின்றன உலகத்தினருக்கு திரித்துக்கூறும் சரித்திரக்காரர்கள் எவ்வளவுதான் தங்கள் கைதேர்ந்த தந்திர வரிசைகளைக் காட்டினாலும், நேர்மையை மறைக்க இயலவில்லை. அவர்கள் திரிபுகளை யெல்லாம் கிழித்துக்கொண்டு உண்மைகள் நம் முன் காட்சி தருகின்றன. பழமை பழமை யென்று பாவனை பேசும் கீழ்மையினரல்ல நாம் என்றைக்கும் அந்நிலை நம்மை யணுகாது

சென்ற இருநூற்றாண்டுச் சரித்திரத்தை எடுத்துக் கொள்வோம். அலசி ஆராய வேண்டுவதில்லை, கிண்டிக் கிளற வேண்டியதில்லை வேதாந்தக் கற்பகம் இராமகிருஷ்ண பரமஹம்ஸர் தோன்றினார், அக்கற்பக நிழலில் களைப்பாறிய காம வீரர் சுவாமி விவேகானந்தர்—விந்தை யுலகின் சிந்தை மயக்கி, நம் முந்தையர் பெருமையைச் சந்ததமும் நிலை நிறுத்தினார், உலகம் உவக்க உயர்தரக் கவீந்தராக இரவீந்திரர் விளங்கினார், தரணியோர் வியக்க—தாவர விஞ்ஞானி ஜகதீசவசு திசை தோறும் தனிமுரசு கொட்டினார். எந்த நாட்டார் தான் இவர்களுக்குத் தலைவணங்காதிருக்க முடியும்? நவீன நாகரிகம் மலர்ந்துள்ள நானிலமும், இவர்கள் பெயரையும் பெருமையையும் அறிந்து திடுக்கிடுகின்றன

இவர்களெல்லாரும் இந்தியப் புதல்வர்கள் என்று சொல்லும் போதே, நம் தலை—தானே நிமிர்கிறது, விடுகின்ற மூச்சிலே பெருமிதம் பிறக்கின்றது அதிலும்

வங்கத்தினரைக் கேட்கவா வேண்டும், வங்கக் கருவி லன்றோ அத்தனைய பல மேதைகள் தோன்றினர்! ஆகவே, வங்கத்தினர் நெஞ்சிலே மிஞ்சுகின்ற இறுமாப்பு—வார்த்தையிலே நேர்த்தி—செய்கையிலே வீரம்—தாண்டவ மாடுவதைக் காண்கின்றோம். இந் நிலைமையில், காரல் மார்க்ஸின் கனவு—நெப்போலியனின் ஆண்மை—விவே கானந்தரின் ஆத்மா—பெல்ஜியரின் இலட்சியம்—அசோகனின் அரசியலறிவு—சிவாஜியின் சிந்தனை—பாரதியின் பண்பு—இரவிவர்மாவின் ஓவியம்—ஹிட்லரின் சித்தம்—நிப்பொனியரின் வீரம்—லெனினின் முயற்சி—நேருவின் நேர்மை—நியூட்டனின் தத்துவம்—இவை யனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து, தேசபந்து தாஸின் இரத்தத் தேனில் ஊறவைத்து, அன்னையின் அமுதத்தில் கரைத்து, காந்தீயப் பரிதி யொளியிலே காயவைத்து உருட்டித் திரட்டிய தென்ன, ஓர் மின்சாரச் சஞ்சீவியை நமக்கு வங்கம் இன்று தந்திருக்கிறது. அதன் மணம் இந்தியாவிலுள்ள ஆண்-பெண், கிழவன்-குமரன், அரசன்-ஆண்டி, முதலாளி—தொழிலாளி, படித்தவன்—பாமரன் எல்லோரது உள்ளத்திலும் உடம்பிலும் வீசி நிற்கிறது. அதனால் மின்சார சக்தி கொண்ட புதிய இரத்தம்—புதிய உணர்ச்சி தோன்றிவிட்டது, அறிவில் தெளிவு காணப்படுகிறது, அச்சம் அழிந்து விட்டது, ஆண்மை முந்துகிறது, நம்மையறியாமலே ஆவேசச் சூறாவளி அலை மோதுகிறது.

அதே சமயம் 'எங்குமில்லை எமக்கு இணையான வல்லரசு' என்றுத் துள்ளிக் குதித்த ஆங்கில ஏகாதிபத்தியம், அஸ்தியில் ஜுரம் கண்டு ஆட்டமெடுத்து, அலறிப் புடைத்து, நம்மிடம் மண்டியிட்டு மன்றாடி

மன்னிப்புக் கோருகிறது. இந்த அற்புத—அதிசயப் புதுமை யெல்லாம் இருந்து பார்க்கக் கொடுத்து வைத்தோம். எல்லாம் அந்த 1897 ஜனவரி 23-ம் நாளில் வங்கம் தந்த சிங்கம், இரத்தக் கடலைக் கலக்கிய செயல்தான். “நேதாஜி” எனும் மணி முடி தரித்த அந்த சுபாஷ் சிங்கத்தின் வாழ்க்கைச் சித்திரம் இந்தியர்கட்கோர் மதிக்க முடியாத மாணிக்கப் பொக்கிஷமன்றோ!

௨ பரம்பரைப் பண்பு

துஞ்சும் பொழுதும் தாயின் பதத் தொண்டு நினைந்திடும் வங்கத்தின் மத்தியிலே, இயற்கை வளம் செறிந்த இருபத்து நான்கு பர்கானாக்கள் அவைகளிலொன்று கோடாலி கிராமம். அங்கு, புராதனப் பெருமை பெற்ற காயஸ்த வகுப்பிலே—சீரும் செல்வமும் சிறக்கக்கொண்டது “போஸ் குடும்பம்.” அக் குடும்பத்தினர் பலர் அரசியல் நிர்வாகிகளாகவும் - திவான்களாகவும் - மந்திரிகளாகவும் அமர்ந்து ஆணை செலுத்தியுள்ளனர். பொது ஜன ஊழியமே சிறப்பு இலட்சியமாகக் கொண்ட அவர்களுக்குத் திருமகளும் உறுதுணையாளள்.

வாழ்வும் தாழ்வும் நிலையல்ல வாதலின், போஸ் குடும்பத்தையும் வறுமைப்பிணி ஒரு சமயம் வாட்டிற்று. அதற்கு இலக்கானவர் ஜானகி நாத் என்பார்தான். இளமையில் வறுமை கண்டாலும், தன்னிடமுள்ள மதி நுட்பமும் சுற்றுச் சார்பும் இவரது கல்வி முன்னேற்றத்துக்கு உதவி செய்தன. உயர்தரக் கல்விக்குப் பெற்றோரது செல்வ நிலை இடந்தர வில்லை யாயினும், இவர் பாலமைந்த வசீகர சக்தி, பக்கத்திலுள்ள செல்வந்தர்கள்—கல்வி அதி

காரிகள் ஆகியோரது பார்வையைத் தன்பால் இழுத்தது. அதனால் பி. ஏ. பட்டதாரியுமானார்.

மைந்தனுக்கு மணம் முடித்து மகிழ் பெற்றோர்கள் ஆசைப் பட்டனர். கலாசாலைப் படிப்பு முடியு முன்னரே, கலியாணமும் நடைபெற்றது பிரபாவதி தேவியார் வாழ்க்கைத் துணைவியானார் ஒத்த கல்வி—ஒத்த அறிவு—ஒத்த உடல்—ஒத்த பண்பு படைத்த மண மக்கள் இருவரும், இல்லறத் தோணியில் இன்பம் துய்க்கத் தொடங்கினர். குடும்பச்சுமை நாளுக்கு நாள் அதிகரிக்கவே, தோணியைச் சரிவரச் செலுத்த இயலவில்லை. அச் சுமையை எளிதாக்கக் கருதிய ஜானகிநாதர் சட்டக் கல்லூரியில் நுழைந்தார் குடும்பத்துடன் கல்கத்தா சென்று, சட்டம் பயின்று பட்டமும் பெற்றார் சட்ட வாதத் தொழிலுக்குக் கட்டாக் நகரம் சிறப்புத் தருமெனக் கருதி, அங்குச் சென்று வக்கீல் தொழிலை மேற்கொண்டார்.

ஆண்டுகள் சில சென்றன. சட்ட நிபுணத்துவமும் நிகரற்ற சொல்வன்மையும் இவரிடம் தனிச் சிறப்புக் கொண்டிருப்பதைக் கண்டனர் மக்கள் முதல் தர வழக்கறிஞரென்ற புகழ் இவரைத் தேடி வந்து சரணடைந்தது. பின்னர் கேட்கவும் வேண்டுமோ? வறுமை கருகி மடிய, செல்வம் பெருகி வளர்ந்தது. வங்க அரசாங்கமும் இவரை சர்க்கார் வக்கீலாக நியமித்தது. சர்க்கார் அளிக்கும் கௌரவம் அவ்வளவாகத் திருப்தி தரவில்லை. நகர சபை—ஜில்லா போர்டு—வக்கீல்கள் சங்கம் ஆகிய நிலையங்களில் சேவை செய்ய விழைந்தார் அவைகளும், அன்னாரின் தலைமைக்கு இடமளித்து ஊழியம் புரிந்தன. வங்கச் சட்ட சபையும் ஆசனமளித்துப் புகழ்ந்தது. பல வருடங்கள் தொண்டாற்றி இன்பம் துய்த்து வரும்

போதே, காங்கிரஸ் மகா சபையின் காந்த சக்தி இவர் மனதைக் கவர்ந்தது. அதில் ஈடுபட்டுழைக்க முன் வந்தார். சுதேசி இயக்கத்துக்கு ஆக்கம் தந்த சிற்பிகளில் இவரும் ஒருவரென்பதைச் சரித்திரம் தெளிவு படுத்துகிறது. இவ்வாறு பணமும் பயனும் பெற்று இன்பசாகரத்தில் களித்து விளையாடும் ஜானகிநாத-பிரபாவதி தம்பதிகள் பதினான்கு மக்களை ஈன்றெடுத்தனர். அந்த எட்டு ஆண் - ஆறு பெண் குழந்தைகளும் அத் தம்பதிகளை அழகு செய்தனர் அவர்களுள் ஒருவர் தான் நம் சுபாஷ் சந்திரபோஸ்.

௩. இளமையும் எழிலும்

செல்வம் கொழிக்கும் கொடாலி இல்லத்திலே 1897 ஜனவரி 23-ம் நாள் பிரபவாவதி தேவியார் சுபாஷ் சந்திரனை ஈன்றார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக் கொண்ட வளர்ச்சி, வளர்ப்பு முறையை விரித்துரைத்தல் மிகையே யாகும் மாசற்ற மழலைப் பருவம் தவழ்ந்து செல்ல வயது ஐந்து மகிழ்ந்து வந்தது. 1902-ம் ஆண்டில் கட்டாக் நகரிலுள்ள **பிராட்டஸ்டண்ட் ஐரோப்பிய பள்ளியில்** கல்வி பயிற்சி ஆரம்பம். கலைமகள் அருட்கரத்தால் அணைத்தாள். ஒழுக்கம்—உயர் குணம்—நிறைமதி யாவும் எதிர் வந்து தழுவி முத்தமிட்டன. விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா? சுபாஷின் எதிர்காலம் இளமையிலேயே பிரதிபலித்தது. கண்டவர் மனமெல்லாம் கொள்ளை கொண்டான் சிறுவன் சுபாஷ்.

இப்பள்ளியில் ஏழாண்டுகள் பயின்றதும் **ரேவன்ஷா கொலிஜியேட் கலாசாலை** வாழ்க்கை ஆரம்பம். அங்கு

நன்றி உணரும் தன்மை — அலசி ஆராயும் அறிவு — எடுத்த காரியம் வெற்றி காணும் பேராற்றல் ஆகிய நலன்கள் கிடைத்தன. வழிவழி வந்த இயற்கைக் குணங்களுடன் இச்செயற்கை நலன்கள் கொஞ்சிக் குலாவின. வயது பதினாறு நிரம்பும்போது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேர்ச்சி பெற்றான் மாகாணத்தில் 2-வது மாணவனாக. மெட்ரிகுலேஷன் பரீட்சை யென்றால், அதில் தேறுவ தென்பது எவ்வளவு சிரமமென்பதை மாணவ உலகம் நன்கு அறியும், ஆசிரியரும் அறிவர் அதிலும் மாகாணத் திலேயே 2-வது மாணவனாகத் தேறுவதென்றால், அம் மாணவனின் திறமையைக் கூறவும் வேண்டுமா ?

ஹைஸ்கூல் படிப்பு முடிந்ததும், சர்வ கலாசாலைப் படிப்புக்காக கல்கத்தா சர்வ கலாசாலையில் நுழைந்தான் இண்டர்மீடியட் முதல் வகுப்புப் பயிற்சி முடிந்தது அந்தப் பரீட்சையிலும் 2-வது மாணவனாகத் தேர்ச்சி பெற்றான். இண்டர் 1-வது ஆண்டு தொடங்கிறது சுபாஷ் மனதில் ஓர் புதிய உணர்ச்சி — புதிய ஆர்வம் முளைத்தது. அதனால் பள்ளிப் படிப்பு அவ்வளவாக சுபாஷை அள்ளிப் பிடிக்கவில்லை. சர்வ கலாசாலைக் கட் டிடச் சுவர்களுக்குள்ளே கட்டுண்டு கிடக்க மனமொப்ப வில்லை. சமய நூல்களும், தத்துவ நூல்களும் இவன் கரங்களை அழகு செய்தன. வெளியுலகைக் கண்டு களிக்க, மனம் துள்ளி யெழுந்தது. பகவான் இராம கிருஷ்ண பரம ஹம்சரின் அருள் மொழிகளிலே கவனம் சென்றது. கர்ம யோகி விவேகானந்தரின் சொற்பொழிவுச் சாகரத் திலே களித்து விளையாட விரும்பினான். திரிசங்கு சுவர்க்கத்திலே இண்டர் மீடியட் படிப்பு ஊசலாடத் தொடங்கிறது.

ஞான மார்க்கத்திலே மனோரதம் செல்லவே, வீட்டையும், கலாசாலையையும் துறந்தான், 'குருவில்லா வித்தை குப்பைக்கு நேர்' எனும் உண்மை உருவாயிற்று ஞானாசிரியனைத் தேடிப் பிடிக்கப் புண்ணிய யாத்திரை செல்லலானான். கரடு முரடான காடெல்லாம் தவிடு பொடியாயின. வழியே, எண்ணற்ற சன்னியாசிகள் — யோகிகள் குறுக்கிட்டனர் அவர்களோடு அளவளாவினான் அவர்கள் உள்ளத்திலே உண்மையொளி கொண்ட ஞானாசிரியத் தன்மை இடம் பெற்றிருக்கிறதா வென்பதைத் துருவித் துருவி ஆராய்ந்தான். பலனில்லாது போயிற்று. ஆத்ம ஞானம் அருளுகின்ற ஞானாசிரியனைக் கண்டு பிடிக்கும் முயற்சி, வெற்றி தரவில்லை, போலித் தன்மையும் புறவேடமும் கபட நாடகமும் தான் காட்சியளித்தன. கஞ்சாவைப் புகைத்துக் கடவுளைக் காண விழையும் கயவர்களின் மயக்க வெறியைக் கண்டு மனம் கலங்கினான் மாணாக்கன் சுபாஷ்.

கலங்கிய மனத்திலே ஆத்திரம் பொங்கிற்று, வெறுப்பு உருப்பெற்றது அந்த அதிர்ச்சியால் உடல் மெலிந்தது. உரிய காலத்தில் உணவின்மையாலும், ஒவ்வாத உணவுகளாலும், காலநிலை மாற்றத்தாலும், பித்த வாத நோய் உடலைப் பற்றிக்கொண்டது வீட்டை நினைத்தான். அன்னையின் அன்பும், தந்தையின் சிந்தையும் மனக் கண் முன் தோன்றின, கால்கள் விரைந்தன கன்றினைப் பிரிந்த பசுவென ஏங்கியிருந்த ஜானகி நாதரும், பிரபாவதி அம்மையாரும் மைந்தனை அன்புக் கரங்களால் அணைத்து ஆனந்தமடைந்தனர் நோய்க்கு மருத்துவம் செய்தனர். ஒரு சில தினங்களில் நோய் தீர்ந்து உடல் நலம் பெற்றது ஆயினும் மன நோய் தீரவில்லை. அம்மன நோய் தீர

வேண்டுமானால், விவேகானந்தருக்குக் கிடைத்த ஞானாசிரியர் போல் ஓர் வைத்தியரல்லவா கிடைக்க வேண்டும்? இந்தக் குறைபாடு மட்டும் தவிர்க்கப் பட்டிருக்குமானால், இன்று **நேதாஜி போஸாக** விளங்க முடியாது, மற்றொரு **விவேகானந்த போஸாகத்**தான் பார்க்க முடியும். ஆகவே, கற்பகத்தை அடைந்தவன் காஞ்சிரங்காய் பெற்றது போல், மனம் நொந்து எதிர் காலத்தைச் சிந்திக்கலானான் சுபாஷ். கலாசாலைப் படிப்பை மீண்டும் தொடருவதே நலமெனத் தோன்றிற்று. திரிசங்கு சுவர்க்கத்திலே நிறுத்திய இண்டர் 2-வது வகுப்பில் நுழைந்தான். 1915-ல் தேர்ச்சி பெற்றதும் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் புகுந்தான்.

மனிதப் பிராயமான 19 வயது தொடங்கி விட்டதால் இனிமேல் நாம் சுபாஷ் சந்திரன் என்று அழைப்பது முறையல்ல, சுபாஷ் சந்திரர் என்றுதான் அழைக்க வேண்டும்.

௪. முதலாவது சோதனைக்காலம்

பி. ஏ, ஆனர்ஸ் வகுப்பு நடந்து கொண்டிருக்கிறது. செவி வாயாக — நெஞ்சு களனாக மாணாக்கர்கள் பாடம் கேட்கின்றனர். அவர்களது கிணற்றுத் தவளை வாழ்க்கை கண்டு சுபாஷ் சந்திரருக்கு இரக்கம் பிறக்கிறது. கலாசாலை அட்டவணைக் குட்படாத பத்திரிகை அறிவையும், அரசியலாராய்ச்சியையும், சமய நூற் பயிற்சியையும் அவர்களிடையே பரப்ப முனைகிறார். இவரது நுண்மதி கண்டு சகோதர மாணாக்கர்கள் மதிப்புத் தருகின்றனர். மாணாக்கர் தலைவராகவும் இவரை ஏற்றுக் கொள்ளுகின்

றனா. இந நிலைமையில சோதனைக காலம வலிநது வரு கிறது

கலாசாலைக கட்டிடத்துககுளளே பேராசிரியா சி. எப. ஓட்டன பாடம சொலலுகிறா. கேட்கினற மாணவ காகளில இநதிய இளைஞாகளதான அதிகம. அபபேரா சிரியா வாயினினறும தகாத வாாததை பிறககிறது. இநதி யரைப பழிததது இழிவு செயகிறது அவ வாாததை, இநதிய மாணவகா நெஞசிலே அச சொலலமபு தைககவே, நெஞசம குமுறிறறு, இரததம கொதிததது, கணகள சிவநதன, நெறறிகள சுருககிட்டன, கோபககனல கொழுநதுவிட்டது, கைகள துடிதுடிததன சுபாஷைத தலைமையாகக கொணட மாணவகா கூட்டம, மிஸடா ஓட்டனுககு எசசரிககை விடுததது அநத எசசரிககை யைத துசசமாகத தளளினன மிஸடா ஓட்டன. ஆஙகி லேயன எனற இறுமாபபு அவனை ஆட்கொணடிருநத தால, மாணவகா மாணபுககு மரியாதை செயய அவனால இயலவிலலை மாணவகாகளோ, அநத இறுமாபபை ஒழித துககட்டுவதென உறுதி கொணடனா. உணாசசி மிகுநத கிளாசசி வலுததது. குழபபத்தின மேல குழபபம, கலகத்தின மேல கலகம. மாணவகா போா உசசநிலை யடைநதது. இறுதியாக, கலாசாலையைவிட்டு வெளியேறு வதே நலமென மாணவகாகள தீாமானிததனா. கட்டுப பாடாக வெளியேறறமும நடநதது.

நாட்கள சில சென்றன திருமபவும கலாசாலைககுள நுழைநதனா. ஒரு நாள, சரியான காரணமினறி - சட்ட விரோதமாக - அதே ஓட்டன ஒரு மாணவகனை அடிதது விட்டான. நொநத புணணில வேல பாயநததுபோல இச செயல மாணவகாகளுககு வேதனை தநதது ஆததிரம

பெருக்கெடுக்க, ஓட்டனை வஞ்சம் தீர்த்தனர் "பழிக்குப் பழி" என்னும் இலட்சியம்கொண்ட அம் மாணாக்கர்களின் நடத்தை, கலாசாலை அதிகாரிகளுக்கு மனக் கொதிப்பை உண்டாக்கிற்று அதிகார ஆணவம் சுதி போட்டத் தொடங்கிற்று நீண்ட ஆலோசனைக்குப் பின், இத்தனைக் கிளர்ச்சிக்கும் காரணம் சுபாஷ்தான் என்ற முடிவுக்கு வந்தனர் அதிகாரிகள். மானம் பெரிதென் றெண்ணும் சுபாஷை மாணாக்கர்களின் மத்தியில் மன்னிப்புக் கேட்க வைத்து, மானபங்கம் செய்வதன்மூலம் தண்டனை யளிக்கக் கங்கணம் கட்டினர்

அதிகாரிகளின் முன்னிலையில் சுபாஷ் நிற்கின்றார் 'இதுவரை நடந்த கலகங்களுக்குத் தானே பொறுப்பாளி யென்றும் - அத் தவறுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டு மென்றும்' உத்தரவு பிறந்தது. மறுத்தால் கலாசாலையில் அனுமதி கிடையாதென்றும் கூறப்பட்டது. உணர்ச்சியால் தூண்டப்பட்ட சுபாஷ், அதிகாரிகளை நோக்கி "குற்றமிழைப்பவன் ஆங்கிலேய ஓட்டன், மன்னிப்புக் கோருவது வங்கத்து இளைஞனா? நன்று - நன்று! நன்றாக இருக்கிறது ஆங்கிலேயன் நீதி! பள்ளிப்பிள்ளை என்றால் கிள்ளிக் கீரையெனக் கருதினீர்கள் போலும்! மறநெறியை எதிர்த்து, மரணத்தையும் மறந்து போரிட்டு வெற்றிமாலை சூடிய பிரகலாதனும் ஓர் மாணாக்கன்தான் - மறந்துவிடாதீர்கள் நீதிக்குப் பணிவது நேர்மை, அநீதிக்குப் பணிவதென்பது எம்போன்ற இளைஞர் அகராதியில் கிடையாது. என் எதிர்கால வாழ்க்கை இக் கலாசாலைக் கல்வியில் அடங்கி யிருக்கிறதென்பதை அறிவேன். அதற்காக, மானத்தை விற்று மன்னிப்புக் கேட்கத் துணிய மாட்டேன். மறந்துவிடுங்கள் - மன்னிப்புக் கட்டளையை!" எனக் கர்ஜித்தார், எண்ணிய எண்ணம் மண்ணானதுகண்ட

அதிகாரிகள் வெகுசினம் கொண்டனர். வணங்காமுடி சுபாஷும் அவரது தோழர்களும் வெளியேற்றப்பட்டனர்.

இரண்டு ஆண்டுகள் உருண்டோடின. கலாசாலைப் படிப்பை எப்படியும் பூர்த்திசெய்ய வேண்டுமெனும் ஆசை பிறந்தது. குற்றம் சுமத்தப்பெற்று வெளியேற்றப்பட்ட எந்த மாணவனுக்கும் எந்தக் கல்லூரியும் இடமளிக்காதல்லவா? ஆதலால், சுபாஷின் ஆசை பகற்கனவுதான் எனப் பலரும் கருதினர். சுபாஷுக்குக் கவலை பெருகிற்று. கடைசியாக சிறப்பும் செல்வாக்குமிக்க ஸர். அஷுதோஷ் முகர்ஜி என்ற பெருந்தகையாளரின் அரிய முயற்சியால் நல்லகாலம் பிறந்தது. 1917-ல் சர்ச் கல்லூரியில் சேர்ந்து கல்விப் பயிற்சியைத் தொடங்கினார். சிறப்புப்பாடமாகக் கொண்ட தத்துவ நூலில் முதன்மையாகத் தேறினார். இப்பொழுது சுபாஷ்சந்திரபோஸ், பி. ஏ. (ஆனர்ஸ்) வெறும் பி. ஏ. பட்டதாரி மட்டுமல்ல, இக் கலாசாலையிலேயே இராணுவக் காலாட்படைப் பயிற்சியிலும் தேர்ச்சி பெற்றார்.

வயதும் 22 நிரம்பவே, உயர்தரப் படிப்புக்காக 1919ல் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தனர் பெற்றோர். ஐ. சி. எஸ். வகுப்பில் சேர்ந்து படித்து, அதிலும் 4-வது மாணாக்கராகத் தேர்ச்சியடைந்தார். அத்துடன் கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் சேர்ந்து உளநூல் பயின்று, அதிலும் பட்டதாரியானார். 'மெட்ரிகுலேஷனில் 2-வது மாணாக்கன் - இண்டர் முதல் வகுப்பில் 2-வது மாணாக்கன் - பி. ஏ. (ஆனர்ஸ்) வகுப்பில் முதல் மாணாக்கன் - ஐ. சி. எஸ். வகுப்பில் 4-வது மாணாக்கன்' என்றால், அவர் திறமையைச் சொல்லவும் வேண்டுமோ? எத்தனையோ மலை

போன்ற இடையூறுகளையும் தாண்டி இப்படித் தேர்ச்சி பெறுவதென்றால், மாணாக்கர் உலகத்துக்கே ஓர் புதிதானது. போதாக் குறைக்கு இராணுவக் காலாட்படைப் பயிற்சி - உளநூல் - தத்துவ நூல் இந்தியப் பட்டதாரி மட்டு மல்ல, கேம்பிரிட்ஜ் பி. ஏ. பட்டதாரியுங்கூட இத்தனைத் திறமை தனக்கிருப்பதை அறியும் எந்த மாணாக்கர்தான் தன்னம்பிக்கை கொள்ளாதிருக்க இயலும்? அதைப் போலவே சுபாஷ் சந்திரரின் பெற்றோரும் மைந்தனின் கல்வித்திறமை கண்டு உள்ளம் பூரித்தனர், எதிர்காலம் பற்றி பற்பலவாறு சிந்தித்தனர் சுபாஷ் சந்திரபோஸ், ஐ ஸி எஸ் எனும் பட்டமுடி தரித்து, இந்திய அரசாங் கத்தின் அதிகார பீடத்தில் அமர்ந்து, ஆணை செலுத்தும் நன்னாளை எதிர்பார்த்தனர் மனித வாழ்வில் தலைமை யின்பம் தருகின்ற பள்ளி வாழ்க்கையை முடித்துவிட்டுத் தாயநாடு திரும்பினார். 1921-ம் ஆண்டுத் தொடக்கத்தில் கலையின் சிகரம் ஏறிய கப்பல் பம்பாயத் துறைமுகத்தை வந்தடைந்தது

௫. இருளடர்ந்த இரு ஆண்டுகள்

சுபாஷ் சந்திரர் இங்கிலாந்தில் கல்வி பயின்ற காலமாகிய 1919—1920 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் இந்தியா வில் நடைபெற்ற பயங்கர விளைவுகள் அவரது மனத்தைக் கலக்கின. கல்வியில் ஒரு கண்ணும் தாய் நாட்டில் ஒரு கண்ணுமாக அவ்விரண்டு ஆண்டுகளையும் கடந்தார்

1914 ஆகஸ்ட் 4-ம் தேதி தொடங்கப்பெற்ற முதல் உலக மகா யுத்தம் முடிவடைந்ததும், பிரிட்டிஷார் இந்தி யாவுக்கு ஓரளவு சுதந்திரம் அளிப்பரென இந்தியர்கள்

நமபி இருநதனா. பிரிடடிஷ வெறறிககாக பெருமபண மும சோதது கொடுததுதவிய மகாதமா காநதிஜியும பிரிடடிஷாா வாாததைகளில பூரண நமபிககை கொண டிருநதாா. அநத நமபிககைகளெலலாம பகற கனவாகவே முடிநதன அடிமைச சஙகிலி மேலும கழுததை நெரிககத் தொடஙகிறறு ஆடவரும பெணடிரும ஆடுககுடடி களைக கருதபபடடனா, அருமைச சிறுரெலலாம எருமைக கனறுகளென எணணபபடடனா

'**பிரிடடிஷ வெறறியின பினனா இநதியாவுககு சுய அரசியல உரிமை**' எனற தமபடடம ஆடிக காறறில பறநதுவிடடது பதிலாக "மாணடேகு செமஸபோாடு சீாதிருததம" எனற மூசசு விடவும இடநதராத முரடடு அடிமைச சஙகிலி யொனறு புதிதாகப பிணைககப பெறறது. இநதக கபடநாடகததை யாரேனும எதிாததால, அதனை அடககி யொடுககி ஆணமை கொளள "**ரௌலட சட்டம**" எனனொரு வாளும முளைததது. இநதியாகளின ஒருமுக மான எதிாபபுகளுககிடையே அமுலுககு வநத இநத ரௌலட சடடம, தலைவிரிகோலமாயத தாணடவமாடிய கூறறை இநதியா யாரேனும மறகக முடியுமா? மனனிகக முடியுமா?

1919 ஏபரில 6-ம நாள பஞசாபிலே பூரண ஹாத தால. அநத ஹாததாலை நடததியவாகள அமிாதசரஸ தலைவாகளான டாகடா கிசசுலும டாகடா சததியபாலு மாவா. அவவிருவா மீதும குறறம சுமததி நாடுகடதத வும செயதது சாககாா பாாததனா பாஞசால மககள; பரபரபபடைநதனா. பஞசாபின உணமை நிலையைக கணடறிய விரைநது வநதாா மகாத்மாஜி எனன நினைதது ததோ அரசாங்கம — காநதிஜியையும கைது செயதது

பம்பாய்க்குக் கொண்டு சென்றது. இச் செய்தி காற்றினும் கடிது பாய்ந்தது. பஞ்சாப் சந்து பொந்துகளுக்கெல்லாம். ஏற்கனவே பரபரப்படைந்துள்ள பஞ்சாப், இச் செய்தி கேட்டு பதைபதைத்துத் துடித்தது. உள்ளக் கொதிப்படைந்த மக்களின் கிளர்ச்சிக் கூட்டங்கள்; ஆவேச உணர்ச்சியின் வீரகர்ஜனை, ஆகியன எழுந்தன. அமிர்தசரஸிலும் லாகூரிலும் அமர்க்களம்.

அமிர்தசரஸில் **"ஜாலியன் வாலா பாக்"** என்னும் தோட்டத்திலே 1919 ஏப்ரில் 13-ம் நாள் ரௌலட் சட்டக் கண்டனக்கூட்டம், எள்விழ இடமில்லை. ஆண்-பெண், கிழவன்-குமரன், பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகள் அனைவரும் அலைகடலெனக் காட்சி தந்தனர். அங்கு திடீரெனப் பாய்ந்தான் — அடங்காப்பிடாரி — அட்டூழிய நிட்டூரன்-பைசாசப் பாதகன் —**ஜெனரல் டயர்** கண்ணீர் விட்டுக் கதறக்கதறச்சுட்டு வீழ்த்தினான் கைத் துப்பாக்கியால். இரத்தம் பெருக்கெடுத்து ஓடிற்று. மனம் புகைந்த மக்களெல்லாம் பிணக் குவியலாயினர். இரத்தப் பெருக்கையும் பிணக்குவியலையும் கண்டு மகிழ்ந்தான், காலன் டயர். அப்பிணக் குவியல்மீது குதிரைச் சவாரி செய்து நடனமும் செய்தான். இறுமாப்பு தலைக்கேறி "சுட்டேன் சுட்டேன்-குண்டு தீரும் வரைச்சுட்டேன்" என்று கும்மாளம்போட்டான். அவனைத்தட்டிக் கொடுத்துத் தாளம் போட்டான் கவர்னர் மைக்கேல் ஓட்வியர்.

மக்கள் மனங் கொதித்தனர், எரிமலைபோன்ற உணர்ச்சி கொதித்தெழுந்தது. இந் நேரத்தில், நீதிக்காகவே தன்னைக் கடவுள் நியமித்திருப்பதாகக் கொக்கரிக்கும் பிரிட்டிஷ் அரசாங்கம், படுகொலை செய்த பழிகாரன் டயருக்கு வைரம் பதித்த வீரவாளும் 18,000

பவுனும் பரிசளித்தது, கொலைக்காரக் கவர்னர் ஓட்வியருக்கு-பதவிக்காலத்தை நீட்டிக்கொடுத்தது என்ன திமிர்! என்ன ஆணவம்! வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் அரசாங்கத்தின் செயல், ஏற்கனவே கனன்று கொண்டிருந்த அனலுக்கு நெய்வார்த்த கதையாயிற்று பிரிட்டிஷார் மீது இந்தியர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் அன்பும் வெறுப்புக் கனலாக மாற்றமடைந்தன

1919 டிசம்பரில் 34-வது காங்கிரஸ் மகாசபை அமிர்தசரஸில் நடைபெற்றது. முடிசூடா மன்னர் பண்டித மோதிலால் நேரு தலைமை, பக்கத்தில் கருணைக் கடல் காந்திஜி. "இந்தியாவின் குறைபாடுகளைத் தவிர்த்து உரிமைகளை நிலைநிறுத்த, பிரிட்டிஷ் பிடிப்பிலிருந்து அறுத்துக் கொள்வதே சிறந்த வழி" என்ற ஆலோசனை பிறந்தது நாள்தோறும் இந்த யோசனை உரம் பெற்று வளரவும் தொடங்கிற்று. அடுத்த ஆண்டு டிசம்பரும் நெருங்கிற்று.

நாகபுரியில் தமிழ் நாட்டுக் கேசரி — சேலம் விஜயராகவாச்சாரியார் தலைமையில் 35-வது காங்கிரஸ் மகாசபைக்கூட்டம் சைத்தான் ஆட்சிக்குப் பாசக்கயிறு வீச, தேசமக்கள் அனைவரும் ஒருமனப்பட்டனர் மானசிகச் சிற்பியான காந்தியடிகள் "ஒத்துழையாமை" என்ற ஆயுதத்தைக் கொடுத்தருளினார் மனமுவந்து ஏற்றுக் கொண்டது மகாசபையும் சாக்கார் அணிவித்து அழகு பார்த்த ஆசைப்பட்டங்களெல்லாம் கட்டவிழ்ந்தன. உலகக் கவிஞர் இரவீந்திரநாததாகூரின் "ஸர்" பட்டம் வைசிராயின் காலடியில் அபயம் கேட்டது வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினர் ஸர். சங்கரன் நாயர் தன்னைக் கட்டியணைத்தப் பதவிப் பேயை வெருட்டியடித்தார். ஜாலியன்

வாலா மிலேச்சத்தனத்தைக் கண்டித்து அவர்கள் விடுத்த செய்தி சரித்திரப் பிரசித்தி பெற்றது. இவர்களைத் தொடர்ந்து பல அறிஞர்கள் தத்தம் பட்டம் பதவிகளையெல்லாம் சுட்டெரித்தனர் கல்லூரி வாழ்க்கையைக் காலால் உதைத்தனர் காளையர், சட்டவாதத் தொழிலை விட்டொழித்தனர் வழக்கறிஞர்கள். சட்ட நிபுணர் பண்டித மோதிலால் நேருவும், திங்களொன்றுக்கு ரூபாய் 25,000 வரை தனது இரும்புப் பெட்டியை நிரப்பி வந்த தேசபந்து சித்தரஞ்சன தாஸும் தங்கள் தங்கள் வக்கீல் தொழிலை உதறித்தள்ளினர் குடிசைகளில் இராட்டினம் கீதம் பாடத் தொடங்கிற்று, கதர்த்திட்டம் காட்சி தந்தது, மது விலக்கு மாண்பு கொண்டது சட்டசபைப் பகிஷ்காரம் திடம் பெற்றது. ஒத்துழையாமையும் சட்டமறுப்பும் ஆயுதங்களாயின கத்தியின்றி இரத்தமின்றி சத்தியாக்ரகப்போர் தவழத் தொடங்கிற்று. சுருங்கக்கூறின், காங்கிரஸின் புதிய வாழ்க்கை காந்தியடிகளால் ஆரம்பமாயிற்று. தலைவர்கள் வழிகாட்டினர், மக்கள் வேள்வித் தீயில் குதிக்க முன் வந்தனர் தேசபந்துவின் வாழ்க்கைத் துணைவி வசந்தா தேவியார் "இந்தப் போர் முனையில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் வீறுகொண்டு பணியாற்றவேண்டும்" என்று விடுத்த அறிக்கை ஊக்கம் தந்தது

சுதந்திரத் தாகமும் தியாக உணர்ச்சியும் உச்சநிலையடைவதைக்கண்ட அரசாங்கம், முளையிலேயே கிள்ளிவிட, கச்சையை வரிந்து கட்டிற்று 144 தடையுத்தரவும் அதுபோன்ற பிறபல ஆயுதங்களும் கையாளப் பட்டன தலைவர்கள் சிறைவைக்கப்பட்டனர் இவ்வாறு இந்திய அரசியல் வானம் கொந்தளிப் படைந்தது.

இந்நிகழ்ச்சிகளெல்லாம் இங்கிலாந்தில் கல்வி பயின்று கொண்டிருக்கும் சுபாஷ் சந்திரர் காதுகளில் புகுந்தன. உள்ளத்திலே உணர்ச்சி பொங்கிற்று. தாய் நாட்டுக்கு நேர்ந்த அவமானத்தையும் கொடுமையையும் சகித்துக் கொண்டிருக்க, போர்க்குணம் படைத்த சுபாஷ் சந்திரரால் எப்படி முடியும்? கவிதாகூர், ஸர் சங்கரன் நாயர், பண்டித மோதிலால், தேசபந்து தாஸ் ஆகியோரின் பட்டத் துறவுகள் அவர் மனக்கண் முன் தோன்றின. அடிமை நாட்டில் அரசு செலுத்துவதைவிட, சுதந்திரம் விரும்பும் தொண்டனாக வாழ்வதே மேலெனக் கருதினார்; அரும் பாடுபட்டுப் பெற்ற ஐ. ஸி. எஸ். பட்டத்தின் தன்மையை ஆராய்ந்தார். அநீதி செய்யும் ஆங்கிலேய ஆதிக்கத்தின் நிரந்தர — அந்தரங்க அடிமைப் பட்டயந் தான் ஐ. ஸி. எஸ். பட்டம் என்ற உண்மை புலனாயிற்று. பிற நாடுகளைப் போல் இந்தியாவும் சுதந்திர நாடாகும் வரை சர்க்கார் உத்தியோகம் பார்ப்பதில்லை யென்று விரதங்கொண்டார். ஐ. ஸி. எஸ். வாலை அங்கேயே வெட்டி வீழ்த்திவிட்டு இந்தியா திரும்பினார். அன்று இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகுத் துரை, படித்த வித்தையெல்லாம் செய்து சுபாஷைத் தடுக்க முயன்று பார்த்தும், கடைசியில் தோல்வியைத் தான் கண்டார். காந்தியடிகளின் காந்தசக்தி கோயில் கொண்டபின் இந்தியா மந்திரியின் தந்திர வித்தைகளுக்கு இடமேது?

௪ பேராசிரியர் தளபதியானார்

இருள் சூழ்ந்த அரசியல் வானில் அருட்சூரியன்-காந்திஜி உதயமாகி வழிகாட்டும் நேரம், பம்பாயத் துறைமுகத்தில் சுபாஷ் சந்திரர் காலடி வைத்தார். சுதந்திர

இரத்தம் துள்ளியோடும் சுபாஷ்சந்திரர், கரன் சந்திரரைக் கண்டு பணியக் கடிது சென்றார். தலை வணங்கி, சுய சரிதம் சொல்லி, தியாக சிந்தையைத் திறந்து காட்டினார். மனங் குளிர்ந்த மகாத்மாஜி, அன்புச் சங்கிலியால் அணைத்து ஆத்ம சக்தியை அவர் உள்ளத்தில் பாய்ச்சினார். "தன்னிகரில்லா இளைஞ! சென்று தேசபந்துவிடம் ஒன்றுக!" எனப் பணித்தார். இந்தியத் தந்தையிட்ட பணியைச் சிரமேற் கொண்டு, தேசபந்துவிடம் சென்றடைந்தார் சுபாஷ். தேடிவந்த செந்தாமரையின் இயற்கையெழிலும், குணமும் மணமும், உள்ளுறைந்த தாதுவின் சக்தியும் கண்டு, களிப்பெய்தினார் தேசபந்து. தபக்க மின்றித் தடதட வென்று, தகைந்த சங்கிலியைச் சிதைத்துப் பொடிக்கும் வகைபல உணர்த்தி, தனது வலக்கரமாக்கிக் கொண்டார். ஒத்துழையாமைப் போரில் சித்தம் கவிந்து சிறுமைக்கு இலக்காகிய கல்லூரி மாணாக்கர்களுக்கு, கலை நிழல் தந்து பெருமைசெய்யும் பொருட்டுத் தோற்றிய **வங்க தேசீயக் கல்லூரியின் பேராசிரியர்** (பிரின்ஸிபால்) பதவி ஈந்து, பணி செய்யும்வழியை சுபாஷுக்குக் காட்டினார் தேசபந்து.

1921 மே மாதம் முதல் பேராசிரியர் பொறுப்பை சுபாஷ் ஏற்றுக் கொண்டார். மாணாக்கர்களை, வருங்கால இந்தியாவின் மன்னர்களாக்கும் பணியைத் திறம்பெற நடத்தலானார். மாணாக்கர் மனத்தில் படர்ந்த மாசு, நீக்கம் பெற்றது. வீர சுதந்திர வேட்கை விதை, ஒவ்வொரு மாணாக்கர் உள்ளத்திலும் கிளர்ந்தெழுந்தது. மாணாக்கரும் ஆசிரியரும், உயிரும் உடலுமாயினர். வெறும் ஆசிரியராக மட்டுமல்ல — வாழ்நாளின் இலட்சிய புருடராகவும் வழிபட்டனர் மாணாக்கர்கள். ஒரு புறம் ஆசிரியர் வேலை, மறு

புறம சுதநதிர எழுசசி, இவை யிரண்டும செவவனே உரம பெறறன

கிளாநதெழுநத தேசபகதியைக கிளறி யெறிநது விடடு, அவவிடததில இராஜபகதியை நடடுவைகக, அனறிருநத அரசப பிரதிநிதி தீவிர முயறசி செயது வநதார அதில ஒனறு தான வேலஸ இளவரசரின (காதலை விருமபி மணிமுடி துறநத வின்டஸா கோமகன) இநதிய விஜயம 1921 நவமபர 17-ம நாள பமபாயத துறை முகததில இளவரசர வநதிறஙகும தினம இள வரசர வரவேறபைச சிறபபிகக, சிறையிருககும தேசபநது போனற தலைவர்களிடம சமரசம செயது கொளளும முயறசியில அதிகாரவாககம ஈடுபடடது. ஆனால, காநதிஜியோ ' அலி சகோதரர்களை விடுதலை செயய வேணடும, மாகாண சுயாடசிககு வாககளிகக வேண்டும; இனறேல சமரசததுககு இடமிலலை ' யெனக கூறிவிடடார ஆகவே, இளவரசர வரவேறபில, இநதியர யாரும கலநது கொளளலாகாதெனக காங்கிரஸ் கடடளையிடடது. பொது ஜனஙகளும கடடளையை ஏறறுககொணடனர, வரவேற பைப பகிஷகரிகக ஹாததால நடததினர.

இராணுவப பயிறசி பெறற பேராசிரியர போஸ், காஙகிரஸ் தொண்டர் படையின தளகர்த்தராக நியமனம பெறறார வஙகம முழுதும தளகாததா போஸின வீர காஜனை செவிடுபடடது. கேடடோரெலலாம போருககுக் கசசை கடடினர கரை புரண்டோடும உணர்சசிப பெரு வெளளததை அடககுமுறை எனற அணையால தடுத்து நிறுதத முனைநதது அரசாஙகம. ஆஙகில அதிகார பீடத் தில அமாநது அடிமை விலஙகுடன ஆணை செலுத்தி

ஏகாதிபத்தியத்தை அலங்கரிக்க வேண்டிய சுபாஷ், அந்த ஏகாதிபத்தியத்தையே வேருக்கும் இடமில்லாமல் வெட்டி வீழ்த்தும் பணியில் முற்பட்டிருப்பதைக் கண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், ஏமாற்றமும் திகிலும் அடைந்தது விட்டு வைத்தால் காரியம் கெட்டு விடுமெனக் கருதிய வங்கக் கவர்னர் லார்டு ரோனால்ட்ஷே, சுபாஷைக் கைது செய்யக் கட்டளையிட்டார். ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இதுதான், தேச ஊழியத்தின் சிறப்பால் முதன் முதலாக சுபாஷுக்குக் கிடைத்த முதற் பரிசு அடைப்பட்டு அல்லலுற்றும் அவரது வீர வாழ்க்கை நாள் தோறும் பண்பட்டு சிறப்படையத் தொடங்கிற்று.

தண்டனை முடிந்து சிறைக் கதவுகளினின்றும் சுபாஷ் வெளியே வந்தார் திடுக்கிடும் செய்தி யொன்று காதைத் துளைத்தது. "வடக்கு வங்காளத்திலே வெள்ளப்பெருக்கு; திடீரெனச் சினந்தெழுந்த இயற்கைத் தேவிக்கு எண்ணற்ற உயிர்கள் பலியாயின, புதைந்து போன பொருள்களுக்குக் கணக்கில்லை, எஞ்சிய மக்கள் மனையிழந்து-உணவின்றி - உடையின்றித் தவித்தனர். பஞ்சப் பேய் பவனி வந்து படுத்திய பாடு வருணனைக் கடங்காது; அத்தனைத் துயர்கள்" என்பது தான் அந்தச் செய்தி. மக்களுக்கு நேர்ந்த இத் துன்பங்களுக்கு நிவாரணம் தேட காங்கிரஸ் மகாசபை கங்கணம் கட்டிற்று. வங்கக் கமிட்டியின் நிவாரணப் பொறுப்பு நம் சுபாஷ் சந்திரரிடம் ஒப்படைக்கப்பட்டது. சுபாஷும் பொறுப்பேற்று, அல்லும் பகலும் ஊண் உறக்கமின்றி அலைந்து திரிந்து பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. பஞ்சப் பேயை வெற்றிகரமாகப் பறந்தோடச் செய்தார் சுபாஷ். இப் புனித

சேவையால உயிர்த்தெழுநதனா வஙக மககள. கரை கடநத அனபும மதிபபும சுபாஷை அலஙகரிததன. அனறு கவானராக இருநத லாரடு லிட்டன கூட நம போஸின திறமையை வியநது பாராட்டினா. மககளின அனபு உளளததால ஆககபபெறற "பாபு" எனும மண மாலை, சுபாஷ சநதிரரை அழகு செயதது.

எ. சித்தரஞ்சரும்—சுபாஷ்சந்திரரும்

அரசாங்கததின அடககுமுறை ஆணவததை அலட்சியம செயதது, காட்டுத தீபோல பரவிறறு காநதியடிகள கொளுததிய ஒததுழையாமைத தீ ஐககிய மாகாணததில புகுநது சௌரிசாராவிலும கொழுநது விட்டது அதனல அங்கு நடநத கலகமும உயிரச சேதமும நினைததால நெஞசைப பிளககும காநதியடிகளின கணகள கலஙகின. ஒததுழையாமைப போரை நிறுததி விடுவதே நலலதென ஆதம சகதி அவருககு உததர விட்டது அதறகு காங கிரஸும சமமதம அளிததது. போரும நிறுததபபட்டது.

சநதாபபததை எதிரபாராதிருநத வைசிராய லாரடு ரீடிங 1922 மாரச 10-ம தேதி காநதிஜியைக கைது செயய உத்தரவிட்டார். இராஜததுவேஷ வழககுத தொடரப பெறறு ஆறு வருடத தணடனைககுக காநதிஜி ஆளானா. அதனல ஒததுழையாமை உணாசசி தளாசசி யடைவது போல தோறற மளிததது தேசபநது சிததரஞசனதாஸ மனதிலே ஓா யோசனை தோனறிறறு. அடககுமுறைச சட்டங்களுககு முட்டுககட்டை போட்டாலதான சுதந திரப பயிரைச சிறகக வளாகக முடியுமெனக கருதினா. "சட்ட சபைககுளளே நுழைநது சுதநதிரப போா நடத்

தினால் நல்ல பலன் கிடைக்கலாம்" என்ற தேசபந்துவின் கருத்துக்கு பண்டித மோதிலால்நேரு-வித்தல்பாய்பட்டேல்-ஸ்ரீனிவாச அய்யங்கார்-பாபு சுபாஷ் சந்திரர் ஆகியோர் ஆதரவு தந்தனர். நாடு முற்றிலும் சட்டசபைப் பிரவேசப் பிரசாரம் ஆரம்பமாயிற்று.

1922 டிசம்பரில் கயா காங்கிரஸ் தேசபந்து தாஸ் தலைவர். அதில் சட்டசபைப் பிரவேசத் தீர்மானம் பலத்த எதிர்ப்பு காரணமாகத் தோல்வி யடைந்தது. ஆனால் 1923 செப்டம்பர் 23-ம் நாள் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தலைமையில் டில்லியில் நடைபெற்ற விசேடக் காங்கிரஸ், தீர்மானத்துக்கு ஆதரவு தந்தது. காந்திஜியும் மாறுதல் விரும்பாத தலைவர்களும் தேசபந்துவின் நோக்கத்துக்குச் சந்தர்ப்ப மளித்தனர். அதிலிருந்து "சுய ராஜ்யக் கட்சி" பிறந்தது. தேசபந்து தலைவராகவும், பண்டித மோதிலால் காரியதரிசியாகவும், பாபு சுபாஷ் விளம்பர அதிகாரியாகவும் கடனாற்ற முனைந்தனர்.

எட்டுத் திக்கும் முரசு கொட்டி, மக்களைத் தட்டி யெழுப்ப "பார்வர்டு" என்னும் பத்திரிகையைச் சிருஷ்டித்தனர். அதன் தலைமை ஆசிரியர் பாபு சுபாஷ். கேட்கவா வேண்டும்? ஆணித்தரமான பாபுவின் பேனா, கட்டுரைகளை வரைந்தது "பார்வர்டு" நாடெங்கும் பறந்து சென்று பறை சாற்றிற்று. உள்ளத் தெழுந்த சுதந்திரக் கனல் பாபுவின் வாய்வழியே குமுறி யெழுந்தது. தேர்தல் முழக்கம் சந்து பொந்துகளெல்லாம் எதிரொலித்தது. மக்கள் சுயராஜ்யக் கட்சியின் வசமாயினர். கல்கத்தா நகர சபை (கார்ப்பரேஷன்) சுயராஜ்யக் கட்சியினரால் கைப் பற்றப்பட்டது. தேசபந்து தாஸ்—தலைவர் (மேயர்), பாபு

சுபாஷ் நிர்வாக அதிகாரி (கமிஷனர்). சுயராஜ்யக் கட்சியினரின் ஊழியம் நகர மக்களின் மனத்தைக் கவர்ந்தது. தேசபந்துவுக்கும் பாபுவுக்கும் செல்வாக்கு உச்சநிலையடையத் தொடங்கிற்று.

சட்டசபைக் குறிச்சிகளும் இவர்களை வரவேற்று உபசரித்தன. இரட்டையாட்சி முறையைத் தகர்த்தெறிய மக்களும் பேராதரவு கொடுத்தனர். கைத்தூக்கும் பொம்மைகளை வைத்துக் கொண்டு, ஆனந்தக் கூத்தாடிக் கும்மாளம் போட்ட சர்க்கார் திகிலடைந்தது. தான் தோன்றிச் சட்டங்களுக்கெல்லாம் முட்டுக் கட்டை; அதிகார ஆணவத்துக் கெல்லாம் ஆப்பு. அரங்கிலே நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் அம்பலத்துக்கு வந்தன. திரும்பும் திசையெல்லாம் சுயராஜ்யக் கட்சியின் எதிர்ப்பு. இவைகளை எந்த அன்னிய அரசாங்கத்துக்குத் தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? வங்கக் கவர்னர் மூளையிலிருந்து ஓர் சட்டம் உதயமாகிறது. நீதி ஸ்தலத்தில் விசாரணை நடத்தும் வழக்கம் சுயராஜ்யக் கட்சியால் பலனில்லாது போகவே, விசாரணையில்லாமலே சிறையில் போடுவது என்பதே அச் சட்டம். அத்துடன் 1924 அக்டோபர் 24-ம் தேதி நடு நிசியில் வைஸ்ராய் விடுத்த (வங்கச் சட்டம்) அவசரச் சட்டமும் சேர்த்துக் கையாளப் பட்டது. 1924 அக்டோபர் 25-ம் தேதி அதிகாலையில் பெரும்பான்மைக் காங்கிரஸ் தலைவர்களும் சுயராஜ்யக் கட்சியினர் சிலரும் கைதியாயினர். நகர சபையிலும் சட்ட சபையிலும் சுயராஜ்யக் கட்சியினர் நுழைந்து ஆறு மாதங்கள் கூட செல்லவில்லை, சுபாஷ் பாபுவும் அந்தச் சட்டங்களுக்கு இலக்கானார்.

தோளொடு தோள் நின்ற துணைவர் சுபாஷ் கைதி யான செய்தி தேசபந்துவின் காதுக்கு எட்டிற்று. தேசபந்து தலைமையில் கல்கத்தா நகரசபைக் கூட்டம். அதில் "தாய் நாட்டின் மீது அன்பு கொள்வதும், அதர வற்றவர் மீது இரக்கம் காட்டுவதும், அன்னியர் பூட்டிய அடிமை விலங்கை உடைக்க விரும்புவதும், பொய்மைக் குச் சாவுமணி அடித்து உண்மையுரைப்பதும், விடுதலை விரும்பி வீரம் காட்டுவதும் குற்றமானால், நகர சபைக் கமிஷனர் போஸ் மட்டுமல்ல — மேயரான நானும் குற்ற வாளியேதான்" என்று முழக்கினார்.

பேச்சிலே — எழுத்திலே — நடத்தையிலே புரட்சித் தீயால் சுடரிடும் ஆற்றல் கொண்ட பாபுவை அக்டோபர் 25-ம் தேதி அதிகாலையில் படுக்கையிலிருந்து எழுப்பிக் கைது செய்த கல்கத்தா போலீஸ் கமிஷனர் அவரது மோட்டாரிலேயே ஏற்றி அலிப்பூர் சிறைக்குக் கொண்டு சென்றார். சர்க்காரின் விசேஷ உத்தரவு மீது கார்ப்பரேஷன் வேலைகளைச் சிறையிலிருந்தபடியே கவனித்து வந்தார். சில மாதங்கள் அலிப்பூர் சிறையிலும் பொகாம்பூர் சிறையிலுமாகச் சென்றன. என்ன நினைத் ததோ அரசாங்கம்? 'சிறைச் சுவர்களுக்குள்ளும் சுதந்திரக் கனலை சுபாஷ் மூட்டிவிடுவாரோ' என்று பயந்துதா னிருக்க வேண்டும் இந்தியாவை விட்டு வெளியேற்றி விடுவதெனத் தீர்மானித்தது. பாரத அன்னையின் தவப் புதல்வர் பலரது சிறை வாழ்க்கைக்கு இடமளித்துக் கீர்த்தி பெற்ற மாந்தலே சிறைக் கதவுகள் சுபாஷ் பாபு வையும் வரவேற்றன. இங்குதான், மகாராஷ்டிரத்தின் மாபெருந் தலைவர்—இந்தியாவின் இணையற்ற அருட்சோதி—

பால கஙகாதர திலகா, தாய நாடடுககுப பணி செயத குறறததுககாக முனபு தவங கிடநதார. இச சிறை அவருககு இடமளித திராவிடடால, திலகரின "கீதா ரகசியம்" எனனும ஒபபுயாவறற ஆராயசசி நூல நமககு எபபடிக கிடைததிருகக முடியும? உலகததது அறிஞரெலலாம உவநது போறறும இந நூலை திலகா பெருமான ஆககித தருவதறகு இடமளிதத மாநதலே சிறைக கோடடததை யாரால மறகக முடியும? அதே சிறைச சாலை சுபாஷ சநதிரருககும இடமளிதத தெனறால, அதனை உலகம உளளளவும இநதியாகளால மறகக முடியாதலலவா!

மறககமுடியாத அநத மாநதலே சிறைககோடடம நினைவுககு வரும போதெலலாம, மனககலககமும பின தொடரததான செயகிறது. திலகரது பொன மேனியை வாடடி வதைதத அதன பிறவிககுணததுககு மடடை வைததுககடட மருததுவனுககு எஙகேபோவது? பாபு விடடும அது சேடடை செயயத தொடஙகிறது நாறபது இராததல தசையைத தினறுவிடடது - அச சிறைச சாலை கவனமறற—காரசார மிலலாத—அரைகுறைப பககுவம கொணடதும கலலும மணணும கலநததுமான உணவு, பாபுவின குடலுககுத தொநதரவு தநதது இரததம வெநது நஞசாகியது, எலுமபு உருகிறது, உடல தளாநதது காலனும அஞசுகினற காச நோய பறறிககொணடது. பழிவாஙகும சூழிபடைதத அரசாஙகம விழியைக குருடாககிககொணடது. நோயால நொநது நைநதார சுபாஷ. துணைககு இநதியாவிலிருநது தனனுடனே அனுபபபபடட ஏழு கைதிகளும தஙகளாலான உதவி

யைச செயது வநதனா. இவாகளைபபாாவையிட, அடிக
கடி விசித்திர மனிதா பலா வருவதுணடு. அபபடி வநதவா
களுககுள ஒருவா பாடடாஸன எனபாா இஙகிலாநதி
லுளள சிறைக கமிஷனரான இவா தனது விசித்திர
வாழததைதக கூறினா. "இநதியாவிலுளள மிக மிக ஆபத
தான எட்டுப் போவழிகள இவாகள" எனபதுதான
அவரது வாழததது.

இநநேரததில, இநதியாவிலிருநது ஓா பேரதிாசசி
தரும செயதி 1925 ஜுன 16-ம நாள தனது அரசியல
போராசியா 'தேசபநது டாாஜிலிஙகில உலகு நீததாா' எனற
செயதி பாபுவுககு எட்டியதும, ஆயிரநதேள கொட்டி
யது போலாயிறறு. உடல நோயுடன மனககவலையும
பிணிககொணடது. 1927-ம ஆணடு பிறநததும பாயும
படுககையுமானா. பேசவும நடககவும சகதி யிழநதாா
உடல நிலை மோசமாகவே, ஓா வைததிய போாடினால
பரிசோதிககபபடுவதறகாக இரஙகூனுககு மாறறபபட
டாா சுபாஷ. பரிசோதனை செயத வைததிய போாடாா,
'சுபாஷை சிறையில வைததிருககக கூடாதெனச' சிபாாசு
செயதனா. அச சிபாாசுககேறப, சாககாா உததரவு
கிடைபபதுவரை இனஸீன சிறையில வைததனா. பின
னா நிபநதனையின மீது விடுதலை செய்வதாகக கூறினா.
அதனை சுபாஷ மறுககவே, ஐககிய மாகாணததிலுளள
அல்மோரா சிறைககு மாறறியிருபபதாக ஓா உததரவு
கிடைததது

மே மாதம ஒரு நாட் காலையில இரஙகூனை விட்டுக
கலகத்தா புறபபடவிருநத கபபலுககு சுபாஷ கொணடு
போகபபட்டாா. நானகாவது நாள—கபபல கலகததாவை

அணுகவில்லை, மற்றோர் வைத்திய போர்டாரின் பரிசோதனைக்காளானார் பின்னர் 1927 மே 17-ம் தேதி, கவர்னர் ஸர். ஸ்டான்லி ஜாக்ஸன் உத்தரவின் பேரில் விடுதலை யானார்.

அ. மத்தியிலே நிகழ்ந்தவை

மாந்தலேச் சிறையில் பாபு அல்லற்படுகிறார், இந்தியாவிலே 1926-ம் ஆண்டு பிற்பகுதியில் சட்டசபைகள் கலைக்கப்பட்டு நவம்பரில் புதுத்தேர்தல் வங்கச்சட்டசபைக்கு மக்களால் பாபு தேர்ந்தெடுக்கப்பெற்றார் காங்கிரஸ் பிரதிநிதியாக. மக்கள் மனதில் கோயில் கொண்டிருக்கும் சுபாஷ் பாபுவின் தேசாபிமானச் சோதியை, அடக்குமுறைச் சட்டங்களும் காவல் கட்டுப்பாடும் இரும்புக் கம்பிகளும் அணைத்துவிட இயலவில்லை. பர்மாவில் சிறை வைத்திருந்தும், வங்கச்சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்த மக்களின் வாக்குரிமை பலத்துக்கு, மரியாதை செய்ய சர்க்காருக்கு மனம் வரவில்லை சட்டசபை ஆசனத்தில் அமராமற் செய்ய தண்டனைக் காலம் மலைபோல் நின்றது. மக்களின் ஏகோபித்த வேண்டுகோள்களெல்லாம் குப்பைத் தொட்டியில் எறியப்பட்டன.

வரவர மோசமாகிக்கொண்டிருக்கும் சுபாஷ் பாபுவின் உடல் நிலைச் செய்தி இந்தியாவுக்கு எட்டிற்று. மக்கள் பரபரப்படைந்தனர் எங்கு பார்த்தாலும் பிரார்த்தனைக்கூட்டங்கள், விடுதலை செய்யவேண்டுமென்ற தீர்மானங்கள் சட்ட சபையிலும் பெருங்கிளர்ச்சி நடந்தது. வேறுவழியின்றி சர்க்காரும் கண்துடைப்பு வேலையில் ஈடுபட்டனர். கல்கத்தாவில் வைத்திய நிபுணராக விளங்

கிய (பாபுவின் சகோதரர்) சுநில்சசந்திரபோஸ், பர்மா வைத்தியக் கர்னல் கெல்ஸால் ஆகிய இருவரையும் இன்ஸீனுக்கு அனுப்பிவைத்தனர் அதிகாரிகள். அவ்விருவரும் அங்கு சென்று பரிசோதனை செய்தனர். பாபுவின் உடல் நிலை அபாயகரமாக இருக்கிறதென்றும், காலங் கடத்தாது ஆரோக்கியமான ஓரிடத்துக்குக் கொண்டு சென்று சர்வ ஜாக்கிரதையுடன் சிகிச்சை செய்யவேண்டுவ தவசியமென்றும் அவர்கள் அறிக்கையும் விடுத்தனர்.

இந்த அறிக்கைக்கு மதிப்புத்தர அரசாங்கத்தின் கல் நெஞ்சம் இணங்கவில்லை. டாக்டர்களின் அறிக்கைப்படி, அவ்வளவு மோசமான நிலைமை எதுவும் ஏற்படவில்லையென்றும், வங்க அவசரச்சட்டத்தின் ஆயுட்காலம் முடிவடைகிற 1930 ஜனவரி 30-ம் தேதிவரை இந்தியாவில் காலவைக்க அனுமதிதரமுடியாதென்றும், வேண்டுமானால் நிபந்தனையுடன் வெளிநாடுகளில் சிகிச்சைபெற அனுமதிக்கலாமென்றும், அதிகாரிகள் ஓர் உத்தரவு பிறப்பித்தனர் 'அப்படியானால் ஸ்விட்ஸர்லாந்துக்கு அனுப்புவது நலம்' என உள்நாட்டு மந்திரி மோபர்லி உபதேசித்தார். பார்த்தார் பாபு, இந்த உத்தரவுக்கு இணங்க மனமொப்பவில்லை. சுயமரியாதையை விற்றுச் சுகம் பெறுவதைவிட, சிறையிலே செத்துமடிவதே சிறப்பு எனக்கருதினார். அந்நேரம், தான் கொண்ட மனப்பான்மையை ஓர் கடிதமாக வரைந்து மூத்த சகோதரர் பாபு சரத்சந்திர போஸுக்கு அனுப்பிவைத்தார். அஞ்சா நெஞ்சமும் சுதந்திர ஆவேச உணர்ச்சியும் கடமையை விளக்கும் மாண்பும் மிளிரும் அக்கடிதத்தின் சாரத்தையேனும் நாம் தெரிந்துகொள்வது அவசியமன்றோ!

இன்ஸின மத்ய சிறை
4—4—1927

அனபுள்ள சோதர !

தஙகளையும அருமைப பெறறோரகளையும, மறறுமுள்ள சோதரரகள—நணபாகள அனைவரையும திரும்பக காணபேனெனபது சநதேகநதான. என பரிதாப நிலைககுக கவலைப படுவீரகளெனறு நினைக்கிறேன என கடமையை நிறைவேறறு முன் இவவளவு இளமையில ஆணடவன என்னை அழைததுக கொள்ளமாட்டான சிறிய சகோதரா என்னைக கலக்காமலே அறிககையும பிராசுமு கொடுதது விட்டாா. நான நோயாளியாகவும அவா வைததியராகவும் கருதுவதாலை, ஒருவேளை அவா தனது கடமையைச செயதவராகலாம அரசியல துறையில் எவவித நலனையும அவா எனககுச செய்து விடவிலலை. உள நாட்டு மநதிரி, அபாயம எதுவுமில்லை எனக கூறுகிறா எநத வைததியராலும் குணபபடுதத முடியாத நிலைமை ஏறபடடாலதான அபாயமென சாககாா கருதுவா போல தெரிகிறது

கனம மோபாலியின நிபநதனை வேதனை தருகிறது. சிறையிலேயே உயிா விட வேணடும, அலலது கால வரையறையினறி அயல நாட்டிலே சிகிசசை பெற வேணடுமெனபது தான அவர் நிபநதனை. வேறு வழியே கிடையாதா? அதைச் செயய அவாகளுககு விருபபமிலலை. வங்க அவசரச் சட்டம 1930 ஜனவரியோடு மாணடு மணணுகுமென்பது என்ன நிசசயம? நான அரசியல கேடிதான. அநதக கேடித தனததை எனனால எபபடி விட்டொழிககமுடியும? ஸவிட்சாலாநதுககுச சென்றாலும, அங்கே நேரும் தொநதரவுகளிலிருநது என்னைப பாதுகாககும் பொறுபபை இநத சர்ககார்

ஏற்றுக் கொள்ளுமா? அங்கேயும் பிறநாட்டு வேவுகாரர் பலரை இந்த சர்க்கார் நியமித்திருக்கிறதே! அவர்கள் என்னைப் பற்றி சர்க்கார் உள்ளத்திலே பயங்கரச் சித்திரம் ஏதேனும் தீட்டி விட்டால் நிலைமை என்னவாகும்? தலைவர் லாலா லஜபதிராய் சரித்திரம் நினைவுக்கு வருகிறது; சில பார்லிமெண்ட் நண்பர்களும் மந்திரிகளும் சிபார்சு செய்யாவிட்டால் அவர் இந்திய மண்ணை மிதித்திருப்பாரா?

எத்தனைதான் ஒதுங்கி யிருந்தாலும், வேவுகாரர்கள் தவறாகத்தான் கருதுவார்கள். 1929 பிறகு முன்பே, என்னை ஓர் பொதுவுடைமைப் பூச்சாண்டியாகக் கூட சித்தரித்து விடுவார்கள். பொதுவுடைமை என்ற பேச்சைக் கேட்டவுடனேயே கதி கலங்கும் இந்த சர்க்காரின் முன்னிலையில் என் கதி என்னவாகும்? நினைத்துப் பார்த்தால், ஏன் என்னை நாடு கடத்திக் கொள்ள வேண்டுமென்ற கேள்வி எழுகிறது. பொதுவுடைமை ஏற்பட வேண்டுமென்ற எண்ணம் என் மனதில் உதித்திருந்தால், ஓர் சிறந்த பொதுவுடைமைக்காரனாகி பலவருடங்களாகி யிருக்கும், அதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் ஒரு சமயம் நேர்ந்ததுண்டு. அந்த வசதிகளை ஏற்றுக் கொண்டிருந்தால், நெருப்பைக் கக்கும் பேச்சுகளும், கோடையிடி போன்ற சொற்பெருக்குகளும் செய்து, பாரிஸ் முதல் லெனின் கிரேட் வரை ஆர்ப்பரிக்கும் கூட்டத்துடன் நானும் ஒருவனாகியிருப்பேன்.

தாய் நாட்டிலோ-பக்கத்திலுள்ள சகோதர நாடுகளிலோ நான் அடி வைக்கக் கூடாதென அரசாங்கம் சொல்லுகிறது. இவ்வார்த்தை என் சித்தக் கடலைக் கலக்குகிறது. எவ்வாறு அதனை வருணிப்பேன்! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே என்னால்

அழிந்துவிடுமா? அவ்வளவு பயங்கரப் பிறவியா நானா? ஒன்றும் விளங்கவில்லை. என் அரசியல் கொள்கை எரிமலைபோன்ற அபாய முடையதன்று. வங்கத்துக்கு வெளியே எனது ஊழியம் இடம்பெற வில்லை. இந்த நிலைமையில் பர்மாவும் இலங்கையும் என்னைக்கண்டு அஞ்சுவதேன்? அவைகளுக்குள்ளே ஏதேனும் தொடர்பு இருக்கிறதா? இல்லையென்றால் இந் நிபந்தனைக்கு இடமில்லையே? இரண்டரை ஆண்டுகளாக உங்களைப் பிரிந்து நரக வேதனை அனுபவிக்கும் நான், இன்னும் மூன்று ஆண்டுகளை நாடு கடத்துவதன் மூலம் செலவிடுவதென்றால், எப்படிச் சகிக்க முடியும்? இந்தத் தாம கைங்கரியப் பட்டத்தைச் சர்க்கார் சூட்டிக்கொள்ளட்டும். புகழின் வழி சமாதியில் தானே முடியும்?

கவலை வேண்டாம், அருமைப் பெற்றோர்க்கு ஆதரவளியுங்கள். நாம், தனித் தனியாகவும் ஒன்று சேர்ந்தும் துன்பத்தை ஏற்கக் கடமைப் பட்டுள்ளோம் ஏனெனில், சுதந்திரம் தேசத்தின் உயிர் நிலையல்லவா? விலை மதிக்க முடியாத அந்தச் சுதந் திரத்தை நம் உயிரைக் கொடுத்தேனும் அடைந்தே யாகவேண்டும். அதற்காகத்தான் என்னளவில் கடுந்தவம் செய்து வருகிறேன். நம் எண்ணம் சிறு சிவியானது தேசம் என்றைக்கும் நம்மை மறக்காது. இதுதான் இரவும் பகலும் நான் காணுகின்ற கனவு.

—சுபாஷ் சந்திரன்

இது தான் தம்பி, தமயனுக்கு விடுத்த கடிதம்.

சுபாஷ் பிழைப்பது சந்தேகம் என்பது தெரிந்ததும், சட்டத்தைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த அரசாங்கம் சிறிது அசைந்தது. சட்டத்தைக் கழுதையாய் வைத்திருக்கும் பிரிட்டிஷ் சர்க்கார், ஒரு விஷயத்தில்

மட்டும் எச்சரிக்கையாக இருந்து வருகிறது. எந்தக் கைதியையும் சிறைச்சாலையில் இறப்பதற்கு விடுவதில்லை, மரணத்தறுவாயில் ஏதேனும் வைத்தியசாலைக்கு அனுப்பி, அங்கேயே வேலை முடிந்ததாகப் பதிவு செய்வது வழக்கம். இந்தக்கட்டம் சுபாஷுக்கும் வந்தது.

1927 மே 16-ம் நாள் கல்கத்தா அவுட்ராம் கட்டிடத்திலே பெருங்கூட்டம். நண்பகலிலே இமைகொட்டாமல் கடலை நோக்கி நிற்கின்றனர் மக்கள். துறைமுகத்துக்கு வராமல் நடு ஆற்றில் வந்து நின்றது அரோண்டாக் கப்பல். வங்கக் கவர்னரின் சொந்த வைத்தியர் மேஜர் கிங்ஸ்டன் நீராவிப்படகிலேறி அரோண்டாவுக்குச் சென்றார். அவருடன் டாக்டர் பி. ஸி ராய், லெப்டினெண்ட் கர்னல் சாண்டிஸ், ஸர் நீலரத்தன் சர்க்கார், சரத்பாபு ஆகிய நால்வரும் அனுமதி பெற்றுச் சென்றனர். உருவம் தெரியாத நிலைமையில் நைந்து எலும்புக்கூடாகியிருக்கும் பாபு சுபாஷ் சந்திரரின் உடலை மீண்டும் பரிசோதனை செய்தனர். மாலை நான்கு மணிக்கெல்லாம் மேஜர் கிங்ஸ்டன் தவிர மற்றவர்கள் திரும்பி விட்டனர். பாபுவுடன் மேஜர் மட்டும் அன்றிரவு முழுதும் கழித்தார்.

மறுநாட் பொழுதும் விடியத்தொடங்கிற்று. உடல் நிலை அபாயமும் மக்களின் ஆத்திரமும் ஒன்று சேர்ந்து கொண்டதால், நிபந்தனையற்ற விடுதலை உத்தரவும் பிறந்தது. சுபாஷ் விருப்பம்போல் எந்த இடத்திலும் சிகிச்சை பெற்றுக்கொள்வதில் எவ்விதத் தடையுமில்லை யென அறிவிக்கப்பட்டது. சகோதரர் சரத்பாபு விரைந்து வந்து பத்திரமாகத் தம்பியை வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தார். படுக்கையருகே வாழ்த்துக் கடிதங்களும்

தந்திகளும் குவிந்தன. "வீடு வந்து சேர்ந்தேன். கடமை யாற்ற உடல் இடம் தரவில்லை. திரும்பென நொறுங்கி யிருக்கும் உடலைச் சிறிது உறுதி செய்ய அவகாசம் தருக. உடல் தேறியதும் ஊழியம் புரிய வந்து விடுகிறேன். அன்புக்கு நன்றி" என்று அனைவருக்கும் பதில் செய்தி விடுத்தார் உடல் தேறியது, வாய் மொழியை நிறை வேற்ற முனைந்தார்

௧௦. தலைவர்கள் பிற்போக்காளர்களா?

1928 டிசம்பர் 24-ம் நாள் கல்கத்தாவிலே கண்கொள் ளாக் காட்சி அங்கு நடைபெறும் 43-வது காங் கிரஸ் மகாசபைக்கு நாலு பக்கங்களி லிருந்தும் எண்ணற்ற மக்கள் திரண்டிருந்தனர் வீதியெல்லாம் ஒரே மனித சமுத்திரம். மன்னாதி மன்னரும் மனம்புழுங்கப் பண்டித மோதிலால் நேரு தலைமை வகிக்கிறாரென்றால் கூட்டத் துக்குக் கேட்பானேன்?

பதினாறு குதிரைகள் பூட்டிய இரதத்தில் தலைவர் ஊர்வலம். இரதத்தின் முன்னே குதிரைப் படை—காலாட்படை—சைக்கிள் படை—மாதர்படை ஆக நால் வகைப் படைகள் அணிவகுத்துச் சென்றன அவைகளின் முன்னணியில் ஆறடி உயரமுள்ள இணையில்லா இளஞ் சிங்கம் ஒன்று, இராணுவ உடையணிந்து, அடங்காக் குதிரையை அடக்கிப் போடுக்கி, அதன் மீதமர்ந்து, படை களைக் கொண்டு செலுத்திற்று. கண்டோ ரெல்லாம் அந்தத் தளகர்த்தர் மீதே கவனம் செலுத்தினர் பிற நாட்டுப் படைத் தளகர்த்தர்கள், இந்தத் தளகர்த்தர் குரலைக் கேட்டாலே சித்தம் கலங்கி யிருப்பர் நெப்போலி யன்கூட நேரில் கண்டால் நெஞ்சம் பதறியிருப்பான்—

அவ்வளவு கம்பீரத் தோற்றம், அதுபோலவே ஆணையிடும் பாணியும்.

அகன்ற நெற்றி—அடர்ந்த புருவம்—கூரிய கண்களின் நேரிய பார்வை—செக்கச் சிவந்த கன்னம்—ஆண்மை வழியும் உடற்கட்டு—சிங்கமும் அஞ்சும் கர்ஜனை—மூவர்ணக் கொடி தாங்கிய கை—இவை அந்தச் சேனாதிபதியின் சிறப்புகள். நால்வகைப் படைகளையும் அணி வகுத்து நிறுத்தி, மகாசபை வாசலிலே தலைவரை வரவேற்ற காட்சி மனதைவிட்டு அகலாததொன்றே யாகும். கண்டவரெல்லோரும் கனவுலகிலே சிந்தனை செலுத்தினர்; கண்கள் மட்டும் தளபதி மீது நிலைத்தனவென்றால் மிகையன்று. அன்றைக்கே, "சுதந்திர இந்தியச் சேனையின் தலைமைப் பீடம் இவருக்கே தான்" என்று முத்திரை யிட்டனர் மக்கள். அந்த உருவம்தான் பாபு சுபாஷ்.

அந்த மகாசபையிலே அகிம்சாமூர்த்தி மகாத்மா "குடியேற்ற நாட்டந்தஸ்து" திட்டத்தைப் பிரரேபித்தார். தலைமை தாங்கும் பண்டித மோதிலால் நேரு தயாரித்த அந்தத் திட்டம், சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டது. 1929 டிசம்பர் 31-ம் தேதிக்குள் சர்க்கார் இதனை ஏற்றுக்கொள்ளாவிட்டால் உடனே ஒத்துழை யாமை கையாளப்படுமென்றும், அதற்கிடையே பூரண சுதந்திரக் கொள்கையும் அமுலில் இருக்குமென்றும் அத் தீர்மானம் கூறிற்று. இளைஞர்களின் மனம் பொறுக்கவில்லை. பரபரப்பு உண்டாயிற்று எழுந்தார் சேனாதிபதி போஸ்;

'சென்னையிலே நடைபெற்ற 29 வது காங் கிரஸ் சுயராஜ்யத் தீர்மானம் நிறைவேறியிருக்க, இந்த 43-வது காங்கிரஸ் குடியேற்ற நாட்டந் தஸ்தை விரும்புகிறதென்றால், நாம் முன்னேறுகிச்

செலலும் பாதையைத தவற விடுகின்றவர்களா கினறோம. பினனோக்கிச் செல்லுவதைப் பொறுத திருககமுடியாது கலப்பறற பரிபூரண சுதநதிரமே நமககு வேணடும "

எனறு ஓா திருததம கொணாநது இடிமுழக்கம செயதாா தலைவாின புதலவா ஜவஹாலால நேரு ஆதரிததாா. காநதியடிகளின மிகுநத செலவாககு காரணததால திருததம தோலவியுறறது. ஆனால, இளைஞாகளின உளளததை உளளவாறுணாநத காநதியடிகள, அடுதத ஆண்டுககுள பலனளிகக விலலையானால—பூரண சுதநதிர இயககததைத் தானும தழுவிக கொளவதாக உறுதி தநதாா.

இவவுறுதி மொழி வெறும ஏமாறறு விததைதான எனறு இளைஞாகள கருதினா பண்டித ஜவஹரும சுபாஷ பாபுவும ஒனறு சோநதனா. இவவிருவரையும கூட்டுக காரியதரிசிகளாகக கொண்ட "பூரண சுதநதிர இயககம" தோனறிறறு. தேசபநதுவால தொடங்கப் பெறறிருநத "பாாவாடு" பத்திரிகையும பூரண சுதநதிர இயககததைத தீவிரமாகப பரபபக கஙகணம கட்டிறறு. நாடுமுறறிலும கிளாசசி ஆரமபமாயிறறு.

சில தினங்கள செல்லவே நாகபுரி இரயிலவேக கமபெனியாா பறறிய கட்டுரை யொன்று, சுபாஷை ஆசிரியராகக கொணட "பாாவாடு" வெளியிட்டதறகாக, மானநஷட வழககொனறு நடைபெறறது. 1929 ஏபரல 24-ம தேதி "பாாவாடு" ககு விரோதமான தீாபபு வெளியாயிறறு ஒனறரை லட்ச ரூபாய நஷட ஈடு கொடுகக வேண்டுமென அததீாபபுக கூறிறறு. பாாததா பாபு-

"பாரவாடை"த் தொடர்ந்து நடத்த இயலவில்லை. உடனே "புதிய பாரவாடு" என்றொரு பத்திரிகையைத் தொடங்கினார். அதுவும் சர்க்கார் உதவியுடன் தடுக்கப் பட்டது. மூன்றாம்நாள் "லிபர்ட்டி" என்று மற்றொன்றை வெளிக்கொணர்ந்தார். மூன்று தினங்களில் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று பத்திரிகைகளை வெளிக் கொணர்வ தென்றால், அடிமைநாட்டில் எவருக்கும் சக்தி கிடையாது. நினைத்துப் பார்த்தால்கூட கனவாகத்தான் தோன்றும்.

இதற்கிடையில் தேசத்திலே பெரிய நெருக்கடி. அடக்குமுறைச் சுழலில் அகப்பட்டனர் பல தலைவர்கள். மீரத் சதிவழக்கும்—லாகூர் சதிவழக்கும் இளைஞர் பலரைச் சிறைக்கோட்டத்துக்குக் கொண்டுசென்று சிதைத்தன. அரசியல் கைதிகள் அளவிலாக் கொடுமைக்கு ஆளாயினர். இந்த அடூழியங்களைக் காணப்பொறாத ஜதீந்திரநாத தாஸ் சிறையிலே உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிரையும் நீத்தார். இந்நிகழ்ச்சிகளால் மக்கள் மனம் எரிமலை யெனக் குமுறிற்று, நடைமுறையிலும் நெருப்பைக் கக்கிற்று. ஒருக்கால் சுபாஷ் பாபுவும் பயங்கர இயக்கங் களுடன் தொடர்பு கொண்டிருப்பாரோ என்ற சந்தேகம் அரசாங்கத்தைப் பிடித்துக் கொண்டது.

செல்ல வந்திருக்கும் அந்த நண்பரை உத்தம சந்த் ரஹ்மத்கானுக்கு அறிமுகம் செய்துவைத்தார். இரவு அந்த நண்பர் வீட்டில் மந்திராலோசனை, பிரயாணத் திட்டம் தயாராயிற்று. ரஹ்மத்கான் தன் நண்பர் ஒருவருக்குத் தேவையான ஒரு ஜோடிச் செருப்பும் வாங்கியும் வாங்க, அவரிடம் கொஞ்சம் பணம் கொடுத்து விட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

அன்று மாலையில், உத்தம் சந்தின் நெருங்கிய நண்பர் ஒருவர் உலர்ந்த பழ வியாபாரி—ஜீவன் லால், பெஷாவரிலிருந்து வந்து சேர்ந்தார். அவர் காபூலுக்கு வந்தால் உத்தமசந்த் வீட்டிலேதான் தங்குவதும் உணவு கொள்வதும் வழக்கம். இந்தத் தடவை உத்தமசந்த் உபசாரம் செய்வதில் தயங்குவதைக் கண்டார். மறுநாள் சூதாடியான அந்த நண்பருடன் கடையில் உத்தமசந்த் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டதும், அவருக்குக் கோபமுண்டாயிற்று. ரஹ்மத்கானின் சந்திப்பில் அவநம்பிக்கை பிறந்தது. ரஹ்மத்கானை யாரென்று அறிய ஆவல் கொண்டார். நூறு ரூபாய் நோட்டை உத்தம சந்த் சூதாடியிடம் கொடுத்ததை நேரில் கண்டதும், ஜீவன் லாலுக்கு அடங்காத கோபம் பொங்கிற்று. அவர்கள் முன்னிலையிலே கண்டிக்கவும் முற்பட்டார். எல்லாம் நட்பின் தூய்மை காரணத்தால் தான்.

ஜீவன் லாலின் கோபாவேசத்தைக் கண்ட ரஹ்மத்கானும் சூதாடியும் கோபம் கொள்ளத் தொடங்கினார்கள். தங்கள் கோபத்தை வெளிக்காட்டாமலே அவ்விருவரும் வெளியேறி விட்டனர். பார்த்தார் உத்தம சந்த், இனிமேலும் உண்மை வரலாறுகளை ஜீவன் லாலுக்குச் சொல்ல மறுத்தால், ஒருக்கால் நடைமுறை விஷயங்கள்

வெளியாகி விடுமோவென அஞ்சினார். ஜீவன லாலோ உததம சந்த் பேசசிலிருந்து, ஏதேதோ ரகசிய வேலைகள நடை பெறுவதாகத தெரிநததும, உண்மையைத தெரிநது கொளளப பேராசைகொண்டார 'ஒருபோதும துரோகம் செயவதிலலை' என உறுதிமொழிகூறி கெஞசிக கும்பிடடுக் கூததாடினார். யோசிததுச சொலவதாக உததம சந்த் கூறியதில திருபதி கொளளவிலலை. இரவில பாபுவுககு விஷயம தெரிவிககபபடடது. தீரககாலோசனை செயது, தான வெளியேறிய பினனார ஜீவன லாலுககு இரகசி யததைத தெரிவிபபதில ஆடசேபனையிலலை யெனற முடிவுககு வநதார பாபு

மறுநாள காலையில மீண்டும ஜீவனலாலின தொநதரவு, 'மனைவிககு உடல நிலை சரியிலலை, ஆதலால யோசனைககு நேரம கிடைககவிலலை' என்று உததம சநத மழுபபினார். கடையிலிருநது இரவில வீடுதிருமபியதும, சூதாடியுடன பாபு செலவதறகான எலலா ஏறபாடுகளையும ரஹமதகான் செயது முடிததுவிடடதாகவும, லாரிககு ஏறபாடு செயவது ஒனறுதான பாககி யெனறும தெரியவநதது.

அடுதத நாள, வழககமபோல கடையில உடகாரநதி ருநதார உததமசநத. ஜீவன லாலும அபபு வநது பழைய பலலவியைப பாடத தொடஙகினார எபபொழு தாவது உணமையைச சொலலி விடுவதாகச சொலலிச சாநதபபடுததிக கொணடிருககும நேரததில, ஸ்ரீமதி கரோனியின வருகை இரகசியக கடிதம ஒனறை உததம சநதிடம சோபபிததுவிடடு, அமமையார சென்று விடடாள இதைககண்டதும ஜீவன லாலின பேராசை அளவு மீறிறறு. புதிராகத் தோனறின நிகழசசிக

னெல்லாம். தொந்தரவு மிஞ்சுகிறது. மிகச் சாமர்த்தியமாகத் தப்பித்து வீடு திரும்பினார் உத்தம சந்த்.

ஸ்ரீமதி கரோனி தந்த கடிதம் போஸிடம் கொடுக்கப் பட்டது.

"ரோமிலிருந்து தூதர்கள் புறப்பட்டு விட்டனர். அனுமதிச் சீட்டுக்கு உங்கள் போட்டோ தேவை. நாளை பகல் 11-மணிக்கு தாப் ரோடில் உங்களுக்காகக் காத்து நிற்கும் காரில் ஏறிக்கொள்ளுங்கள். போட்டோ பிடித்ததும், புறப்பட்ட இடத்தில் உங்களை அந்தக் கார் கொண்டுவந்து சேர்த்துவிடும். ஒரு வாரத்துக்குள் பிரயாணத்துக்குத் தயாராகுங்கள்" என்று எழுதியிருந்ததைக் கண்டதும் நீண்ட ஆராய்ச்சியில் பாபு ஈடுபட்டார் 'போட்டோவைக் கொடுப்பதில் எவ்வித நஷ்டமும் இல்லை' என்ற முடிவு கண்டார். ஜீவன் லாலின் தொந்தரவை உத்தம சந்தால் தாங்கமுடியவில்லை யென்பதறிந்த பாபு, உத்தம சந்திடம் "வேறு வழி யில்லாவிட்டால் அவரிடம் இரகசியத்தைக் கூறி விடுங்கள்" என உத்தரவிட்டார்.

மறுநாள் பொழுதும் விடிந்தது கடைக்கு வந்து விட்டார் ஜீவன் லால் பழைய தொந்தரவை மீண்டும் தொடர்ந்தார் கேட்டுக்கொண்டேயிருந்த உத்தம சந்த் எச்சரிக்கை செய்து, நடந்ததை—நடப்பதை யாவும் ஒன்று விடாமல் ஜீவன் லாலுக்குத் தெரிவித்தார். அவ்வளவு தான், ஜீவன் லாலுக்குப் பாபுவை நேரில் காணவேண்டு மென்ற துடிதுடிப்பு உண்டாயிற்று. 'முயற்சி செய்கிறேன்' என்ற பதிலைக் கொடுத்துவிட்டு வீடு வந்தார். வீட்டில் வழக்கம்போல் பழைய ஆராய்ச்சி நடைபெற்றது. 'மாஸ்கோ—மாஸ்கோ' என்று புலம்பிக்கொண்டிருந்த

பாபுவின 'மனதில, புதிய மாறறம புகுநதிருபபதைப் பார்தத மறறவாகள மகிழசசி யடைநதனா.

குறிபபிடட நேரததில குறிபபிடடபடி போடடோ எடுககசசென்று திருமபி வநதாா சுபாஷ. மாலையில ஹாஜி வீடடில தேனீா விருநது. உததம சநதும கலநது கொணடாா. சிறிது நேரம ஹாஜி சாஹிபின ஜொமன மனைவியுடன ஜொமன பாஷையில பாபு பேசிககொணடிருநதாா. இரவில வீடடுககுத திருமபியதும முடிவு செயயபபடாமலிருநத பழைய பிரசனையை மீணடும தொடாநதனா. அசசு நாடுகளுககுச சென்றுவிடடால அங்கிருநது மாஸகோ செலவது எளிது என்றும, அனுமதி மறுககபபடடாலுஙகூட அசசு நாடுகளிலேயே தங்கிவிடுவதால நனமையே தவிர கெடுதி யொன்றுமிலலையென்றும பாபு கருதியதால, சூதாடியுடன செயதிருநத ஏறபாடடைத தடடிககழிகக வேணடியதாயிறறு

அடுதத நாள காலையில ஜீவன லாலும உத்தம சநதும பேசிககொணடிருநதனா. ஸ்ரீமதி கரோனி மறறொரு கடிதததைக கொணடுவநது கொடுததாா. கவனிததுக கொணடிருநத ஜீவன லாலுககு, அமமையாரைபபறறியும அறிநதுகொளள ஆசையுணடாயிறறு அதுவும தெரிவிததாயிறறு. கடிதததைப பாபுவிடம சோபபிகக அவசரப படடுககொணடிருநத உததம சநதுடன, ஜீவன லாலும சில பழவகைகளை எடுததுககொணடு பாபுவின தரிசனததுககுக தயாரானாா. தரிசனம கிடைததது, அங்கேயே தஙகவும தலைபபடடாா ஜீவன லால.

பிரயாணததுககாக இரணடு சூடடுகள தயாரிககப் பட்டு ஹாஜியின மனைவி மூலம ஜொமனிககு அனுபபப

பட்டன. இரண்டு நாட்கள் சென்றதும் இத்தாலிய ஸ்தானிகரும் அவரது மனைவியும் உத்தம சந்த் கடைக்கு வந்து, கடைசிக் கடிதம் ஒன்றைக் கொடுத்துச் சென்றனர்.

“பெப்ருவரி 16-ம் தேதியன்று பகல் 2 மணிக்கு பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் உத்தம சந்த் கடையிலிருந்து ஒருவர் எடுத்துச் செல்வார். 17-ம் தேதி இரவு 8 மணிக்கு ஜெயதீனும் ரஹமத்கானும் ஸ்ரீமதி கரோனி வீட்டுக்கு வந்து விருந்துண்ண வேண்டும். 18-ம் தேதி அச்சு நாட்டுத் தூதர்கள் பாபுவை அழைத்துச் செல்வர்” என்று அக்கடிதம் கூறிற்று. இந்தக் கடிதம் கண்டதும், பாபு உள்ளங் குளிர்ந்தார், உடல் பூரிப்படைந்தது.

பெப்ருவரி 16-ம் தேதி நெருங்கிற்று. கடிதப்படி கடையிலிருந்து சாமான்களும் எடுத்துச் செல்லப்பட்டன. அன்று இரவுதான் உத்தம சந்த் வீட்டில் பாபு தங்கிய கடைசி இரவு. மறுநாள் பொழுது விடிந்தது. காலை 4 மணிக்கே ஆகாரம் புசித்துவிட்டு உத்தம சந்தின் குழந்தைகளுக்கு அன்பு முத்தங்கள் ஈந்தார் பாபு. உத்தம சந்திடமும் அவர் மனைவியாரிடமும் விடை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம், எல்லோர் கண்களையும் கண்ணீர் மறைத்தது; நா அசைவற்றது. பிரிவாற்றாமைக் காட்சி: கலங்கிய கண்களுடன் பாபுவின் காலடியில் வீழ்ந்தார் உத்தம சந்த். “ஏதேனும் குறைகள் நேர்ந்திருந்தால் மன்னிக்க வேண்டும்” எனப் பிரார்த்தித்தார் உத்தம சந்த். “எவ்வித குறையும் நேரவில்லை, கவலை வேண்டாம்” என்று கண்ணீர் துடைத்து, “எச்சரிக்கையா யிருங்கள் மிக எச்சரிக்கை வேண்டும், போலீஸ் சென்றதும் தகவல்

தருகிறேன்" என்று ஆறுதல் கூறித் தேற்றி விடை பெற்றுக்கொண்டார்.

மத்தியானம் ஹாஜிசாஹிப் வீட்டில் விருந்து. உத்தம் சந்தும் அழைக்கப்பட்டார். விருந்து முடிந்ததும் அங்கு தங்கிவிட்டு, இரவு 8-மணிக்கு கரோனியின் வீட்டுக்கு சென்றனர் ஜெயதீனும் ரஹமதகானும். மறுநாட் காலை 9-மணிக்கெல்லாம் 'போஸ் பிரயாணமாகிவிட்டார்' என்ற செய்தியை ரஹமதகான் கொண்டுவந்து சேர்த்தார். இரு ஜெர்மானியர்—ஒரு இத்தாலியர் ஆக மூவர் துணையோடு காட்டடைன் என்ற புனைபெயருடன் சுபாஷ் சந்திரர் விமானத்தில் பறந்து சென்றார்

௧௧ ஜெர்மனியில் 'பரீஸ் இண்டியன்'

விமானம் 1941 மார்ச் 28-ம் தேதி சுபாஷ் பாபுவை பர்லினில் கொண்டு சேர்த்தது "மாபெரும் இந்தியத் தலைவரும் மாஜி இந்திய ராஷ்டிரபதியுமான சுபாஷ் சந்திர போஸ் ஜெர்மன் தலைநகரான பர்லினுக்கு, சுகமே வந்து சேர்ந்தார்" என்று ஜெர்மன் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று பாபுவின் படங்களும் அப்பத்திரிகைகளை அலங்கரித்தன. சில தினங்களில் அந்தப் பத்திரிகைகள் உத்தம் சந்துக்கும் கிடைத்தன. காபூலிலிருந்து ருஷ்ய எல்லைக்குக் காரிலும், அங்கிருந்து மாஸ்கோவுக்கு ரயிலிலும், மாஸ்கோவிலிருந்து பர்லினுக்கு விமானத்திலும் பாபு பிரயாணம் செய்ததாக ஸ்ரீமதி கரோனி மூலம் உத்தம் சந்துக்குத் தெரியவந்தது.

1939 செப்டம்பரில் தொடங்கிய 2-வது உலக மகா யுத்தம் ஐரோப்பாவைக் கதிகலங்க வைத்தது. ஜெர்மனி

ஹிடலரும இததாலி முசோலினியும வெறறி மாலை சூடி நேச நாடடினரை வெறறிகரமாகப பின வாஙகுமபடிச செயகினற தருணததில, சுபாஷ சநதிரா பொலினை யடைநதார. ஹிடலரால வரவேறகப படடார. கருதிய எணணம கைகூட முயறசிககலானார.

ஏநத அடிமைநாடும பிறநாடடு உதவியினறி சுதநதிர மடையவிலலை யெனனும உண்மையைப படிததறிநதிருநத பாபுவுககு, இனறைய சுதநதிர நாடுகள தததம சுதநதிரங களைக காபபாறறிக கொளள-பிறநாடடு உதவியை நாடிப பலையினிதது நிறகினற காடசி ஆதரவு தநதது. மீளாத அடிமைப படுகுழியில கிடநதுழலும தனது தாய நாடு, சுதநதிரம பெறும பொருடடு அனனியா உதவியைப பெறுவதில இழிவு ஒனறுமிலலை யெனக கருதினார. அநத நமபிககை அஸதிவாரததின மீது சுதநதிர மாளிகையை நிாமாணம செயயத தீாமானிததார. அடிமைத தளையை ஆயுதததால அறுததெறிவதே தனது கடமை யெனறு திடசிததம கொணடார முதனமுதலில, தானே ஒா போா வீரனாக இருநதால தான, கனவு நனவாக முடியுமெனற எணணம பிறநதது. உடனே நவீன சாதனஙகளுடன போா புரியும ராணுவப பயிறசியைத தொடஙகினார. ஏறகனவே சிறு பிராயததில ராணுவக காலாடபயிறசியில தனககிருநத தோசசி, இநதப பயிறசியை எளிதாககிறறு. பயிறசியில வெறறி பெறறதும, ஐரோபபாவில வாழும இநதியாகளின சுதநதிர மனப்பானமையைக கணடறிய, சுறறுபபிரயாணததை மேற கொணடார.

இநநேரததில, ஐரோபபிய யுதத நிலவரததைச சாதகமாககிக கொணட ஜபபானியா, ஆசியாப போருககு

முரசறையத தொடங்கினா 1941 டிசமபர் 7-ம தேதி பால துறைமுகததைத தாககி, கிழககாசிய யுததததைத ஜபபானியா ஆரமபிததது வைததனா. 13-ம தேதி குவாம, 22-ல வேக, 25-ல ஹாஙகாங ஆகியன வீழசசியுறறன. மினனல வேகததில பல பிரதேசஙகள ஜபபானியா கையில அகபபடத தொடஙகின இபபடியாக ஆசியாவும ஐரோபபாவும யுத்தப புயலால அவதியுறறன.

சுறறுப பிரயாணததைத முடிதது விடடு பெர்லின திருமபிய சுபாஷ, "இநதியாவை மீடகும பொருடடு, ஆஙகிலேயா ஆடசியை ஆழமாயப புதைகக, இநதியாவுக்கென தேசிய ராணுவம ஒனறு தேவை, ஆரமபததில் 400 போ கிடைததால போதும" எனறு ஒரு வேணடுகோள வெளியிடடாா. அவ வேணடுகோளை மரியாதையுடன ஏறறுககொணடனா ஐரோபபாவில சிதறிககிடநத இநதியாகள ராணுவததில சோ 1400 இநதியாகள முனவநதனா இநத 1400 பேரையும கொணட இநதிய தேசிய ராணுவததை 1942 ஜனவரி 26-ம நாள டிரெஸடன எனனுமிடததில நிறுவினா. சில தினஙகளில அநத ராணுவம 4000 பேரைக கொணடதாகவும வளாசசி பெறறது "பிரீ ஸ இணடியன" எனறு இநதராணுவததை ஜொமனியா அழைததனா. ஆபரிகக ராணுவததை யொதத உடையும தாவுமபுலி பொறிதத மூவாணச சினனமும இநத ராணுவததுககு அளிககப படடன டிரெஸடன, அனுபாக போனற பல முககிய ராணுவ முகாமகளில அதி தீவிரப் பயிறசி பெறறனா 15 கமபெனிகளைககொணட ஒரே பிரிகேடடாக விளஙகிய இநத இநதிய தேசிய ராணுவம், ஹாலநது-தெறகு பிரானஸ்-லாரோசெலலி ஆகிய பகுதிகளின தறகாபபு அரணகளுககு அனுபபபபடடது

ஐரோப்பிய போர்முனையில் பல இடங்களுக்கு இந்திய தேசிய ராணுவம் அனுப்பப்பட்ட போதிலும், இந்த ராணுவத்தை அபாயகரமான போர்முனைகளுக்கு அனுப்பலாகாதென்றும், இன்னும் பல போர்த்தொழிற் பயிற்சிகளை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்றும் நாஜி சர்க்காரிடம் கண்டிப்பான ஏற்பாடு செய்தார் பாபு. அத்துடன் 'இந்திய தேசிய ராணுவம், பிரிட்டிஷ் படை அமெரிக்கப் படைகளுடன் மட்டுமே போரிட வேண்டும், வேறெந்த நாட்டுப் படையுடனும் போரிடக் கூடாது' என்றும் கட்டளையிட்டார். இந்த ஏற்பாட்டையும் கட்டளையையும் கண்ட நாஜி சர்க்கார் திகைப்பும் ஆச்சரியமும் அடைந்தது. போஸின் இலட்சியத்தையும் ஆற்றலையும் கண்டு மகிழ்ச்சியுற்றனர் நாஜித் தலைவர்கள். ஆதலால், போஸ் சர்க்காரின் கொள்கைகளை எட்டிப் பார்க்கவும் ஜெர்மன் சர்க்காருக்கு இடம் கிடைக்கவில்லை. நேசப்பான்மையுடன் சம அந்தஸ்து அளிக்கப்பட்டது. இந்திய தேசிய ராணுவம் அமைக்கப்பட்டு — பயிற்சி பெற்றதும், போர்முனைக்குச் செல்லும் தறுவாயில் நடை பெற்ற அணிவகுப்பின் போது, எதிர்பார்த்தபடி விஜயம் செய்து ராணுவ மரியாதை செலுத்திய ஹெர் ஹிட்லர், ஆற்றிய 12 நிமிடச் சொற்பொழிவொன்றே, இந்த ராணுவத்தின் அமைப்பைத் தெளிவு படுத்தும். அந்தப் பிரசங்கத்தில் ஹிட்லர் குறிப்பிட்டார் —

"சுதந்திர இந்திய சர்க்காரின் தற்காலிகத் தலைவர் மேன்மை தங்கிய ஹெர் சுபாஷ் சந்திர போஸ் அவர்களது ராணுவப் படைக்கு, நான் ஆலோசனை கூறுவதோ-கட்டளையிடுவதோ நேர்மையல்ல, ஏனெனில் அவர்கள் சுதந்திர அரசாங்கத்தைச் சேர்ந்த

வர்கள். ஜெர்மன் வீரர்களே! ஜெர்மன் மக்களே! நீங்கள் மட்டும் உங்கள் சிந்தையில் ஒரு விஷயத்தை நன்றாகப் பதியவைத்துக் கொள்ளவேண்டும். எட்டுக் கோடியினராகிய உங்கள் தலைவிதி, உங்கள் தலைவர் பியூரரிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பது போல், நாற்பது கோடியினராகிய இந்தியர்களின் உரிமைகளைப் பெற ஹெர் போஸ் சபதம் கொண்டிருக்கிறார். ஆதலால் உங்கள் தலைவருக்கு எவ்வளவு மரியாதையும் ஒத்துழைப்பும் அளிப்பீர்களோ, அதைப் போலவே ஹெர் போஸுக்கும் அவரது சகாக்களுக்கும் அளிப்பீர்களாக!"

ஐரோப்பாவிலே பல போர் அரங்கங்களிலும் ஆங்கிலேய அமெரிக்கப் படைகளை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, ஆசியாவிலே - இந்தியாவுக்கு வெளியே, தனது படையை விஸ்தரிக்கவோ - அல்லது தனியாக ஓர் படையை அமைக்கவோ செய்தல் நலம் என்று சுபாஷுக்குத் தோன்றிற்று. இந்தியர்களுக்கென 14 பிரசங்கங்களை ஜெர்மன் ரேடியோ மூலம் செய்தார். இவ்வாறு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளை ஐரோப்பாவிலே செலவிட்டு வரும்போது, கிழக்காசியா இந்தியர்களின் அழைப்புக் கிடைத்தது. ஐரோப்பாவிலேயுள்ள "ப்ரீஸ் இண்டியன்" இராணுவத்தை ஸ்ரீ நம்பியாரிடம் ஒப்படைத்துவிட்டு, டோக்கியோவுக்குப் பிரயாணமானார். பிரயாணத்துக்கு ஜெர்மன் நீர்மூழ்கியும் ஜப்பான் நீர்மூழ்கியும் துணை செய்தன. 1943 மார்ச் மாதத்தில் புறப்பட்ட பிரயாணம் டோக்கியோ வந்து சேருவதற்குள் மூன்று மாதங்கள் பிடித்தன. யுத்த மேகங்களால் நேர்ந்த தொந்தரவுகள் அனைத்தையும் சமாளித்துக்

கொண்டு, ஜூன மாத இறுதியில டோககியோ வநது சோநதாா. ஜபபானிய ராணுவத தலைவாகள - மநதிரிகள - பிரமுகாகள அனைவரையும சநதிததுப பேசினா.

உய கிழக்காசியாவில் எழுச்சி

ஐரோபபாவிலே சுபாஷ் போஸ இநதியாகளின உணாச சியைததட்டி யெழுபபிக கொணடிருககும நேரததில, 1941 டிசமபா 7-ம நாள ஆசியாவிலே நேச நாட்டினா மீது ஜபபானின போாப பிரகடனம அதே தினததில டோககியோவில வசிதது வநத இநதியாகளும விழிப பெயதி ஒனறு கூடி ஆலோசனை செயதனா. முதல மகா யுததததினபோது, தாய நாட்டின விடுதலைக கிளாசசி யில முனனினறதன விளைவாக, டோககியோவில வாழநது வநத ராஷபிகாரிபோஸ தலைமையில ஓா கமிட்டியும அமைககப பட்டது. அநதக கமிட்டி டிசமபா 26-ம தேதி டோககியோ இரயிலவே ஹோட்டலில ஓா மகா நாட்டைக கூட்டிறறு. 50 பிரதிநிதிகள கலநது கொண டனா. இநதியாவின விடுதலைதான ஜபபான அரசாங கததுககு வெறறியைத தாமுடியுமெனறும, ஜபபான வெறறிபெற விருமபினால இநதிய விடுதலைககு அதன உதவி தவிாகக முடியாத தேவை யெனறும, இநதியா வில பிரிட்டிஷ ஆதிககம இருககுமவரை ஜபபானின வெறறி குதிரைக கொமபுதானெனறும அம மகாநாடு தீாமானிததது இததீாமானம ஜபபான் அரசாங்கததைக கலககியது. நீணட பரிசிலனையின பினனா, ஜபபான தலையை அசைததது. கிழககாசிய இநதியர்களின இயககமும ஓா தலைமை ஸதாபனததை நிறுவிறறு. ஆககவேலைகளுட ஆரமபமாயின

டிசம்பர் 7-முதல் 26-க்குள் ஜப்பானியர் பெற்ற வெற்றி அளவிடற்கரியதே. ஜப்பானியரின் மின்னல் தாக்குதல்களை எதிர்த்து நிற்கச் சக்தியற்று பிரிட்டிஷ் ராணுவம் பின் வாங்கிக்கொண்டே யிருந்தது. பின் வாங்கும் வேகத்தில், தங்களுடன் தோளோடு தோள் நின்ற இந்திய ராணுவத்தினரையும், இந்தியப் பொது மக்களையும் நடுச்சந்தியிலே விட்டு விட்டனர். தங்கள் உயிரையும் உடைமையையும் மட்டுமே பெரிதெனக்கருதி வெற்றிகரமாகப் பின் வாங்கினர் பிரிட்டிஷார். 1942 பெப்ருவரி முதல் தேதிக்கெல்லாம் பஸிபிக் சமுத்திரத்திலிருந்து அநேகமாக வாபஸாகி விட்டனர்.

பெப்ருவரி 2-ம் தேதி தாயலாந்து வழியாக சிங்கப்பூரில் நுழைந்தனர் ஜப்பானியர். 15-ம் தேதி சிங்கப்பூரும் வீழ்ந்தது. அழைத்து வந்த பிரிட்டிஷ் வல்லரசு போதிய ஆயுத பலமும் இதரத் தேவைகளும் அளிக்காமல் தன்னந்தனியே விட்டு விட்டு ஓடியதைக்கண்ட இந்திய ராணுவம் சரணாகதி யடைந்தது ஜப்பானியரிடம். அதுவும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் உத்தரவுப்படிதான். மன்னர் கமிஷன் பெற்ற அதிகாரிகள் உட்பட எல்லா இந்தியர்களும் பாரர் பார்க்கில் கூடவேண்டுமென்ற அந்த உத்தரவுக் கேற்ப, பெப்ருவரி 16-ம் தேதி நடைபெற்ற அந்தக் கூட்டத்தில், பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியான கர்னல் ஹண்ட் ஜப்பானிய இரகசிய இலாகாத் தலைமை அதிகாரி மேஜர் புஜிவாராவிடம் இந்திய ராணுவத்தை ஒப்படைத்து விட்டார்.

இந்திய வீரர்கள் சிறை முகாம்களில் அடைபட்டனர். இரண்டு தினங்கள் சென்றதும், மேஜர் புஜிவாரா

இநதக கைதிகளிடம வந்து, இநதியாகளையும கைதி யான இநதியப படையினாகளையும ஒனறு சோதது 'இநதிய சுதநதிர லீக' என ஒா இயககம ஆரமபிகக வேண்டுவதன அவசியததைத ஆலோசிககுமபடிக கேட்டுக கொணடாா. இநதியா யாரையும எதிரிகளாகப பாவிப பதிலலை யெனறும, இநதியாகளுககு வேண்டிய எலலா உதவிகளையும செயயத தயாராக இருபபதாகவும உறுதி மொழி கொடுததாா. இநத யோசனை இநதியாகளால வரவேறகப படடது. ஆனால ஜபபானியாகளின கைப பாவைகளாக இருகக யாரும விருமப விலலை.

இநதச சநதாபபததில, டோகயோவில ராஷபிகாரி போஸ தலைமையில, மலேயா — தாயலாநது (சயாம) ஹாஙகாங—ஷாஙகாய ஆகிய இடஙகளிலுளள இநதியா களின மகாநாடொனறு நடைபெறறது மாாச 23 முதல 30-ம தேதி வரை நடைபெறற அம மகாநாடு அனனியா தலையீடு சிறிதுமினறி பூரண சுதநதிரம பெறுவதும, அதறகு இநதியரால நிாவகிககபபடும ஒா இநதியத தேசிய ராணுவததான நடவடிககை எடுகக வேண்டு மெனபதும, இலடசியமாகக கொணட தீாமானததை நிறைவேறறிறறு. அததுடன இநதியச சுதநதிரச சேனை ஒனறு அமைககவும நடவடிககை எடுபபதென, மறறொரு தீாமானததையும அம மகாநாடு நிறைவேறறிறறு.

அதன பினனா ஏபரில 22, 23, 25 தேதிகளிலஅகில மலேயா இநதியாகளின மகாநாடொனறு சிஙகபபூரில நடநதது. டோககியோ மகாநாட்டின லடசியததைத உறுதிசெயது, மலேயாவுககென ஒா மதய ஸதாபனத தையும இமமகாநாடு தோறறுவிததது. மறுநாள

பெர்லின் ரேடியோவில் சுபாஷ் சந்திரா ஆற்றிய சொற்பெருக்கை, பிடிபட்ட பிரதேசங்களிலுள்ள இந்தியர்களை வருடக்கேட்டனர். காந்த சக்தி கொண்ட அப்பிரசங்கத்தில் சுபாஷ் பாபு கூறினார்:

"உலகத்திலேயே இந்தியாவுக்கு ஒரே ஒரு விரோதி தான் உண்டு. சுமார் நூறு வருடங்களாக இந்தியாவின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தான் - அந்த விரோதி. அடிமை வாழ்வு வேண்டுமா? சுதந்திரம் வேண்டுமா? என்பதைத் தான் இந்தியர்கள் தீர்மானிக்க வேண்டும். இவ்விரண்டில் ஒன்றை இந்தியா உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். பிரிட்டனின் கூலியாட்கள், என்னை - 'அச்சு நாட்டு ஏஜண்ட்' என்று எத்தனை தான் பழித்தாலும், வாழ் நாள் முழுமையும் தேசத்துக்கே அர்ப்பணித்து நிற்கும் எனக்கு, எந்த நற்சாட்சிப் பத்திரமும் தேவையில்லை. உடம்பில் கடைசி மூச்சு இருக்கும் வரை இந்த உறுதியிலேயே இருப்பேன். உலகின் எந்தப் பாகத்தில் இருந்தாலும், என் உயிர் — உடல் — உழைப்பு யாவும் இந்தியாவுக்கும் இந்தியருக்குமே உரிமை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியைத் தடுக்க எந்த உலக சக்தியும் இல்லை. இவ்வளவு வேகமாகவும் வெற்றியுடனும் கடைசி வீழ்ச்சியை அணுகிக் கொண்டிருக்கிறது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம். இதுவே தருணம்! நெருங்குகிறது நம் விமோசனம்! இந்தியச் சோதரர்களே! கச்சையை இறுக்கிக்கொள்ளுங்கள்" என்று.

அவ்வளவுதான், மலேயா இந்திய மக்கள் கச்சையை வரிந்து கட்டத் தொடங்கினர். மே 10-ம் தேதிக்குள்ளாக அகில மலேயா இந்திய சுதந்திர

மீதில 95,000 பேர அங்கததினராகி விட்டனர். 22 கிளைகளும முளைத்தன.

எலலா வறறிறகும தலைமை ஸ்தாபனமாகிய கிழக்காசிய இநதிய சுதநதிர இயககததின மறறோர மகாநாடு ஜூன 15-ம தேதி முதல 23-ம தேதி வரை, தாயலாநது தலைநகரான பாங்காங்கில நடைபெறறது. ராஷ் பிகாரி போஸ தலைமை. கிழககாசியாவிலுளள எலலா இநதியச் சுதநதிரச சஙகங்களின பிரதிநிதிகளும அதில கலநது கொணடனா பிரிட்டிஷாரால சிஙகபபூரில கைவிடப் பட்ட இநதிய ராணுவ அதிகாரிகளும வநதிருநதனா. அவவமயம, திலகாகாலததுப பழைய சிஙகம ராஷ் பிகாரி செயத வீர காஜனை, அஙகிருநத மககளின உணாசசி நெருபபுககு நெய வாாதத தெனறால மிகையனறு.

“நமமுன காததிருககும கடுமையான இவவியக கததில, அரும பெரும தியாகஙகளைச செயய வேணடியவாகள நாம. பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிதது சுதநதிர இநதியாவைக கணணால காண பதறகுமுன, நமமுள பலா உயிரிழகக நேரும் வருஷக கணககில இநதிய நலததுககாகவே ஜபபானில உழைதது வரும நாங்கள, அடிமை விலஙகிலிருநது ஆசியா முழுமையுமே விடுவிககப் போதுமான பலததுடன ஜபபான இருககிற தெனபதை உணருகினறோம. நூறு ஆணடுகளுககு ஒரு முறைகூட கிடைகக முடியாத தோர அரிய சநதாபபம இது. இநதச் சநதாபபததை நாம இழநது விடலாகாதெனபதை நனறுகத தெரிநது கொளளவேணடும. நாம நமது இலட்சியததை யடைய, ஜபபானும் அசசு நாடுகளும நமககு அளிதது வரும உதவி - நமபிககை - வாககுறுதி ஆகிய கைஙகரியஙகளுககு நமது வநதனம இநதக

கடைசி சுதநதிரப போரில வெறறி நமககுததான. சநதேகமிலலை. ஆதலால நாம அனைவரும! அநத வெறறியை நாடி ஒருங்குதிரணடு புறபபடுவோமாக' நாம அனைவரும இநதியர, நமது எதிரி பிரிட்டிஷார, இநத மநதிரம நம மனதில ஓயவொழிவு யினறி ஒலிககவேணடும"

இபபடி இநதக கிழச சிஙகம காஜிததால, இளஞ சிங்கங்கள எனனதான செயய முனவராது! "இநதியா பிளகக முடியாத ஓர தேசம, இநதிய தேசீய காஙகிரஸின லடசியமும கொளகைகளுங கொணடே இநத லீக செயலாறறவேணடும, ஆயுதம தாஙகிபபோரிட ஆஸாத ஹிநத சேனை யொனறை அமைககவேணடும, அச சேனை இநதிய விடுதலைககு மடடும உபயோகிககபபட வேணடும, இதர நாடடுச சேனைகளின சம அநதஸதும அதிகாரமும இநதச சேனை பெறறிருகக வேணடும, கிழக காசியாவுககு வநது இநத இயககததின தலைமைப பீடததை ஏறறுககொளள— சுபாஷ பாபுவுககு எலலா வசதிகளும அளிககபபட வேணடும" எனபனபோனற பல தீரமானஙகளை நிறைவேறறினர

இம மகாநாடுதான இநதிய சுதநதிர லீகின ஆரமபம. தலைமைக காரியாலயம சிஙகபபூரில நிறுவபபடடது. லீகின தலைவராக ராஷ பிகாரிபோஸ தேரநதெடுககப பெறறார மததிய யுதத சபையும, கிழககாசியாப பிரதேசஙகளில கிளைஸதாபனங்களும அமைககபபடடன பயிறசி பெறற 7000 வீரரகளைக கொணட ராணுவமும தோனறிறறு கேபடன மோஹனசிங அதன தளபதியானார. இதுதான இநதிய தேசீய ராணுவததின ஜனனம. நாளதோறும இநதியரகளின எழுசசியும ராணுவமும வளரசசிபெறத தொடங்கிறறு.

உக செய் அல்லது செத்துப்போ!

ஆயுததால ஆஙகில ஆடசியை ஆழபபுதைககக ஐரோப் பாவில பலம சேர்ககினறுா பாபு, கிழககாசியாவில் ராஷ பிகாரி போஸ் தலைமையில இநதியாகள் திரண்டெழுநது ராணுவம அமைதது முஸதீபுச செய கினறனா. இநத அரிய சநதாபபததிலே 1942 ஆகஸட் மாதம 8-மதேதி மாலையில இநதியச சரிததிரததின புதிய சகாபதம ஆரமபமாயிறறு. அனறு பமபாயில அகில இநதிய காங்கிரஸ கமிடடி மெளலானு அபுலகலாமஆஸாத் தலைமையில கூடிறறு. அவவமயம நிறைவேறிய தீர்மானததை "இநதியச சுதநதிர சாசனம" எனறு தான் அழைககவேணடும அத தீர்மானததின வாசகம ஒவவொரு இநதியா மனதிலும செதுகக வேண்டியதே யாகும அதனைக கீழே காணக

1942 ஜூலை 14-ம நாள காஙகிரஸ கமிடடி நிறை வேறறிய தீர்மானம - யுததப போககு - பிரிடடிஷ சாக காரின பொறுபபு வாயநத பிரதிநிதிகளின பேசசுகள - இநதியாவிலும வெளியிலும எழுநத வியாககியான விமாசனஙகள ஆகியவைகளை இக கமிடடி நுணுகக மாக ஆராயநதது அநதத தீர்மானததை இநதக கமிடடி அஙகீகரிததது ஊர்ஜிதம செயகிறது காரியக் கமிடடியில தீர்மானம நிறைவேறிய பினனா நடநத நிகழசசிகள, இநதத தீர்மானம நியாயமானதே எனபதை உறுதி செயகினறன இநதியாவின நனமை கருதியும, ஐககிய நாடுகளின இலடசியம நிறைவேறவும பிரிடடிஷ ஆதிக்கம இநதியாவிலிருநது அறவே ஒழிய வேண்டுவது அவசரமும அவசியமுமாகு மெனபதைத தெளிவாக்குகினறன, இனிமேலும பிரிடடிஷ ஆடசி

இந்தியாவில் நீடிக்குமானால், இந்தியாவுக்கு அவமானம் மட்டுமல்ல, பலவீனம் - தற்காப்பில் வலிமைக் குறைவு- உலக சுதந்திர இலட்சியத்துக்கான இந்தியாவின் கடமையில் தடை—ஆகியனவும் ஏற்படும்.

ருஷ்ய - சீனப் போர் முனைகளின் சீர்கேடு, கவலை தருகிறது ஆயினும் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க வீறு கொண்டிருக்கும் அவ் விரு நாட்டினர்களின் வீரச் செயல்களை மெச்சுவதோடு, அம் மக்களுக்கு மனமார்ந்த பாராட்டுதலையும் இக் கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது. நேச தேசங்கள் கையாண்டு வரும் கொள்கை அடிக்கடி படுதோல்வியில் விழுந்து விடுகிறது. அந்தக் கொள்கை அதன் அடிப்படையை நுணுகி ஆராய வேண்டியதன் அவசியத்தை, ஆக்கிரமிப்புக்கு ஆளானவர்களும் சுதந்திரத்துக்காகப் போராடுபவர்களும் உணர்ந்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கிறது உடனுக்குடன் மடிந்துபோகும் கொள்கைகளை விடாப்பிடியாக வைத்துக் கொண்டிருப்பதன் மூலம், தோல்வியை வெற்றியாக மாற்றி விட முடியாது. அந்தக் கொள்கைகளில் தோல்வி உள்ளடங்கி இருக்கிறதென்பதை, சென்ற கால அனுபவம் நமக்குக் காட்டி விட்டது தவிர அக் கொள்கைகள் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டிராமல், அடிமைப்பட்ட நாடுகள் - காலனி நாடுகள் ஆகியவைகளின் மீது இன்றுள்ள நிலைமையை நீடிக்கச் செய்து, ஏகாதிபத்தியப் பரம்பரை வழக்கத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவனவாகவே இருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் சக்தி, ஆளும் வலிமையில் பலம் பெறுவதற்குப் பதிலாகச் சுமையாகவும் சாபக் கேடாகவும் விளங்குகிறது. நவீன ஏகாதிபத்தியத்தில், இந்தியாவின் பிரசினை உரைகல்லாக இருக்கிறது ஏனெனில், ஆசிய-ஆபிரிக்க மக்களின் நம்பிக்கையும் உத்சாகமும் இந்திய சுதந்திரத்தால்தான் பூரணத்துவம் பெற முடியும். இந்தியச் சுதந்திரப் பிரசினையில் பிரிட்டனும் அதன் ஐக்கிய நாடுகளும்

கடைந்து கொள்ளும் தன்மையைப் பொறுத்திருக்கிறது அவைகளின் மதிப்பு

ஆதலால், இந் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க வேண்டுவது மிக முக்கியமானதும், உடனடியாகக் கையாள வேண்டியதுமான பிரச்னை. இதைப் பொறுத்தே யுத்தத்தின் எதிர் காலம் - சுதந்திரம் - ஜனநாயகம் ஆகியவைகளின் வெற்றி சுதந்திர இந்தியா சுதந்திரத்துக்கும், நாஸிஸ - பாஸிஸ - இம்பீரியலிஸ எதிர்ப்புக்கும், தனது மகத்தான சக்திகளை யெல்லாம் துணையாகக் கொடுக்கு மென உத்தரவாத மளிக்கும். இந்திய விடுதலை யுத்தப் போக்கை மட்டும் மாற்றுவ தோடு நின்று விடாது; அடிமைப்பட்டு அவதியுறும் மனித சமூகம் முழுமையையும் மீட்டு, ஐக்ய நாடுகள் பக்கம் கொண்டுவரத் தவறாது. அதனால், ஐக்கிய தேசங்கள் இந்தியாவின் நேச நாடுகளாக மாறி, ஒழுங் கான நீதிக்காகவே போரிடுகின்றன வென்ற முதல்தர கௌரவத்தையும் அடையும். அடிமை இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னம். இந்த ஏகாதி பத்தியத்தின் மாசு ஐக்ய நாடுகளின் தலைவிதியை மோச மாக்கிவிடும்

எனவே, இன்றைய அபாய நிலைமை, இந்தியாவின் விடுதலையையும், பிரிட்டிஷாரின் இந்திய ஆட்சி முடிவை யும், தவிர்க்க முடியாத அவசியமாக்குகிறது வெறும் வாக்குறுதியும் உத்தரவாதமும் இன்றைய நிலைமையை மாற்றவோ - அபாயத்தைச் சமாளிக்கவோ முடியாது அது மட்டுமல்ல, பொது மக்களின் மனத்தைத் தொட்டுப் பார்க்கக் கூட இயலாது பொங்கிக் கொண்டிருக்கும் சுதந்திரம் ஒன்றால் தான் கோடிக் கணக்கான மக்களின் உணர்ச்சியைத் தீண்டவும், போர் நிலைமையை உடனடியாக மாற்றவும் முடியும். எனவே, பிரிட்டிஷ் அதிகாரம் இந்தியாவிலிருந்து வெளி யேற வேண்டுமென்ற கோரிக்கையை, அகில இந்திய

காஙகிரஸ கமிட்டி மீணடும அழுத்தமாகத தெரிவிக்கிறது இநதியச சுதநதிரம பிரகடனமான வுடனேயே தறகாலிக சாக்கார அமைககப்படும பின்னா, சுதநதிர இநதியா ஐகய நாடுகளின நேச நாடாகி, சுதநதிரததுககாக நடததப பெறும யுததததில நேருகினற இன்ப துனபஙகளைப பகிாநது கொளளும இநதியாவிலுளள முககிய கட்சிகள, வகுப்புகள, ஆ கி ய வை க ளி ன ஒததுழைப்பால தான தறகாலிக சாக்கார அமைகக முடியும அநத சாககாரில எலலா இநதியப பிரிவினா களின பிரதிநிதிகளும கலநதிருப்பா

இநதியாவைப பாதுகாப்பதும, இ ந தி ய ா வி ன ஆயுதப படைகளையும அகிமசைப படைகளையும இணைத்து, நேச தேசஙகளுடன சோநது ஆகரமிப பாளரை எதிாப்பதும, வயலகளிலும தொழிறசாலை களிலும வேலைசெயகிற பாட்டாளிமககளை முனனேறறு வதோடு அரசாஙக அதிகாரஙகளை அவாகளுககே உரிமையாககுவதும போனற, தேச நலனுக்கும முனனேறறததுககும உழைப்பதே அநத சாககாரின ஆரமபக கடமை. அததுடன அநதத் தறகாலிக சாககாா ஓா அரசியல நிாணயத திட்டம வகுககும அநத நிாணய சபை நிரநதர அரசாஙகததுககான முறைகளைத தயாரிக கும அநதத தயாரிப்பு எலலா பிரிவினாகளும ஏறகக கூடியதாக இருககும. அப்படி அமைககப பெறும பெடரல அமைப்பில சேருகினற ஒவவொரு யூனிட (மாகாண ஆட்சி)டும அதிகப்படியான சுதநதிரம கொணடதாகவே யிருககும பெடரல அமைப்பில சோ விருமபாத யூனிட்டுகள அதிகப்படியான வாககுரிமை களின மீது விலகி நிறக உரிமை யுணடு. மீதமுளள அதிகாரஙகள இநத யூனிட்டுகளிடம இருககவேணடு மென்பது காஙகிரஸின அபிப்பிராயம.

எதிாகாலததில இநதியாவுககும நேச நாட்டினாககும இருகக வேணடிய உறவுகளை, இநதச் சுதநதிர யூனிட்டு

களின பிரதிநிதிகள ஒனறுகூடி ஆலோசனை செயது சரிககடடுவாாகள. மக்களின ஒனறுபடட உறுதி-சகதி ஆகியவைகளைத் துணையாகக கொணடு, ஆக்ரமிப்பாளாகளை எதிாகக, இநதியாவின சுதநதிரமே பலம தரும அனனிய ஆதிககததிலுளள இதர ஆசிய நாடுகளின விடுதலைககு இநதியச சுதநதிரம சினனமாகவும பூாவாஙகமாகவும இருகக வேணடும. பாமா — மலேயா — இநதோ சைனு — டசசு இநதியத் தீவுகள—ஈரான—ஈராக ஆகிய நாடுகளும பரிபூரண சுதநதிரம அடைநதே யாகவேணடும ஜபபானிய ஆதிககததின கீழ இனறிருககும நாடுகள விடுதலை பெறற பினனா, வேறெநத வலலரசினகீழ வரவோ அலலது அனனியரின குடியேறற நாடுகளாக மாறவோ அனுமதிக்கக கூடாது

இன்றைய அபாயகரமான கடடததைச சமாளிததுப பூரண சுதநதிரம பெறுவதும பாதுகாபபு வலிமையை வளாகக முயலுவதுமே அகில இநதிய காஙகிரஸ கமிடடியின முககிய கடமை அதோடு எதிகால உலகின அமைதி – பாதுகாபபு–ஒழுஙகு–வளாசசி ஆகியவைகளை முனனிடடு, சுதநதிர நாடுகள கொணட அகில உலக பெடரேஷனை அமைககவேணடுமெனறும இக கமிடடி அபிபபிராயபபடுகிறது. வேறு எநத அடிபபடையிலும தறகால உலகப பிரசனைகளைததீாத்து ஒழுஙகான அமைதியை நிலைநாடட இயலாது. மேறகூறிய அகில உலக பெடரேஷன, தனது ஒவவொரு அஙகத்தின (நாடுகளின) சுதநதிரம, ஆககிரமிபபை எதிாததல, ஒனறை யொனறு சுரணடுவதைத தடுததல, தேசிய மைனாரிடடிகளின பாதுகாபபு, பிறபோக்குத தேசஙகளின முன்னேறறம போனற எலலாப பொது நனமைககான உலக சாதனஙகளைத திரடடவும பொறுபபு வாயநதிருககும. அநத உலக பெடரேஷன அமைத்து விடடால, தரை – கடல –ஆகாயப படை-

களின தேவை ஏறபடாது; ஆயுதப பரிஹாரணம சாத்தியமாகும, உலக அமைதியையும் பாதுகாதது விடலாம. சுதநதிர இந்தியா மகிழசசியுடன் அதில கலநது சாவதேச பிரசனைகளைச் சமாளிக்க இதர நாடுகளுடன சரிநிகா சமானமாக ஒததுழைககும. அநத பெடரேஷனின் அடிபபடைக கொளகைகளை ஏறறுககொளளுகினற எநத நாட்டுககும, அதில அஙகம வகிக்க உரிமையிருகக வேண்டும

யுத்தம நடநது கொணடிருக்கும இநத நேரததில ஐககிய நாடுகள மட்டுமே அதில சேரநதுகொளள வேணடிய நிலைமை யிருககிறது. இப்பொழுதே அம முயறசி தொடஙகபபட்டு விட்டால, யுததப போககு மாறும, அசசு நாட்டினா மனம மாறும, வரவிருககும சமாதானம தூயமையுளளதாக இருககும, யுததபபுயல கோரமாக அடிக்கிறது, பல படிபபினைகள தோனறுகினறன, சோகமான சூழநிலை, உலகின தலை மேல பேரபாயம தொஙகுகிறது. இநநேரததில கூட, அததகைய உலக சமஷ்டியை அமைக்கும பணியை மேறகொளள ஒருசில சாககாாகள கூட தயாராயிலலாதது கண்டு இக் கமிட்டி மிக வருநதுகிறது.

பிரிட்டிஷ அரசாஙகத்தின புதிய நடவடிககைகளும அயல நாட்டுப பத்திரிகைகளின தீமையான வியாக்கியானஙகளும சேரநது, இந்தியாவின சுதநதிரததை வெளிபபடையாகக் கேட்கும உரிமையைக்கூட மறுபபதாகஇருக்கிறது. எது எனனவாயினும, இன்றைய அபாயததைத் தவிாககவும, இந்தியா தன்னைப பாதுகாத்துக் கொளளவும, சீனவுக்கும ருஷயாவுககும அவசியமான உதவிகளைக கொடுபபதறகும, இநதியாவிறகு சுதந்திரம மிக மிகத தேவை. சீன – ருஷய சுதந்திரம மிக முககியத்துவமானது. அதறகாகவே அவை போரிடுகின்றன. இதைத் தொந்தரவு செயயவோ— ஐக்கிய நாடுகளின் பாதுகாபபு வலிமையை ஆபத்தில்

கொண்டு விடவோ கூடாதென்பதே இக்கமிட்டியின் கவலை. ஆனால் இந்தியாவையும் ஐக்கிய நாடுகளையும் சேர்த்துப் பிடித்துக் கொள்ளவே ஆபத்து வளர்ந்து கொண்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் இந்தியா அன்னிய ஆதிக்கத்துக்கு இணங்கி அசட்டையாக இருந்தால், அதன் கௌரவம் குறைந்து, பாதுகாப்புத் திறமையும் ஆக்கிரமிப்பாளரை எதிர்த்து நிற்கும் சக்தியும் செயலற்றுவிடும். தவிர, ஆபத்தைத் தளர்த்த முடியாதபடி, இந்தியாவை அதன் அடிமைத்தனம் பிணைத்திருக்கிறது. ஆதலால், ஐக்கிய நாட்டு மக்களுக்கு இந்தியா தனது சேவையைச் செய்ய இயலவில்லை. இதையெல்லாம் தனது சக்தியையும் நீதியையும் உணருகின்ற மக்களாகிய நாம் சகிக்கவே முடியாது.

பிரிட்டனுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் காரியக் கமிட்டி முன்னதாகவே முறையிட்டிருக்கிறது. இந்தக் கடைசி நிமிஷத்திலும், உலக சுதந்திரத்தை முன்னிட்டு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தனது வேண்டுகோளை மறுபடியும் அந்நாடுகளுக்கு அனுப்புகிறது. ஆனால் தேசத்தின் மீது ஏகாதிபத்திய எதேச்சாதிகாரம் செலுத்தும் சர்க்காரை எதிர்த்து, லட்சியத்தை அடைந்தே தீரவேண்டுமென்று துடிதுடிக்கும் மக்களின் உறுதியை அமுலுக்குக் கொண்டுவருவதை, இன்னும் தடுத்து வைப்பது நீதியல்லவென கமிட்டி கருதுகிறது. எனவே, நியாயமானதும் - யாரும் பறிக்க முடியாததுமான சுதந்திரத்தை அடையும் பொருட்டு, விரிவாகவும் அஹிம்சை முறையிலுமான பொது ஜனப் போராட்டமொன்றை நடத்தவேணுமாய தேசமக்களுக்குத் தெரிவிப்பதென்று கமிட்டி தீர்மானிக்கிறது. சென்ற 22 ஆண்டுகளாகச் சேகரித்துள்ள அஹிம்சா பலம் முழுமையும் தேசம் உபயோகித்துக்கொள்ளும். அந்தப் போராட்டத்தை, காந்திஜியே தலைமை வகித்து தேச மக்களுக்கு வழி காட்டி நடத்திச்செல்லுமாறு கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

எததகைய அபாயஙகள — கஷட நஷடஙகள நேரினும, தைரியமாகவும பொறுமையாகவும காநதிஜியின உததரவுகளை இநதிய சுதநதிரப் போரவீராக ளெனற முறையில நிறைவேறறுமாறு, தேசமககளை இக கமிட்டி கேட்டுக் கொளளுகிறது அகிமசையே இவவியக்கததின இலடசியம எனபதை ஒவவொருவரும நினைவில வைததுககொளள வேண்டும. உததரவு பிறப்பிடபது, அலலது மககளிடம உததரவு செலவது. அலலது காஙகிரஸ கமிடடிகள வேலை செயவது, சாததியமிலலாமல போகும காலம வரலாம. அவவாறு நோநதால, இயக்கததில கலநதிருககும ஒவவொரு ஆணும பெணணும தனககுததானே வழிகாடடியாகி, ஏறகனவே கொடுககபபடடுளள வரமபுககுளளேயே கடமையைச செயய வேணடும. சுதநதிரததை விருமபி அதை யடையப பாடுபடும ஒவவொரு இநதியரும, ஓயவொழி விலலாது, கரடுமுரடான பாதையில விடாபபிடியாக முனனேறி, பூரண சுதநதிரததை அடையுமவரை — தனனைத தானே ஊககமூடடிக கொளளவேணடும, இடையில இளைபபாறவே கூடாது.

சுதநதிர இநதியாவின் அரசாஙகம எபபடி யிருககுமெனபது பறறி, அகில இநதிய காஙகிரஸ கமிடடி தனது சொநதக கருததை கடைசியாகச சொலலி விடடது. பொதுஜனப போராடடததை தொடஙகுவதால, காஙகிரஸுககு அதிகாரததைப பெறும நோககம எதுவுமிலலை யெனபதையும இக கமிடடி தெளிவாககு விருமபுகிறது. அதிகார சகதி வரும போது, அது இநதிய மககள அனைவருககும சொநதமாகச செயயபபடும

குதூகலமாக இநதத தீரமானம நிறைவேறியதும், அகில இநதிய காங்கிரஸ கமிடடியின அதிகாரமபெற்ற தளகாததா காநதிஜீ, "வெளளையனே! வெளியேறு" "இந்தியனே!" அவனை தயங்கினால, வெளியேறுமபடிச்

"செய் அல்லது செத்து மடி" என்ற சங்கநாதத்தை முழக்கினார் அகிம்சையின் கடைசி எல்லையில் நின்று கொண்டு. "தலைவர்கள் வழிகாட்டுவார்களென்க் காத்திருக்க வேண்டாம், உங்களுக்கு நீங்களே தலைவர்கள். சுதந்திரமடைய எது நேர்மையான வழியென்று உங்களுக்குத் தோன்றுகிறதோ, அவ்வழியில் துணிந்து சென்று செயலாற்று,' என்று பாரத அன்னையே வழி காட்டியது போலிருந்தது அவரது ஆணை.

இச் செய்தி நாட்டுமக்களுக்கு எட்டுமுன்னரே, அன்று இரவுப் பொழுதுகூட விடியவில்லை, காந்தியடிகளும் நாடுமுற்றிலுமுள்ள தலைவர்களும் கைதுசெய்யப்பட்டனர். மறுநாட்காலையில் 40 கோடியினருக்கும் செய்தி பறந்து சென்றது. அவ்வளவுதான், நாட்டில் நடந்தவைகளை வருணிக்க முடியுமா?

வெள்ளையனை வெளியேற்றும் கடமையை மேற்கொண்டனர் மக்கள். இந்தக் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டுமென்று கச்சையை இறுக்கிக் கட்டிப் போரில் குதித்தனர். குமரிமுதல் இமயம்வரை போர்க்களமாயிற்று. மலேயாவிலும் சிங்கப்பூரிலும் கோட்டையை விட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இங்கே மீசையை முறுக்கிற்று. தனக்கு இறுதி நெருங்கி வருவதை அறியாமல் அது செய்த கொடுமையை, மனித உருவம் தாங்கிய எவனும் சகிக்க முடியாது. கூண்டுபட்ட மிருகம்போல வெறி கொண்டு தன் முழு சக்தியையும் உபயோகித்தது. செய்வது இன்னதென்று தெரியாமல் தலைவிரி கோலமாய் கைவரிசை முழுமையும் முழு மூச்சுடன் பகிரங்கமாகக் காட்டிற்று. பலர் சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன; எண்ணற்ற மக்கள் சிறைப்பட்டனர், நிரபராதிகள் சுட்டுக்

கொல்லப்பட்டனர், மாதர்கள் கற்பழிக்கப்பட்டனர். மனத்தால் நினைக்க முடியாத — நாவினால் சொல்ல முடியாத அவ்வளவு கொடுமைகளையும் பலங்கொண்ட மட்டும் செய்து காட்டிற்று அதிகார ஆணவம். சுருங்கக் கூறின் அன்றொரு நாள் பஞ்சாபிலே நடந்த படுகொலை, இந்தப் பாரதப் படுகொலைக்குக் கோடியிலொன்றுதான்.

"காங்கிரசையும் அதன் நவீன எழுச்சியையும் ஒழித்து மண்ணாக்கி விடுவோ"மென, அசையாத உறுதியுடனும் ஆண்மையுடனும் கூரைமீதிருந்து கொக்கரித்தனர் அதிகாரிகள். கோமாருக் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மரத்தின் ஒவ்வொரு வேரும் அறுபட்டன.

இந்த நிகழ்ச்சிகளெல்லாம் இந்தியாவுக்கு வெளியே யாரும் அறிந்துகொள்ள முடியாதபடி எத்தனையோ அரண்கள் அமைக்கப் பட்டன. அவைகளை யெல்லாம் பாரிசத்தில் தாண்டிவிட்டது ஓர் செய்தி. கிழக்காசியாவில் ராஷ் பிகாரி போஸும் ஐரோப்பாவில் சுபாஷ் சந்திர போஸும் இச்செய்தி கேட்டு அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமா? காட்டு நெருப்புக்குச் சூறாவளி செய்த துணைதான் இதுதான் சமயமென விரைந்தனர் போருக்கு — வெளிநாடுகளில் வசித்த இந்தியர்கள். ஏன்? உலக முழுமையுமுள்ள இந்தியர்கள் அனைவருமே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றனர்.

22. வலிய வந்த தலைமை

ஐரோப்பாவில் சுபாஷ் போஸ் 1942 ஜனவரியிலராணுவம் அமைத்த செய்தியும், இந்தியாவில் தொடங்கிய ஆகஸ்டு போர்முரசமும், கிழக்காசியாவிலுள்ள இந்தியர்

மனதிலே ஓர புதிய ஒளியைத தநதன. 1942 செபடமபரில கிழககாசியாவிலும இநதிய தேசிய ராணுவம தோனறிறறு. அதறகு மோகன் சிங் தளபதியானா. மோகன சிங்கின இலட்சியம மகததானது. ஜபபானிய ராணுவததோடு மட்டுமினறி உலகிலுளள எநத ராணுவத்துடனும, தனது ராணுவம சம அநதஸதுடனிருககவேணடு மெனபதும, இநத ராணுவம மேறகொளளும சுதநதிரப போா நடவடிககைகளில ஜபபானியரின தலையீடோ அதிகாரமோ சிறிதேனும ஏறபடுமாயின — ஜபபானியரையும எதிாததுத தாகக வேண்டுமெனபதும அவரது நோககம.

இது ஜபபானிய அதிகாரிகளுககுப பிடிகக விலலை, வெறுபபுககொணடனா இநதிய தேசிய ராணுவம பூரண வளாசசி பெறுவதறகுத தடை ஏறபடடது. அநத வருடம (1942) செலலுமுனபே மோகன சிங ஜபபானிய அதிகாரிகளால கைதி செயயபபடடாா இநதிய தேசிய ராணுவம முனனே ஏறபாட்டினபடி டிசமபரில கலையுமபடி யாயிறறு இரணடாவது முறையாக ஓா ராணுவத்தை அமைபபதறகான ஏறபாடுகளும நடைபெறலாயின. இதறகிடையில 1943 ஜூன மாதம 16ம தேதி சுபாஷ பாபுவின டோககியோ வருகை. இநதியாவுககு வெளியே கிழககாசியாவிலுளள இநதியத தலைவாகளெலலோரும பாபுவை வரவேறகச சென்றனர் ராஷ பிகாரி போஸூம முனகூட்டியே டோககியோவுககு வநதுசேர்நதாா. ஜூன 20-ம தேதி பததிரிகைகளுககு ஓா அறிககையைக கொடுததுவிட்டு, மறுநாளும அதறகடுத்த நாளும டோககியோ ரேடியோவில முதனமுதலாகச சொறபெருக்காறறினாா சுபாஷ பாபு. அவைகளின் சுருககம:—

"நம தலைவாகள பிரிட்டிஷாரின சூழச்சியாலும வஞசகத்தாலும பலமுறை ஏமாறறப பட்டனா. இனி மேலும அததகைய ஏமாறறஙகளுககு ஆளாக மாட்டோமென, சுமாா 20 ஆணடுகளுக்கு முன்பே பிரதிக்ஞை செயதிருககிறோம. ஓா நலல சநதாபபததுக காகவே இனறுவரை காததிருநதோம, சநதாபபமும வநதுவிட்டது. சுதநதிரச சூரியன உதயமாகும தருணம இதுவே. இத தருணம தபபினால மறுதருணம வாயபபது அரிது. ஆகவே காறறுளளபோதே தூறறிக கொளள வேணடும பிரிட்டிஷ ஆட்சியால, நமது ஆதமீகச சீரழிவு—கலாசார சீரகுலைவு—பொருளா தாரச சிதைவு ஆகியனதான கிடைதத பலன. தாய நாட்டுச சுதநதிரததுககாக நம இரததததைச சிநத வேணடியது நமது கடமை அச சுதநதிரததை காப பாறறவும நமககுப பலம வேணடும ஆயுத பலததால நமமை அடிமையாககிய அதே எதிரியை, ஆயுதபலங கொணடே வீழத்த வேணடும சட்டமறுபபியககம ஆயுதந தாஙகிய போராக மாறவேணடும எனறைக்கு இநத வேளவியில குதிககினறோமோ, அனறுதான நாம சுதநதிரமபெறத தகுதியுடையவாகளாவோம

பிரிட்டனின ராணுவ நிபுணததுவததை எனனென பது! இநதியாவின கிழககெலலைபபுறம வழியாக எநத எதிரியும வரககூடுமென, எநத பிரிட்டிஷ ராணுவ நிபுணனும கனவிலகூட நினைததிலலை. வட்மேற கெலலையிலதான முழு கவனததையும செலுததினா இது எவவளவு மட்டமான நிபுணததுவம எனபதை, சிஙகபபூரில ஜபபானியரின மினனலவேக முன னேறறம நனகு உணாததிறறு இருபது ஆணடு களாகப பெரும உழைபபெடுததுக கட்டிய சிஙகபபூா கோட்டை ஒரே வாரததில கைமாறிறறெனறால, இப பொழுது வைசிராய வேவல கட்டிக கொணடிருக்கும கிழககெலலைக கோட்டையிலிருநது பிரிட்டிஷாா வெளியேற எநநேரம பிடிக்கும?

வேறெந்தப் போர்முனைகளிலும் நாம் கவலை செலுத்த வேண்டியதில்லை, இந்தியாவிலும் அதன் எல்லையிலும் என்ன நடக்கின்றன என்பதைக் கவனித்தால் போதும். "இழந்த பர்மாவை மீண்டும் பிடித்து விடுவோம்" என்று தம்பட்ட மடிக்கின்றனர் பிரிட்டிஷார் மானமிழந்து புற முதுகுகாட்டி ஓட நேர்ந்ததை மறந்து, "மனிதன் தோன்றி மறைவான், சாம்ராஜ்யங்கள் முளைத்து பின்னர் அழியும், ஆனால் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் மட்டும் நிரந்தரமாகவே இருக்கும்" என்று இறுமாப்புக் கொண்டிருக்கின்றனர் அந்த இறுமாப்பு அவர்களின் அறிவுச் சூனியத்தையே காட்டுகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் பிறந்ததும் வளர்ந்ததும் இந்தியாவில்தான் பிரிட்டனின் உயிர் இந்தியாவில்தான் இருக்கிறது. அதனால் தான் இந்த வெறிபிடித்த போரை நடத்துகின்றனர் யுத்தம் எக்கதி யானாலும், கடைசிவரை இந்தியா வைத் தன் கையில் வைத்திருக்கவே அவர்கள் போரிடுவரென்பது நிச்சயம் இதே காரணத் தால்தான், இவ்வளவு பெரிய நெருக்கடியிலும் நம் சுதந்திரத்தை மறுக்கின்றனர் என்றேனும் ஒரு நாள் இந்தியாவுக்கு சுதந்திரம் தந்துதானாக வேண்டுமென்று யாரேனும் நினைத்தால், அது மடமையில் மூழ்குவதே யாகும் சமரச மனப் பான்மையை நாம் அடியோடு ஒழித்து விட வேண்டும். சுதந்திர இலட்சியத்தில் விட்டுக் கொடுப்பதற்கு இடமேது? ஆகவே, இரத்தம் சிந்தத் தயாராகுக! உள்ளும் புறமுமுள்ள என் தேச மக்களே! அசையாத உறுதியும் முழுப் பலமும் கொண்டு போரைத் தொடர்ந்து நடத் துங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சாம்பல் சுதந்தர இந்தியாவுக்கு உரமாகும்வரை நமது

> போர் நீடிக்க வேண்டும். பின் வாங்கவோ, தயங்கவோ, களைப்பாறவோ யாரும் நினைக்க கூடாது. முன்னேறுக! பூரண சுதந்திரம் பெறும் வரை முன்னேறுக! வெற்றியே அதன் முடிவு
>
> பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தாலேயே எனது வாழ்க்கையை அவதியுறும்படிச் செய்ய இயல வில்லையென்றால், இனி எவரும்—எந்த வல்லரசும் என்னை ஏமாற்றவோ-ஏய்க்கவோ முடியாது.''

பின்னர், ராஷ் பிகாரி போஸ் மூலம் கிழக்காசிய இந்தியர்களின் நிலைமையைத் தெரிந்து கொண்டார். ஜப்பானிய மந்திரிகள்—ராணுவத் தலைவர்கள் ஆகியோர் மூலம் கிழக்காசிய யுத்த நிலைமை தெளிவாயிற்று. ஜூலை மாதம் 2-ம் தேதி பிறந்ததும் விமான மார்க்கமாக சிங்கப்பூர் வந்து சேர்ந்தார். 4-ம் தேதி சரித்திரப் பிரசித்திபெற்ற, கிழக்காசிய இந்தியர்களின் மகாநாடு. ராஷ் பிகாரியிட மிருந்து, கிழக்காசிய இந்தியச் சுதந்திர சங்கத்தின் தலைமைப் பதவியை சுபாஷ் சந்திரர் ஏற்றுக்கொண்டார்.

ஆயுத படை பலத்துடன் இந்தியாவில் நுழைந்து பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன், காத்திருந்த அம்மகாநாட்டில் தலைமை தாங்கி,

> "இந்த யுத்த நெருக்கடியில் நாம் துணிந்து நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக் கின்றோம். அதற்கு ராணுவக் கட்டுப்பாடும் தளராத உறுதியும் வேண்டும், ஒரே கொடியின் கீழ் நாம் அனைவரும் ஒருங்கு திரண்டு, ஒரு படையை அமைத்துக்கொள்ள வேண்டும் அந்தப் படை தன் கடமையை வெற்றிகரமாக நிறை வேற்று மென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவி னுள்ளே நடைபெறுகிறது விடுதலைப் போர்.

அதற்கு மெய்க்காப்பாளராகவே நாம் நடந்துகொள்ள வேண்டும். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாக நாம் எதையும் செய்துவிடக் கூடாது. ஆதலால் சுதந்திர இந்தியத் தற்காலிக சர்க்கார் ஒன்றை அமைப்பது நலமெனக் கருதுகின்றேன். அந்த சர்க்காரின் உத்திரவுப்படி, மிருக பலமும் வஞ்சக நெஞ்சமும் கொண்ட நம் எதிரியை முறியடிக்க வேண்டும். முன்னேறும் போது, பசி—பட்டினி—தாகம்—ஏன்? மரணத்தைக்கூடக் கடக்கத் துணிவு கொள்ள வேண்டும். இந்தச் சோதனையில் வெற்றி பெற்றால், தாய்நாட்டைச் சுதந்திரமும் செழிப்பும் அடையச் செய்தவர்களாவோம்" எனக் கர்ஜித்தார்.

மறுநாள் (5—7—43) சிங்கப்பூர் நகரசபை மண்டபத்தின் முன்னால், இந்தியத் தேசீய ராணுவம் ஒன்றரை மணி நேரம் அணிவகுத்து நின்றது. இந்த இரண்டாவது சுதந்திர இந்திய ராணுவத்தைப் பார்வையிட்டார் பாபு. ஜப்பான் பிரதமர் டோஜோவும் அங்கு வந்து, ராணுவ மரியாதை ஏற்றுக்கொண்டார். ராணுவத் தலைமையையும் சுபாஷ் ஏற்றுக் கொண்டதால் அவர் மனதில் மண்டிக் கிடந்த உணர்ச்சிப் பெருக்கு, கரையை உடைத்து விட்டதென்னலாம். அந்த வீரர்களைப் பார்த்துக் கூறினார்.

"இந்திய விடுதலைச் சேனை வீரர்களே! இன்று தான் என் வாழ்க்கை புனிதமடைந்தது. இந்திய விடுதலை ராணுவம் அமைந்திருக்கும் செய்தியை உலகத்தாருக்கு அறிவிக்கும் தனிப் பெருமையை அடைந்துவிட்டேன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கோட்டையாக விளங்கிய இந்த சிங்கப்பூர்த் தளத்திலே, நம் சுதந்திரச் சேனை அணிவகுத்து நிற்கும் பெருமையைப் பெற்றுவிட்டோம். பிரிட்டன் பிடிப்பிலிருந்து இந்தியாவை விடுவிக்கப் போகும் சேனை இதுவே. 1939-ல் பிரான்ஸ், ஜெர்மனி மீது

யுத்தப் பிரகடனம் செய்தபோது, ஜெர்மன் வீரர்கள் ‘பாரிஸுக்கு — பாரிஸுக்கு’ என்ற கோஷத்தைக் கிளப்பினார்கள். அதைப் போலவே நிப்பொன (ஜப்பான) வீரர்களும் 1941-ல ‘சிங்கப்பூர்—சிங்கப்பூர்’ என்று ஆவேசக் கர்ஜனை செய்து முன்னேறினார். நாமும் ‘டில்லி—டில்லி’ என்ற கோஷத்தைக் கைக்கொள்ளுவோமாக!

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சுடுகாடாகிய இங்கு, இப்பொழுது நிற்கின்றோம். சில தினங்களிலே டில்லியை நோக்கி விரைவாக முன்னேறுவோம். இந்தச் சுதந்திரப் போரில் எத்தனைபேர் உயிர் தப்புவோமென்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அதுதான் ‘வெற்றி நம்மதே’ என்பது. உயிரோடு வெற்றியைக் காணும் வீரர்கள் டில்லி செங்கோட்டையிலே பிரிட்டிஷ் சவக்குழியின் மீது வெற்றி ஊர்வலம் நடத்தும்வரை, நமது வேலை முடிந்ததாகாது.

எல்லாத் துறையிலும் பக்குவமடைந்துள்ளது இந்தியா. ஆனால் நீண்ட நாளாக அதற்கு ஒரே ஒரு குறை இருக்கத்தான் செய்தது. சுதந்திரச் சேனை யில்லையே என்பதுதான் அந்தக் குறை. இப்பொழுது அதுவும் தீர்ந்துவிட்டது. சுதந்திரம் உயிரினும் உயர்ந்தது. இந்தியாவின் மதிப்பு—நம்பிக்கை—சுதந்திரம் எல்லாவற்றிற்கும் நீங்களே பொறுப்புதாரிகள், நாட்டு மக்களின் புகழ்ச் சிகரும் நம் சந்ததியாரின் கௌரவத்துக்கும் நீங்கள்தான் வழிகாட்டிகள். அடிமை பெருமை பெற முடியாது. இருள்—ஒளி, நீர்—நெருப்பு, இன்பம்—துன்பம் எல்லாவற்றிலும் நான் உங்கள் பக்கத்திலேயே இருப்பேன். வெற்றி—சுதந்திரம் ஆகியவைகளிடம் உங்களை அழைத்துச் செல்வேன். நிச்சயமாக நம்புங்கள்.

தனக்கென ஓர் ராணுவம் இருந்ததால்தான், ஜார்ஜ் வாஷிங்டன், அமெரிக்காவுக்குச் சுதந்திரம் கொண்டு வந்தான். இத்தாலிய வீரன் காரிபால்டியும் ஆயுதம் தாங்கிய தொண்டர் படை அமைத்துக்கொண்டதால் தான் இத்தாலியை விடுதலை செய்தான். அதைப் போலவே சுதந்திர இந்தியப் படை வீரர்களாகிய நீங்களும் உங்கள் இலட்சியத்தை அடைந்தே தீரவேண்டும். தாய்நாட்டின் மீது அன்பு, கடமையைச் செய்யும் உறுதி, உயிரையும் தியாகம் செய்யும் மனோதிடம் ஆகியவைகளை நமது உடைமையாக்கி விட்டால், உலகில் எந்த சக்தியும் நம்மைத் தோற்கடிக்க முடியாது. இந்நிலைமையில் நான் உங்களுக்குத் தருவதெல்லாம் என்ன? பட்டினி-தாகம்-கஷ்டம்-மரணம் இவைதான். வேறெதையும் என்னிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ஆண்டவன் அருளும் நாட்டு மக்களின் நல்லாசியும் நமது வெற்றிக்குத் துணை புரியுமாக!"

இப் பிரசங்கத்தைக் கேட்ட வீரர்களின் இரத்தத்திலே ஓர் புதிய வேகமும், மனதிலே தெளிவும் உண்டாயிற்று. அன்று முதல் சுபாஷ் பாபுவை நேத்தாஜி என்று அழைக்கத் தொடங்கினர் கிழக்காசிய இந்தியர்கள். பிற நாட்டாரும் அவ்வாறே அழைத்தனர். மலேயா-பர்மா-தாய்லாந்து ஆகிய இடங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கினார். சென்றவிடமெல்லாம் பல்லாயிரக் கணக்கான மக்கள் வரவேற்றனர். அன்னிய நாட்டினரும் அவ் வரவேற்புகளில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும். விறு விறுப்புக் கொண்ட பிரசங்கங்கள் நேதாஜியின் தலைமை கிழக்காசிய இந்தியர் அனைவரையும் ஒன்று சேர்த்தது. ஒவ்வொரு கூட்டத்திலும் காங்கிரஸ் மகா சபையின் 60 ஆண்டுச் சரித்திரத்தையும் அதன் போராட்ட

சக்தியையும் விளக்கினார். ஆயுதமெடுத்துப் போர்செய்ய இயலாதிருந்த நிலையைத் தெளிவு படுத்தினார். பிரிட்டன் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தக் கையாண்டு வரும் முறைகளை மக்கள் முன்னிலையில் அலசினார். இந்தியாவுக்கு வெளியே யிருக்கும் இந்தியர்களின் கடமையை வலியுறுத்தினார். கேட்டோர் மனம் நெக்குவிட்டது, தேசாவேசமும் தியாக உணர்ச்சியும் புகுந்து கொண்டன. ஆண் பெண், சிறுவர்—முதியோரனைவரும் துள்ளி யெழுந்தனர். ஈன்ற அன்னையின் உதிரத்தை உறிஞ்சும் அரக்கனைப் பிளந் தெறிய ஆயுதம் ஏந்தினர். தங்கள் தங்கள் உடைமை யனைத்தையும் போருக்கே உரிமையாக்கினர்.

௨௫. மூன்று முக்கிய நிகழ்ச்சிகள்

1943 ஜுலை 12-ம் தேதி இந்தியப் பெண்களின் பொதுக்கூட்டம் மூசசுத் திணறும்படியாக நேதாஜியை அலங்கரித்தன பெண்கள் அணிவித்த மாலைகள். அடுப் பூதும் பெண்களென நம் ஒதுக்கிவைத்த இந்திய மாதர் களின் உள்ளத்திலே, புரட்சிக் கனலைப் புகுத்த முனைந் தார் நேதாஜி.

"சகோதரிகளே! நம் நாட்டில், சுதந்திர இயக்கத்தில் இதுவரை பெண்கள் கொண்டுள்ள பங்கு என்ன வென்பது உங்களுக்கே தெரியும் காந்திஜியால், 1921-ல் இந்தியா புத்துயிர் பெற்றது; அது முதல் பெண்கள் எடுத்துக் கொண்ட பங்கு மகிழ்ச்சிக்குரியதேயாகும் சுற்றுப் பிரயாணம் — பிரசாரம் — தேர்தல் நடவடிக்கை- சட்டமறுப்பு-சிறைவாசம்-தடியடி-அடக்குமுறை- துன்பம் எல்லாவற்றிலும் ஆண்களுக்குப் பெண்கள் சளைக்கவில்லை. இரகசியப் பயங்கர இயக்கங்

களிலும் கூட பங்கு பெற்றனர். அவசியம் நேர்ந்தால் துப்பாக்கி ஏந்தவும் பெண்கள் முன் வருவரென்பது, அன்றைக்கே எனக்குத் தெரியும். அவ்வளவு வீரமுள்ள உங்கள் மீது நான் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

எந்த சாம்ராஜ்யமும் தோன்றியது போலவே அழிந்துவிடுமென்பது சரித்திரம் உணர்த்தும் பாடம். பின் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் அதற்கு விலக்கல்ல. ஆதலால், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விரட்ட வேண்டியது உங்கள் கடமை. யாரேனும் துப்பாக்கி ஏந்துவது பெண்களுக்குத் தர்மமல்ல வென்க் கருதலாம் அவர்கள் நம் பண்டைச் சரித்திரத்தைச் சிறிது புரட்டிப் பார்க்க வேண்டும். இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போர் 1857-ல் நடைபெற்றது. அன்று வீர ஜான்ஸிராணி என்ன செய்தாள் தெரியுமா! உருவிய வாளுடன் குதிரையின் மீதேறி—படை திரட்டி—போர்க்களம் புகுந்து—யுத்தம் செய்தாள். அந்த வீர ராணி தோல்வி கண்டது நமது துரப்பாக்கியந்தான். ஆனால் அவள் மேற்கொண்ட கடமை இப்பொழுது உங்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த வீர ராணியின் தோல்வியை இன்று வெற்றியாக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்திருக்கிறது. இப்பொழுது நமக்கு வேண்டுவது ஒரு ஜான்ஸி ராணியல்ல, ஓராயிரம் ராணிகள் வேண்டும். உங்களைப் பின் பற்றுபவர்களுக்கு உங்கள் வீரம் வழிகாட்ட வேண்டும்''

என்று முழங்கினார் நேதாஜி.

இவ்வாறு, உணர்ச்சி வீறிட்டெழுந்த சொன்மாரிகளால் கிழக்காசிய இந்தியர்களனைவரும் தட்டி எழுப்பப்பட்டனர். இந்தியச் சுதந்திரக் கழகத்தில் பெரும் மாற்றங்

களும் சீர்திருத்தங்களும் தீவிரமாக நுழைந்தன. இந்தியத் தேசிய ராணுவம் முற்றிலும் திருத்தி யமைக்கப்பட்டது. ராணுவ முகாம்கள் திறக்கப்பட்டன. சிங்கப்பூரிலும் பினாங்கிலும் இரண்டு ஆஸாத் இராணுவப் பயிற்சிக் கூடங்கள் காட்சி தந்தன. மூன்று மாதகால அளவிலும் ஆறுமாத கால அளவிலும் ராணுவப் பயிற்சி பெற்றனர் மக்கள். படையிலுள்ள அனைவருக்கும் பொதுப் பாஷை யாகிய ஹிந்தி தெரியாததால் மொழிபெயர்ப் பாளர்கள் தேவையாயினர். மொழிபெயர்ப்பாளர்களுக் கென ஏற்பட்ட பயிற்சி முகாம்கள் வேலை செய்தன. இரு நூற்றுக்கும் அதிகமான தொண்டர்கள் அம் முகாம்களில் பயின்றனர்.

இம் மாதிரியான நவீனங்களுக்கிடையே ஆகஸ்டு 9ம் தேதி வந்துவிட்டது. கிழக்காசியாவிலும் மலேயாவிலு முள்ள ஒவ்வொரு சந்து பொந்திலும், அந்த தினத்தை— இந்தியப் புரட்சியின் முதல் வருடத் தினமாகக் கொண் டாடினர் மக்கள். இந்தியத் தலைவர்களின் படங்கள் ஊர்வலங்களை அலங்கரித்தன. பொதுக்கூட்டங்களில் புரட்சிக் கர்ஜனைகள் எதிரொலித்தன. பிரரார் பார்க்கில் முப்பதாயிரம் இந்தியர்களுக் கதிகமாகவே கூடி அந்த தினத் தைக் கொண்டாடினர். அக் கூட்டத்தில் நேதாஜி பேசினர் —

“இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் வெளியேற வேண்டுமென்று கேட்ட குற்றத்துக்காக, காந்திஜி சிறையில் அடைபட்டு இன்றோடு ஓராண்டு பூர்த்தியாகிறது. அன்று முதல் பொது மக்களின் சட்டமறுப்பும் நாசவேலைகளும் அங்கு நடந்து கொண்டிருக்கின்றன, ஆயினும் சுதந்திரம்

கிடைத்தபாடில்லை. ஆதலால் இந்தியாவிலுள்ள தியாகிகளுக்குத் துணையாக இநதோ பாமா எல்லையில் நாம இரணடாம் போர்முனையைத திறகக வேணடியவாகளாக இருககின்றோம். இநத 2-ம் போர்முனை மூலம, இநதியாவிலுளள பொதுமககளும் ராணுவப் புரட்சி செய்யும்படி நாம் உதவ வேணடும் இல்லாவிட்டால சுதநதிரம் கிடைப்பது அரிதுதான் இநதியச் சுதநதிர இயககததுககு எனது முஸ்லிம் சகோதரர்கள அளிததுவரும வர வேற்புககும பண முடிப்புகளுககும வநதனம. இனறு கிழககாசிய இநதியாகளனைவரும, சாதி மத வேறறுமையின்றி விடுதலைப போருககுத தயாராக இருககினறாகளென்பதை, உலக மககள் அறிநது கொளளட்டும. நம எதிரிகளும தெரிநது கொள்வாாகளாக! இனனும ஒனறிரணடு மாதங்களில நம சேனையின பெரும் பகுதி பாமாவை நோககிச செலலும, பினனா இநதியாவுககுளளே நுழையும ''

பதினாறு நாடகள சென்றன. 1943 ஆகஸ்ட 25-ம் தேதி யனறு, இநதியச சுதநதிரச சேனையின தலைமை அதிகாரததையும நேததாஜியே ஏறறுககொணடாா அவ வமயம ராணுவததுககு இடட உததரவு சரிததிரத்திலேயே சிறநத இடததைப பெறறு விட்டதெனபதில் எளளளவும ஐயமிலலை.

' இநதியச் சுதநதிரக கழகம் — ஆஸாத ஹிநத் ராணுவம ஆகிய இரண்டின நலனை முனனிட்டு சேனையின தலைமை அதிகாரத்தை இனறு முதல நானே நேரடியாக எடுததுக கொளகினறேன இந நிகழசசி எனககு மகிழசசியும் பெருமையும தருகிறது. இநதிய விடுதலைச சேனையின் தளகாததரக இருப்பதைவிட ஒரு இநதியனுககு

வேறென்ன பெருமை வேண்டும்? என தேசமக்கள் நாற்பது கோடியினருக்கும் நான் ஊழியன். அந்த நாற்பது கோடியினருக்கும் பாதுகாப்பு அளிக்கவும், ஒவ்வொரு இந்தியனும் என மீது பூரண நம்பிக்கையுடனிருக்கவும் நான நடந்து கொள்ளவேண்டுமென உறுதிகொண்டிருக்கிறேன். பரிசுத்தமான தேசீயம்- பூரண சமத்துவம்-நேர்மையான நீதி இவைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தியச் சுதந்திரச் சேனையை அமைத்திருக்கிறேன். எதிர் நோக்கியிருக்கும் போராட்டத்தில் இந்தச் சேனைக்குத்தான் பெரும் பங்கு பின்னர் நாற்பது கோடி மக்களின் நலனெண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட சுதந்திர இந்திய சர்க்கார் தோன்றும். அத்துடன் அந்த சர்க்காரை நிரந்தரமாகப் பாதுகாக்க நிரந்தர ராணுவத்தைச் சிருஷ்டிக்கவும் ஓர் பெரும் பொறுப்பும் நம்மைச் சார்ந்ததுதான்

இவைகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்க, நாமனைவரும் ஒரே தலைமையின் கீழ் ஒரே ராணுவத்தில் - கட்டுப்பாடுடன் ஐக்கியமாகிவிட வேண்டும். நமது லட்சியம் இந்தியாவின் பரிபூரண விடுதலை. அந்த லட்சியத்துக்காக உயிரையே அர்ப்பணிக்க நேர்ந்தாலும் தயாராக இருக்க வேண்டும். சுதந்திரத்துக்காக அணிவகுத்து நிற்கும் நமக்கு, ஆஸாத் ஹிந்த சர்க்கார்தான் பாதுகாப்புச் சுவர். முன்னேறும்போது இரயில் இயந்திரம் வண்டிகளை இழுத்துச் செல்வதுபோல் நம்மை அது இழுத்துச் செல்லும் ஆதலால் இராணுவத்துக்கு எவ்வளவு பொறுப்பு உண்டோ, அவ்வளவு பொறுப்பு சர்க்காருக்கும் உண்டு. நம்மை சோர்வடையாமல் பாதுகாக்கும் வேலையை சர்க்கார்தான் மேற்கொள்ள முடியும்.

நமது பொறுப்பு எளிதல்ல; போர் நீண்டதாகவும் கடுமையாகவுமேதான் இருக்கும். எனினும் இறுதி வெற்றி நமக்கே தானென்ற திடநம்பிக்கை கொண்டிருக்கிறேன். உலக ஜனத்தொகையில் ஐந்திலொரு பகுதியினராகிய நமக்கு விடுதலைபெற உரிமையுண்டு. அதற்காக எவ்வித தியாகம் செய்யவும் தயாராகிவிட்டோம். இனிமேல் உலகில் எந்த சக்திக்கும் நம்மைத் தடை செய்யவோ உரிமையைப் பறிக்கவோ முடியாது.

தோழர்களே! இராணுவ அதிகாரிகளே! உங்கள் உதவியும் நாணயமும் பெற்றுள்ள சர்க்கார் இந்திய விடுதலைக்கு அரணாக இருக்கும். நமக்குத்தான் வெற்றியென்பதை உறுதி கூறுகிறேன். ஏற்கனவே நமது வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. 'சலோ டில்லி!' என்ற மந்திரத்துடன் முன்னேறுவோமாக! டில்லி செங்கோட்டையில் அணிவகுப்பு நடத்தும்வரை முன்னேறுவோமாக! 'சலோ டில்லி!' இதுதான் ராணுவத்துக்கு நான் இடும் கட்டளை.''

உசு காந்தி ஜெயந்தி'

போருக்கான முஸ்தீபுகள் தயாராகிக் கொண்டிருந்தன.

1943 செப்டம்பர் மாதம் 26-ம் தேதியன்று நேதாஜி ரெங்கூனுக்குச் சென்றார். சுதந்திர இந்தியாவின் கடைசிச் சக்கரவர்த்தியாக வாழ்ந்த பகதூர்ஷாவின் சமாதியிலே, அன்று ஓர் விழா. அதில் கலந்துகொண்டார் நேதாஜி. அவர் சித்தக் கடலிலே சத்திய அலை எழுந்தது. பகதூர்ஷாவுக்குத் தலை வணங்கியதும் பாராட்டுரை பகன்றார்:

"சுதந்திர இந்தியாவின் கடைசிச் சக்கரவர்த்தியினது எலும்புகள் பர்மாவில் இருக்கின்றன. சுதந்திரப்

பர்மாவின் கடைசிச் சக்கரவர்த்தியினது எலும்புகள் இந்தியாவில் இருக்கின்றன. இப்படி யிருப்பது அதிர்ஷ்ட வசமான அறிகுறிகளே. மனிதரிடையே மன்னராக விளங்கியவர் பகதூர்ஷா. மனிதத் தன்மை மூலமாகவே தனது சிறந்த ஆட்சியையும் நடத்தி வந்தார். அந்த சுதந்திர இந்தியாவின் கடைசிச் சக்கரவர்த்தியான — பகதூர்ஷாவின் அஸ்தி முன்னால், நாம் பிரதிக்ஞை எடுத்துக் கொள்வோமாக! எவ்வித துன்பத்தையும் பொருட் படுத்தாமல் தியாகம் செய்வோமாக! பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் பொது எதிரியான பிரிட்டன், இத் தேசங்களிலிருந்து கடைசியாகத் தொலையும்வரைப் போரிடுவோமாக! எதிரியை விரட்டி விட்டு தாய்நாட்டில் சுதந்திரத்தை நிலை நிறுத்துவோமாக! சுதந்திர மனித சமூகங்களுடன் தோழமைகொண்டு, புது உலகை நோக்கி முன்னேறுவோமாக!

பகதூர் ஷா உயிருடனிருக்கும் போது, ஒரு சமயம் ஹிந்தியில் ஓர் செய்யுள் இயற்றி நமக்கு அருளியிருக்கின்றார். சொல்லுகிறேன் கேளுங்கள் —

இந்தியச் சுதந்திரப் போர்வீரன் தேசிய
அருட் சுடர் இறுதி யுறினும்
சிந்திட அச்சுடர் ஒன்றிருப் பினும்அது
செறுக்குடைச் சிந்தை லண்டன்
நெஞ்சினைப் பிளந்துயி ருண்டுபோர் வெற்றி
நிறைகொளும் நெடிய வாளாமே!

இது தான் அவர் நமக்கு விட்டுச் சென்ற வாய்மை. நமது உயிருள்ளளவும் நம் மனதை விட்டு இவ் வாய்மை அகலலாகாது.”

அங்கிருந்து மீண்டும் சுற்றுப் பிரயாணத்தைத் தொடங்கினார். பாங்காக் வந்து சேர்ந்ததும், அக்டோபர் மாதம் 2-ம் தேதி வந்துவிட்டது. அன்று உலகம் போற்றும் மகாத்மா காந்திஜியின் பிறந்த தினம். உலக முழுமையும் கொண்டாடுவது போலவே கிழக்காசிய நாடுகளிலும் அந்த தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நேதாஜியும் அவ் விழாவில் கலந்துகொண்டார். உலகமெங்குமுள்ள இந்தியர்களுக்கு, காந்தி ஜெயந்திச்சொற் பெருக் கொன்றை பாங்காங் ரேடியோவில் ஒலி பரப்பினார் தாய் நாட்டின் சரித்திரக் குறிப்புகளையும் இந்தியர்களின் கடமையையும் நன்கு உணர்த்திய அப் பிரசங்கத்தில் எந்த இந்தியன் தான் அசட்டுத்தனம் காட்ட முடியும்? நேதாஜி பேசினார் —

"இன்று, உலக முழுதுமுள்ள இந்தியர்கள், தங்கள் ஒப்பற்ற மாபெரும் தலைவர் மகாத்மாஜியின் 75-வது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றனர். இப் புனித தினத்தில், நாமும் நமது அன்பையும் மரியாதையையும் அன்னாருக்குச் செலுத்தித் தலைவணங்கக் கடமைப்பட்டுள்ளோம். அவரது வாழ்க்கையும் போராட்டங்களும் சத்திய சோதனைகளே யாகும். அவைகளைத் திரும்பவும் நான் எடுத்துக் கூறுவதென்றால் இந்தியர்களின் அறிவை அவமதிப்பவனாவேன். ஏனெனில், காந்திஜிக்கும் நம் இந்தியர்களுக்கும் அவ்வளவு தொடர்பு உண்டு. ஆகவே, இந்தியப் போராட்டச் சரித்திரத்தில் அவர் வகித்து வரும் இடத்தை மட்டும் மதிப்பிடுவதில் இந் நேரத்தைச் செலவிடுவது தான் நல்லது.

நம் தாய் நாட்டுக்கும் அதன் விடுதலைக்கும் காந்திஜி செய்துள்ள சேவைக்கு, ஈடும் இணையும் சரித்திரத்தி

லேயே கிடையாது. சரித்திரத்தில் அவரது பெயர் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டு விட்டது. என்றென்றும் நிலையான ஒளியையும் அது வீசிக் கொண்டிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. காந்திஜியின் ஸ்தானத்தை மதிப்பிட, பண்டைச் சரித்திரத்தைச் சிறிது மேலெழுந்தவாரியாக வேனும் சொல்லித்தானாக வேண்டும்.

இந்திய மண்ணில் முதன் முதலாக ஆங்கிலேயர் காலடி வைக்குமுன், அங்கு பாலும் தேனும் பொழியச் செல்வம் கொழித்துக் கொண்டிருந்தது தான் உங்களுக்குத் தெரியுமே! அந்த வளப்பம் தான், வறுமையும் ஏழ்மையும் கொண்டிருந்த ஆங்கிலேயர் மனத்தைக் கவர்ந்ததென்பதும் உங்களுக்குத் தெரியும். ஆதலால் இந்தியாவை ஆக்ரமிக்க பிரிட்டிஷார் என்னென்ன முறைகளைக் கையாண்டன ரென்பதை ஆராய்வோம். இந்த ஆராய்ச்சியில் ஓர் உண்மை தெளிவாகும். இந்தியா முழுமையையும் ஒரே சமயத்தில் கைப்பற்ற அவர்கள் துணியவில்லை, இந்தியரனைவரையும் எதிர்த்து எந்த இடத்திலும் யுத்தம் செய்யவும் முயலவில்லை. அவர்கள் கையாண்டதெல்லாம் தந்திர முறைகளே.

முதன் முதலாக, லஞ்சம்—வஞ்சகம்—ஒழுங்கீனம் ஆகியவைகளால் செல்வாக்குத் தேடினர் பின்னர் அவைகளுக்கு ஆளான மக்களைத் தங்கள் சுய நலனுக்கும் பாதுகாப்புக்கும் உபயோகித்துக் கொண்டனர். வங்கச் சரித்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மதப்பற்றோ வகுப்புப் பூசலோ இன்னதென்று தெரியாத அக்காலத்தில் படைத் தலைவனான மீர்ஜாபருக்கு சிம்மாசனம் அளிப்பதாகக் கூறினார்கள், அவனும் இசைந்தான், தங்கள்

நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர் பிரிட்டிஷார். அத்துடன் தங்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். கடைசி வங்க மன்னன் சுராஜ் தௌலாவுக்கு, சேனாதிபதி மீர்ஜாபர்தான் துரோகம் இழைத்தான். பொது எதிரியான மாற்றானுக்கு, முஸ்லிமை முஸ்லிம் காட்டிக் கொடுத்தான். ஆனால் மோகன்லால் (இந்துப் படைத் தளபதி) மட்டும் மன்னனுடன் இறுதிவரை நின்று போராடினான். இந் நிகழ்ச்சி நமக்கோர் படிப்பினை. துரோகச் செயல்களையும், காட்டிக் கொடுக்கும் தன்மையையும் உடனுக்குடன் ஒழித்துக்கட்டாவிட்டால், எந்த நாடும் தன் சுதந்திரத்தை இழந்துவிடும் என்பதில் என்ன சந்தேகம்? சுராஜ் தௌலாவின் வீழ்ச்சி நம் துரதிர்ஷ்டமே!

அந்த வீழ்ச்சியின் பின்னரேனும் இந்தியர்கள் ஒருமுகப்பட்டு எதிர்த்திருந்தால், பிரிட்டிஷாரை எளிதில் விரட்டி யடித்திருக்கலாம். போராடாமலா இருந்தனர்? போராடத்தான் செய்தார்கள், ஒருமுகப்பட்டு போராடவில்லை என்பதுதான் வருந்தத்தக்கது. வங்கத்தை பிரிட்டிஷார் தாக்கியபோது, அவர்கள் பின் புறத்திலிருந்து யாரும் பிரிட்டிஷாரைத் தாக்கவில்லை. தென்னிந்தியாவில் திப்பு சுல்தானை பிரிட்டிஷார் எதிர்த்தார்களே, அப்பொழுதேனும் மத்திய இந்தியாவிலிருந்த மகாராஷ்டிரர்களோ — வட இந்தியாவிலுள்ள சீக்கியர்களோ திப்புவுக்கு உதவினார்களா? அதுவுமில்லை. வங்க வீழ்ச்சிக்குப் பிறகு கூட, இவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டு நடவடிக்கை யெடுத்திருந்தால், மிக எளிதில் பிரிட்டிஷாரை வெளியேற்றி யிருக்கலாம். இப் பழைய சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ள

வேண்டியதென்ன? எதிரியின் முன் இந்தியர்களனைவரும் ஒன்றுபட்டு நிற்காவிட்டால் சுதந்திரம் பெறவும் முடியாது, ஒருக்கால் பெற்றாலும் அதைக் காப்பாற்ற முடியாது என்பதுதான்.

வேதனை தரும் இப் பரிதாப நிலைமையிலிருந்து இந்தியர்கள் விழித்தெழ நீண்ட காலம் பிடித்தது. 1857-ல் தான் விழித்தெழுந்தனர். ஆங்காங்கு ஒருமுகத் தாக்குதலை இந்தியர்கள் கையாண்டனர் இந்த நிகழ்ச்சியைத்தான் "சிப்பாய்க் கலகம்" என்று பிரிட்டிஷார் வர்ணிக்கின்றனர் நாமோ, அதனை 'முதலாவது சுதந்திரப் போர்' எனத் தலை நிமிர்ந்து கூறுகின்றோம். இந்த முதல் போரிலும் நமக்குத் தோல்விதான் அதற்கு இரு காரணங்கள் கூறலாம். ஒன்று, இந்தியாவின் எல்லாப் பாகங்களும் ஒன்று சேரவில்லை, மற்றொன்று எதிரிகளின் ராணுவ நுணுக்கமும் போர்க்குணமும் அது சமயம் இந்தியர்களுக்கில்லை. ராணுவ நீதியில் பார்த்தால், நம் தளகர்த்தர்களைவிட எதிரித்தரப்புத் தளகர்த்தர்கள் சிறந்தவர்கள் ஆகவே இந்தப் பலவீனத்தை நாம் என்றைக்கும் மறப்பதற்கில்லை. 1857-ம் ஆண்டுத் தோல்விக்குப் பின் நம்மிடமிருந்த ஆயுதங்களையெல்லாம் பறிமுதல் செய்து விட்டார்கள் ஆங்கிலேயர்கள். நிராயுதபாணிகளாகிய அந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் பெருந் தவறு செய்து விட்டோம். ஆயுதப் பறிமுதலுக்கு இடமளித்திருக்கவே கூடாது. அப்படி இடமளிக்காமல் இருந்திருந்தால், மற்றொரு சுதந்திரப் போரைக் குறைந்த கால அளவில் நடத்தி வெற்றி கண்டிருக்கலாம். ஆயுதப் பறிமுதல் காரணமாகவே, அரசியல் ரீதியாக வீழ்ச்சியடைந்து விட்டோம். அதோடு முப்பது ஆண்டுகள்வரை மனச் சோர்வும் நம்மிடம் குடி புகுந்து விட்டது.

1885-ம் ஆண்டு பிறந்தது இந்தியக் காங்கிரஸ் மகாசபை தோன்றிற்று. அது ஓர் புதிய அரசியல் எழுச்சியை நமக்குத் தந்து தொடங்கிற்று அக் காலத்திய காங்கிரஸ் தலைவர்கள், பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் கேட்கவும் துண்டித்துக் கொள்ளவும் அஞ்சினார்கள். 1905-ல் அரவிந்தர் தோன்றினார். "பரிபூரண விடுதலை" கோஷம் உண்டாயிற்று. அக் கோஷத்தின் செயல் முறைகள் இன்று தான் அமுலுக்கு வந்திருக்கின்றன. வங்கப் பிரிவினையைச் சகியாத மக்கள், பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிக்கத் தொடங்கினர். அந்தப் பொருளாதாரப் பகிஷ்காரம் மட்டும் இளைஞர்கட்குத் திருப்தியளிக்கவில்லை. வெடிகுண்டிலும் ரிவால்வரிலும் கவனம் செலுத்தினர் இளைஞர்கள். அதற்காகவே கடல் கடந்து சென்று பயங்கர இயக்க முறைகளையும் பயின்றனர். ருஷ்யப் புரட்சி—அயர் புரட்சி போன்ற சரித்திரங்களைப் புரட்டினர்

அதுசமயம்தான் முதலாவது மகாயுத்தம் என்னென்னவோ வாக்குறுதிகளைக் கொடுத்தனர் பிரிட்டிஷார் அவ் வாக்குறுதிகளை நம்பியதால் இந்திய ரத்தமும் இந்தியப் பணமும் பொருளும்தான் விரயமாயின. பிரிட்டிஷார் வெற்றி பெற்றதும் அவர்கள் வாக்குறுதிகளெல்லாம் ஆடிக்காற்றுப் பட்டமாயின, தலைவர்கள் ஏமாற்றப்பட்டனர், அடிமைத் தளையும் இறுகத் தொடங்கிற்று. ஆனால் அந்தப் புனிதப் புரட்சிக்கார இளைஞர்கள் மட்டும் ஏமாந்து போகவில்லை, நாட்டில் பெரும் கொந்தளிப்பையும் புரட்சியையும் உண்டுபண்ண, தங்களாலானதையெல்லாம் செய்தார்கள். துரதிருஷ்ட வசமாக அவர்களும் தோல்வியடைந்துவிட்டனர்.

உலக யுததம முடிநததும, கொடுத்த வாககுறுதிபபடி விடுதலையை வேண்டினா இநதியத் தலைவாகள். கிடைதத பலன என்ன? 1919-ம வருட ரௌலட் சட்டம்தான். கொஞசங் கொஞசமிருநத உரிமைகளையும அநத இருட டறை மோசடிச சட்டம பறிமுதல செய்துவிட்டது. அதைப பினதொடாநதது பஞசாப படுகொலை. இவ விரண்டு சோக நாடகங்களும மககளைக கதிகலங்க வைத தன. சுதந்திர முயறசிகளை யெலலாம, மிருகததனமான ஆயுத பலததால நசுககிவநத பிரிடடிஷாாமீது, இநதியா களுக கிருநத கோபம எரிமலை போலிருநதது இருந் தாலும நமபிககை பிறககவிலலை. புதிய வழிகளுககாகவும புதிய போராச சாதனஙகளுககாகவும தடுமாறிக கொண்டிருநதனா.

காரிருள கவிநத அநநேரததில அரசியல வானில தோன்றினா காநதிஜி ஒததுழையாமை அலலது சததி யாகரகம என்ற ஒளி பெறும ஆயுததைத, நிலை கலங்கிய நம மககளிடம கொடுத்தாா. விடுதலைககு வழி காட்டும பொருட்டு 'இறைவனால அனுபபப பெறற தூதா—காந்தியடிகள' என்ற உணாசசியும நமபிககையும் பிறநதன. அவரது தலைமையில மககள ஒன்று பட்டனா. 20 ஆண்டுகளுக கதிகமாகவே இநதிய விடுதலைககு உழைக் கிறாா காநதியடிகள. இபபொழுது ஒவவொரு இநதியன முகததிலும தனனமபிககையும உறுதியும சுடா விடுகிற தென்றால, அவாதான காரணம இநதியாவின இறுதி வெறறி அவரால தான ஊாஜிதபபடுததப படுகிறது. அன்று 1920-ல காநதியடிகள புதிய ஆயுதத்துடன் இநதிய அரசியல் வானில புகுநது பொறுபபேறறிருககா விட்டால, இன்று கூட இந்தியா வீழசசி யடைநது தான

கிடைக்கும். அவரது சேவைககு ஈடும இணையும உலகில் கிடையாது. அச சேவையின மூலம வாழ்நாளிலேயே அவா அடைந்திருககும பேறுபோல, உலகில் எந்த மனிதனும எககாலததிலும அடைய முடியாது.

அவரது சேவையால தான தேசியச சுயமரியாதையும் தன்னமபிககையும பெறறுளளனா இந்திய மககள். இன்று புரட்சிக கனல் கொழுந்து விடுவதறகும அவரது சேவை தான காரணம். இந்தியாவின ஒவவொரு மூலை முடுககு களிலும வியாபிததது, எலலா மககளின பிரதி நிதிததுவத் தையும பெறறு, ஓா மாபெரும அரசியல ஸ்தாபனமாகக் காஙகிரஸ் விளஙகுவதறகும அவா தான காரணம். விடுதலைப பாதையில உறுதியுடன முன்னேற, காந்திஜி நமககுக கறபிததது விட்டாா இந நேரம காந்திஜியும இதர தலைவாகளும சிறைக கூடஙகளில தவங கிடக் கின்றனா. காந்திஜி விட்டு வைததிருககும வேலையை, இந்தியாவிலும வெளியிலுமுளள இந்தியாகளாகிய நாம ஒவவொருவரும நிறைவேறறக கடமைபபட்டிருககிறோம. இந்த இறுதிப போருககான எலலா வசதிகளும தாய் நாட்டு மககளிடம இருககின்றன. ஆனால ஒன்று மட்டும அவாகளிட மிலலை. அது தான சுதந்திர ராணுவம. அந்த ராணுவ உதவி வெளியே யிருந்து தான கிடைகக முடியும.

ஒரு நிகழ்சசியை உஙகள நினைவுககுக கொணடு வர விருமபுகிறேன. 1920 டிசமபரில் நாகபுரிக காங்கிரஸின போது காந்திஜி கூறினாா .—

‘இன்றைககு இந்தியாவிடம வாள் மட்டும இருககு மானால, இபபோது அதை உருவி யிருககும. ஆயுதம தாஙகிய புரட்சிககு இன்று இடமிலலை. ஆகையால

மாற்று நடவடிக்கையாக ஒத்துழையாமையும் சத்தி யாக்கிரகமும் தான் நமது ஆயுதங்களாகக் காட்சி தருகின்றன' என்று. அந்தக் காலமும் இன்று மலை யேறிவிட்டது. இந்தியர்களால் இன்று வாளை உருவ முடியும். அது பற்றியே தான், இந்திய விடுதலை ராணுவத்தை ஏற்கனவே நாம் அமைத்து விட்டோம்.

இந்தப் போராட்டம் மிக மிகக் கடினமானது மட்டு மல்ல, மிக நீண்டதாகவு மிருக்கும். இந்தியாவிலிருந்து வெளியேறியவர்கள் போக மீதியிருக்கும் கடைசி வெள்ளை யர்களைச் சிறையில் போட வேண்டும், அல்லது வெளியே துரத்த வேண்டும். அது வரை நாம் போராடித்தானாக வேண்டும். ஆதலால், நாமனைவரும் ஒன்று திரண்டு, கடுமை யானதும் மிகப் பெரியதுமான — ஆனால் இறுதியான ஒரு போருக்குத் தயாராகுவோமாக"

இத்தகைய ஆணித்தரமான சொற்பொழிவுகளும், எதிர்காலத்துக்கான சேகரிப்புகளும் அதி தீவிரமாக நடை பெற்றன. கிழக்காசிய இந்தியச் சுதந்தரச் சங்கத்தின் தலைமைப்பதவியை ராஷ் பிகாரி போஸிடமிருந்து பெற்றுக் கொண்ட 1943 ஜுலை 4-ம் தேதி முதல் அக்டோபர் 20-ம் தேதி வரை, மூன்றரை மாதங்களுக்குள் நேதாஜி செய்து முடித்த முஸ்தீபுகளை என்னென்பது? முப்பது ஆண்டுகள் முயன்றாலும் வேறு எவராலும் செய்ய முடியுமா? ஐ. ஸி. எஸ். தேர்ச்சிபெற்று, பிறந்த பொன்னாட்டில் கால் வைத்த நாள் முதல் இதுவரையுள்ள அவரது வாழ்க்கை அனுபவம், இடைவிடாது நேர்ந்த துன்பங்கள் எல்லா வற்றையும் ஒன்றாக இணைத்துப் பார்த்தால், வீரத்தால் வீறுகொண்டு பாய்ந்து செல்லும் ஓர் இரத்த ஆறு என்று தான் சொல்ல வேண்டும். வழியிலே தடுத்து நின்ற காடு முரடான காடுகளையும், மலைகளையும் முள் வேலிகளையும் கடந்து விட்டது இந்த இரத்த ஆறு; இந்தப் புண்ணிய

நதியின பிரவாகத்திலே கோடிககணககான இநதியாகள நீராடிப் பரிசுதத மெயதிவிட்டனா. செககச சிவநது சீறி அலறிககொண்டிருககும இரததக கடலிலே கலகக வேண்டுவதுதான பாககி. உலக மகாயுததமாகிய இரததக கடலும, இநத இரதத ஆறறின மகிமை கண்டு மகிழநது அணைததுக கொளள ஆவலுடன எதிா பாாததுக காததுநினறது.

௨௫. சரித்திரத்தில் புதிய சகாப்தம

1943 அகடோபா 21-ம தேதி இநதியாவின புதிய சகாபதம கிழககாசியா முழுமையும சிதறிக கிடநத 30 லடசம இநதியாகளின பிரதிநிதிகள சிஙகபபூரில கூடினா. தைதோவா கெகிஜோவில காலை 10-30 மணிககுக கூட்டம். கிழககாசிய இநதியச சுதநதிரக கழகததால கூட்டபபெறற இம மகாநாட்டுககு நேதாஜி தலைமை தாஙகினா. கோலாலம்பூா இநதியச சுதநதிரக கழகத் தலைவா ஸ்ரீ எம கே இராமசசநதிரன வரவேறபுரை ஆறறினா, மகாநாட்டுப பொதுக காரியதரிசியான ஸ்ரீ சாட்டாஜி அறிககை வாசிததாா. உணாசசி ததும்பிய உளளமும மலாநத முகமும கொணடு வீறறிருநதனா இநதியாகள. அவாகள முனனிலையிலே, நேதாஜி தனது தலைமை யுரையை ஹிநதுஸதானியில ஆறறினா. அறிககையும முனனுரையும தமிழில மொழி பெயாககபபட்டன.

பிறபகலில ஹிககாரி ஹிககான தலைவா கானல யமதோத்தும மகாநாட்டுககு விஜயம செயதிருநதாா நிபபொன, சுதநதிர பாமா, சுதநதிர பிலிபபைன ஆகிய மூனறு நாட்டு சாககாாகளுககும, அவை இநதியா

களுககுச செயதுவரும உதவிகளுககாக வாழததுச் செயதிகள அனுபபபபட்டன. அவவமயம் "ஆஸாத் ஹிந்த (சுதநதிர இந்திய) தறகாலிக சாக்கார்" அமைபபுப பறறிய பிரகடனததை 4-15 மணிககு நேததாஜி வெளியிட்டார. அப பிரகடனம ஹிநதுஸதானி, தமிழ, ஆங்கிலம ஆகிய மூனறு மொழிகளில வாசிககபபட்டது.

அபபொழுது கூறினா — சரிததிரததையும உலகின் பல பாகங்களில நடநதுளள புரட்சிகளையும ஆராயசசி செயதுளளவனென்ற முறையில, எனது 22 வருடப பொதுவாழவில என மனதில ஒரு விஷயம சதா உறுததி கொண்டே யிருநதது இநதியாவுககென ஓர சுதநதிர தேசிய ராணுவமும, அநத ராணுவததைப போருககு நடததிச செலல ஓர சுதநதிர சாககாரும வேணடுமே எனபதுதான அநத உறுததல. இனறு நிபபொன படைகள அடைநதிருககும வெறறி காரணமாக, கிழககாசியாவி லுளள இநதியாகள, இநதிய சுதநதிரக கழகத்தையும் இநதிய தேசிய ராணுவததையும அமைகக முடிநதது. அதனால கிழககாசிய இநதியச சுதநதிர இயககததுககு ஓர் உண்மை யொளியும உறுதியும கிடைதது விட்டன. இலலாவிட்டால இநதியச சுதநதிரககழகம சாவசாதாரண மான ஓர பிரச்சார ஸ்தாபனமாகவேதான இருககும. ராணுவம அமைககப பெறறுவிட்டதால, ஓர தறகாலிக சாககாரையும அமைபபது, சாததியமும அவசியமுமா யிறறு இநதிய விடுதலையின பொருட்டு இறுதிப போரை நடத்துவதறகாகவே கிழககாசிய இநதியச சுதநதிரக கழகததிலிருநது இநத அரசாஙகம பிறநதிருககிறது.

இநதத தறகாலிக சாககாரைக கொணடு, இநதிய நெருககடிகளைச சமாளிபபோம, இதோடு சரிததிரத்

தோரணையையும பினபறறுகிறேமெனறு கூறலாம. சமீப கால சரிததிரததைப புரடடுங்கள். ஐரிஷ் மககள அவர்களுடைய தறகாலிக சாககாரை 1916ல நிறுவினாாகள. செக நாட்டினரும் சென்ற உலக மகா யுததததினபோது இம மாதிரிதான செயதாாகள அதன பின்னா துருககியாகளும, முஸதாப கமாலின தலைமையில அவாகளது தறகாலிக சாககாரை அனடோலியாவில நிறுவினாாகள நமமைப பொறுதத வரையில, நம தறகாலிக சாககார் ஓா சாதாரண சமாதான அரசாஙகமலல இதன அமைபபும நடவடிககைகளும நிகரறறவையாகும. இது ஓா போா ஸ்தாபனமாகவே விளஙகும இநதியாவிலுள்ள பிரிட்டிஷாருககும அவாகளது நேசதேசததினருககும எதிராக இறுதி யுததததை நடத்துவதே இநத சாககாரின தலை சிறநத முககிய நோககம. ஆதலால, போரை நடததுவதறகு வேண்டிய இலாககககளே மடடுமே இவவர சாஙகம மேறகொண்டிருககிறது

இவவரசாஙகததில சிவில இலாகாப பிரதிநிதிகளாக ஒரு சிலாதான இருகக முடியும சுதநதிரபபோா நடததுவதையே முககிய நோககமாகக கொணடிருபபதால, ஆயுதம தாஙகிய படைகளுககு மநதிரி சபையில அதிகப பிரதிநிதிததுவம தரபபடடிருககிறது மநதிரி சபையில சாதாரண மநதிரிகளைததவிர, பல ஆலோசனையாளாகளும இருபபா நம தறகாலிக சாககாா, கிழககாசியாவிலுள்ள இநதியாளே வாகளுடனும நெருஙகிய தொடாபு வைததுக கொளளும. அதோடு அடுததுவரும போருககுத தேவையான அவாகளுடைய சகதி சாதனஙகளை யெலலாம திரடடும. இநதியப பூமிககு மாறறபபடடதும, சொநதப பிரதேசத்தில இயஙகும சாதாரண அரசாஙகததுககுரிய

எலலா அமசங்களையும இநத சர்ககார் பெறறு விடும். அபபொழுதுதான பல புதிய இலாகாககளுககு இட-முணடு.

இபபொழுது த ற கா லி க அரசாங்கம ஸ்தாபிககப் பெறறதால, இநதியச சு த ந தி ர இயககம, வெறறிககு வேண்டிய பூாவாஙக அமசஙகளததனையையும பெறறு விடடதாகினறது. விடுதலைககாக இறுதிபபோா தொடஙக வேண்டியதுதான பாககி நமது ராணுவம இநதிய எலலை தாண்டி உளளே நுழைநததும டிலலியில அதன சரிததிர பூாவமான பவனியை நடததும. இநதியாவிலிருநது பிரிட்டிஷாரும அமெரிககரும ஒழிககபபடடு புது டில்லியில வைசிராய மாளிகையில — இநதிய தேசியக கொடியை உலலாசமாகப பறககவிட்டால்தான போா முறறுப் பெறும.”

நேததாஜி இவவாறு கூறி முடிததும, தறகாலிக சாககாரின மநதிரிகளும ஆலோசகாகளும மேடையீதேறி அமாநதனா. மககளின குதூகல ஆரவாரம வானைப பிளந தது உலகததாரும இநதியர்களும எககாலததிலும கண டிருகக மாட்டாாகள — அககாட்சியை! நேததாஜியின் கமபீரத தோறறமும, திடசிததமும வெறறிககு உறுதி தநதன உணாசசிப பெருககில மூழகியிருநத மககள முனனிலையிலே நினறுகொணடு, சட்டைப பையிலே இருநத துண்டுக காகிதமொனறை எடுதது, ஆற அமர-அழுததம திருததமாகப படித்தாா. தேச விசுவாசப பிரமாணததை ஹிநதுஸ்தானியிலே படிககத தொடங் கினா

“சுபாஷசநதிர போஸாகிய நான, இறைவனமீது ஆணையாக,
(எல் றதும் நெஞசடைத்தது. எங்கும மெளனம.

உள்ளக் கேணியிலிருந்து பிறந்தன அவ்வார்த்தைகள். ஆதலால் அதன் புனிதத்தன்மை நாவை அசைக்க முடியாமலாக்கிறது. இந்நெருக்கடியான சமயத்தில், தான் எடுத்துக் கொள்ளவிருக்கும் பொறுப்பு மகத்தானதென்பதை அவரது அந்தராத்மா கூறிற்று. எல்லோருடைய கண்களும் நேதாஜியின் முகத்தில் படிந்தன, குமுறிய மனவெழுச்சியினூடே மானசீகப் பிரார்த்தனை. தன்னை மறந்த நிலைமையில் 40 கோடி இந்தியர்களையும் மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தினார் மிக்க சிரமத்துடன் தன்னைத் தேற்றிக்கொண்டு) என்றைக்கும் இந்தியாவின் ஊழியனாகவே இருந்து வருவேன் உடன் பிறந்த 40 கோடிச் சகோதர சகோதரிகளின் நன்மையைக் கவனிப்பதே எனது முழுமுதற் கடமை (மீண்டும் மௌனம். கண்களிலே நீர்த்துளிகள். சட்டைப் பையினுள்ளே வலதுகை சென்று, ஓர் வெண்ணிறக் கைக்குட்டையை வெளியே இழுத்து வந்து நேதாஜியின் கண்களிலே சேர்த்தது கண்களிலே படிந்த கைக்குட்டை நீர்த்துளிகளை உறிஞ்ச, மனதில் தேங்கிய உணர்ச்சி இடியோசையென்ன மீண்டும் வெளிக் கிளம்பிற்று) இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னரும், அந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்ற என் உடலில் கடைசிச் சிறு துளி இரத்தம் இருக்கும் வரை ஊழியம் செய்வேன்.''

இந்த மூன்று வாக்கியங்களைக் கொண்ட தேச விசுவாசப் பிரமாணத்தை, உணர்ச்சியின் ஆவேசக் குமுறலுக்கிடையே ஒருவாறு படித்து முடித்தார். மந்திரி சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். 'நேத்தாஜி'யிடம் பூரண விசுவாசமாக இருப்போம். தாய் நாட்டுக்காக உடல், பொருள் ஆவி யனைத்தையும் அர்ப்பணம் செய்வோம், ஆண்டவன்

மீது ஆணை' எனபது தான அநதப பிரதிகஞை. மநதிரி சபை அங்கத்தினாகள ஒவவொருவரிடமும நேதாஜி கை குலுககி, அவாகள விசுவாசததையும பிரதிகஞையையும ஏறறுக கொண்டார. தேசிய கீததுடன மகாநாடு இனிது நிறை வெயதியது.

புதிய சகாபததைதத தொடங்கி வைதத இம மகாநாடு, சரிததிரததிலே பொனனெழுததில இடம பெறறு விடடது. குமரி முதல இமயம வரை எலலாப பகுதிகளிலு முளள இநதியாகள கிழககாசியாவில வசிபபதாலும, அவாகளின பிரதிநிதிகளாக ஒவவொரு கிழககாசியப பகுதிகளிலிருநதும இநதியாகள அம மகாநாடடில கலநது கொணடதாலும, இநத மகாநாடடை நாறபது கோடி இநதியாகளும கலநது கொணட மகா நாடுதான எனறு துணிநது கூறலாம. ஆகவே, இநதியாகளின பிரதிநிதிகளால ஏக மனதாக ஏறறுக கொளளப பெறற-நேதாஜி அமைதத சாககாரை அம மகாநாடு ஒபபுக கொண்டதால 40 கோடி இநதியாகளும ஒபபுக கொணட சாககார தான இது எனறால யாரும மறுககமுடியாது

ஏதேனும ஒரு காலததில சுதநதிர மாயிருநத நாடு அடிமை நாடாக மாறலாம, இழநத சுதநதிரததைத திருமபப பெற அலலும பகலும உழைதது வெறறி பெறலாம சில நாடுகள. ஆனால, குமரி முதல இமயம வரை ஒரே கொடியின கீழ எனறுமே ஆளப பெறாத் இநதியா, பிரிடடிஷாரால தான ஆளப பெறுகிறதென்ற அவமானத்தைதத துடைத்து, இநதியாகளுக கெனச் சொநதமான சாககாரைக கண்டது இம மகாநாடுதான. அதுவும் சடட ரீதியான — ஜனநாயகப பிரதிநிதிததுவம

கொண்ட சர்க்காரை என்பதில் சந்தேகமில்லை. ஆகவே முதன் முதலாக இந்தியா பெற்ற சுதந்திர சர்க்கார் இது தான் என்பதும், அந்த முதல் சுதந்திர சர்க்காரின் முதல் தலைவர் நேதாஜி தான் என்பதும், இந்தியச் சரித்திரத்திலே எழுதப்பட்டு விட்டன. ஆதலால், காணாத புதுமையெல்லாம் கண்டு களிக்கும்படிச் செய்த அந்த 1943 அக்டோபர் 21-ந் தேதியை, இந்தியர்களின் புதிய சகாப்தம் பிறந்த தினம் என்றழைக்காமல் எப்படி யிருக்க முடியும்?

௨௯ துடைப்பம் தூக்கிய கையில்?

ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்கார் பிரகடனம் முடிந்தது. மறுநாள் (22—10—46) நண்பகலில் ஷோனன் சிங்கப்பூர் கோனன் கிளப்பில் ஓர் விருந்து. கிழக்காசியா முழுமையுமுள்ள இந்தியச் சுதந்திரக் கழகங்களின் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர். அதில் நேதாஜி சில முக்கிய விஷயங்களைக் குறித்து ஓர் சொற்பெருக்காற்றினார். விருந்தினர் ஒவ்வொருவரையும் தனித் தனியாகச் சந்தித்துப் பேச இயலாதது பற்றி வருத்தம் தெரிவித்து விட்டு, முன் தினம் விடுத்த பிரகடனத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டார். பிரகடனம் இந்தியாவுக்கு ஓர் புதிய சகாப்தத்தைத் தோற்றுவிக்கிற தென்றும் அதன் மூலம் ஓர் புரட்சிக்கு அடிகோலியாகி விட்ட தென்றும், ராணுவ வெற்றிக்குத் தேவையான பொருள் வசதியும் சப்ளைச் சாமான்களும் போதுமான அளவு இருந்தால்தான் வெற்றி சுலபமாகுமென்றும் விளக்கினார்.

மாலை 5 மணிக்கு இந்தியப் பெண்ணுலகின் புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. பல வருஷங்களுக்கு முன்

இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடி வீர சுவர்க்க மெய்திய ஜான்ஸி ராணி பிறந்த பொன்னாள் அக்டோபர் 22-ந் தேதி. அந்தச் சுப தினத்திலே நேத்தாஜி 'ஜான்ஸி ராணிப் படைப் பயிற்சி முகாமைத் திறந்து வைத்தா ரென்றால், அதைவிடப் பெருமை இந்தியப் பெண்களுக்கு என்ன வேண்டும்? உலகச் சரித்திரத்திலேயே பண்டைய இந்தியப் பெண்கள், உலகப் பெண்கள் கூட்டத்துக்குள் தலை சிறந்த வீரம் கொண்டவர்களென்பது உலகமறிந்த உண்மை. அந்த உண்மையை உலகம் மறந்திருந்த காலமும் உண்டு இந்தியர்களே மறந்து விட்டன ரென்றால் அதிகம் கூறுவானேன்?

1931-ம் ஆண்டில், 15 வயதான சிறுமி சாந்தி கோமில்லா ஜில்லா மாஜிஸ்திரேட்டிடம் சென்று "எங்கள் நீந்தல் போட்டிக்குத் தாங்கள் தலைமை தாங்கிப் பரிசளிக்க வேண்டும்" என்று கேட்டாள். அவள் மனதில் கனன்ற புரட்சி நெருப்பு இறைந்து கிளம்ப, அன்னாரைத் துப் பாக்கியால் சுட்டு வீழ்த்தினாள், அதற்காக ஆகமகிழ்ந்து ஆயுள் தண்டனையும் அனுபவித்தாள். 1932ல் வங்கக் கவர்னர் ஸ்டான்லி ஜாக்ஸனை, பெண்ணரசு வீணாதாஸ் சுட்டுத் தள்ளினாள். "கோட்டாப் பாக்கானுவில் காப்பிணி தாக்கப்பட்ட கொடுமை சகிக்க முடியவில்லை, நிரபராதி தங்கை கல்யாணி கைதி செய்யப்பட்டு சிறையில் அனுப வித்த சித்திரவதையை எப்படி மறக்க முடியும்? அதனால் என் பெற்றோர்கள் உகுத்த கண்ணீரைக் கண்டேன். இம் மாதிரி எத்தனை குடும்பங்கள் வருந்துமென்பது என் சிந்தையைத் தைத்தது. அதனாலெழுந்த மனக்கொதிப்பும் துயரமும் என்னைப் பிராணத் தியாகம் கொள்ளென்று கட்டளையிட்டன. வாழ்வதற்கு வழி தெரியவில்லை;

தேசத்துக்காகவே என்னை மாய்த்துக் கொள்வதென்ற தீர்மானத்துக்கு வந்தேன். என் போன்ற பெண்கள், பெண் தன்மையை மறந்து இத்தகைய கொடுஞ் செயல்களைச் செய்யத் தூண்டும் சர்க்காரின் அநியாயத்தை, என் மரணத்தால் இந்தியப் பெண் சமூகம் உணரட்டும்" என்ற வாக்குமூலத்தை விட்டுச் சென்றுள்ள அந்தப் பெண் திலகம்.

இதற்கும் வெகுநாள் முன்பு, முதன்முதலில் 1857ல் நடைபெற்ற சுதந்திரப் போரில், ஜான்ஸி ராணி இலட்சுமி பாய் தனது 20-ம் வயதில் — வாழ்க்கை நுகரவேண்டிய இன்பப் பருவத்தில், படை திரட்டி அதற்குத் தலைமை தாங்கி, வீரவாளேந்தி ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் புரிந்தாள். ஆண்களுக்குப் பெண் இளைப்பில்லை இந்தியச் சமூகத்தில், ஆகவே மாதர் படைப் பிரச்னை கிளம்பியதும், நூற்றுக் கணக்கான பெண்கள் அதில் சேர முந்தினர். அவர்களுள் 78 வயதான தமிழகக் கிழவி காமாட்சி யம்மையாரும் ஒருவர். இவ் வம்மையாரையும் அன்னார் வாய் மொழியையும் நினைக்கும் போது, பண்டைத் தமிழ்த் தாயின் வீரத்தையும் மிஞ்சி விட்டாளென்றே தோன்றும்.

இவ் வம்மையார் கூறினாள் "நான் படையில் சேருவதைத் தடுக்க யாராலும் முடியாது. யாரேனும் தடை செய்தால் உயிர் துறப்பேன். எனக்கென் உயிர் வாழ்ந்த காலம் போதும், எனது கடைசி காலத்தை யேனும் தேசத்துக்காக நடத்தும் இப் போரில் செலவிடுவதென முடிவு செய்து விட்டேன். இப் போரிலேயே என் வாழ்வின் இறுதியை அடையவும் ஆசைப்படுகிறேன்" என்று.

இம்மாதிரி, பேரன் பேத்திமார்களையுடைய பாட்டிமார்களை நேதாஜி படையில் சேர்த்தனரென்றால், தமிழ் இளம் பெண்கள் அதற்குப் பின்வாங்கியிருப்பார்களென்று யாரேனும் நினைக்க முடியுமா?

அன்றொருநாள் நடந்த சுதந்திரப் போரிலும் வீர ஜான்ஸி ராணியின் படைக்கு இலட்சுமிதான் படைதிரட்டித் தலைமை தாங்கினாள், அதே படையின் பெயரால் நிறுவப் பட்ட இந்தச் சுதந்திர ராணுவத்துக்கும் தமிழ் இளம் பெண் இலட்சுமிப் பெயருடையாளே தலைமை தாங்கினாளென்றால், ஆச்சரியந்தான். பண்டைப் பெருமையைத் துலங்க வைக்கவே இறைவன் செய்த திருவிளையாடல் போலும்! தூண்டுவாரின்றித் துடைப்பத்தை ஏந்தி வீட்டைச் சுத்தம் செய்த கைகள், துப்பாக்கி தாங்கித் தூரத்து அன்னியனைத் துரத்தியடிக்கவும் நாட்டைப் பரிசுத்தம் செய்யவும் விரைந்தன. கைகளிலே - கழுத்திலே - காலிலே - உடம்பிலே பூட்டியிருந்த பொன் விலங்குகளையெல்லாம் உருவி யெறிந்தனர். அவை உருமாறிப் போர்க்கள நிதியில் சேர்ந்தன.

இவ்வளவு தியாக சிந்தையைக் கண்ணுற்ற நேதாஜி மனம் பூரித்துத்தான் ஜான்ஸி ராணிப் படையை அமைத்தார். அதன் பயிற்சி முகாமைத் திறந்து வைத்து, வீரம் ததும்பிய சொற்பொழிவொன்றைச் செய்தார். அவ்வமயம் நடந்த கொடியேற்று வைபவம்-வரவேற்பு-ராணுவ அணிவகுப்பு ஆகியவைகளைக் கண்குளிரக் கண்டவர்கள், இந்தியப் பெண்ணுலகின் புதிய சகாப்தத்தையே கண்டார்களென்பதில் சந்தேகமில்லை.

நேதாஜியின சொறபொழிவைக கேடட அபபெண்கள கொணட உணர்சசியும எழுசசியும வர்ணிகக முடியாதவைகளே. ஒரு கணமேனும கடமையில தவறக கூடாதெனறும, ஒரு விநாடியேனும உறுதி தவறக கூடாதெனறும வைராககியம கொணடனா, 'அவமானததைத விட மரணமே மேல' எனபதை உணாநதனா. நேதாஜியின உதடு அசைநதால, பிரிடடிஷ ஆட்சியை ஆழப புதைபபதெனக கஙகணங கடடினா. இவாகளுககு ராணுவப பயிறசி—துபபாககிப பயிறசி—சொறபொழிவுப பயிறசியெலலாம தினசரிக கடமை யாயின

௨௭. போர்ப் பிரகடனம் அங்கீகாரம்

1943 அகடோபா 23-ம தேதி காலை 11 மணிககு, ஆஸாத ஹிநத தறகாலிக சாககாரை நிபபொன (ஜபபான) இமபீரியல சாககாா அஙகீகரிததிருபபதாக நேதாஜிககுத தெரிவிககப படடது. அநத அஙகீகாரததின சுருககமாவது — "இநதியாகளின நீண்ட நாள ஆவலாகிய சுதநதிர இநதியாவின உதயம சுபாஷ சநதிர போஸைத் தலைவராகக கொண்டு அமைககப படடுளள ஆஸாத ஹிநத் சாககாாதான எனபதை ஒபபுககொணடு அதன மீதுளள பூரண நமபிககையால நிபபொன சாககாா இநத ஆஸாத ஹிநத தறகாலிக அரசாஙகததை அஙகீகரிககிறது. மேலும இநத சாககாரின நோககம நிறைவேறும பொருடடு எடுததுக கொளளும முயறசிகளில, நிபபொன சாககாா எலலாவித ஒத்துழைபபும உதவியும அளிகக உறுதி கொண்டிருககிறது."

நிபபொன் பிரதமா டோஜோ 83-வது டயட சபைக் கூட்டததில இநதியா பறறியும அதன தறகாலிக

—சர்க்காருக்கு அளித்துள்ள அங்கீகாரம் பற்றியும் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தி, மனமார்ந்த வாழ்த்தையும் தெரிவித்தார். அன்றிரவு நடுநிசி 12–55 மணிக்கு, நேதாஜி ஆங்கிலோ அமெரிக்கா மீது ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் போர்ப் பிரகடனத்தை வானொலி மூலம் வெளியிட்டார். மறுநாள் 24-ம் தேதி காலை 10 மணிக்கு சிங்கப்பூர் (ஷோனன்) நகர சபைக் கட்டிடத்துக்கு எதிரேயுள்ள பாதாங்கில், ராணுவ அணி வகுப்பும், ஜான்ஸிப் படை அணி வகுப்பும் நடைபெற்றன. மற்றோர் புறம் ஆஸாத் ஹிந்த் பௌஜ் மோட்டார்ப் படையின் அணி வகுப்பு. 50000-க்கு மேற்பட்ட மக்கள் ஆரவாரத்துடன் அக் காட்சியைக் கண்டு களிக்கக் கூடியிருந்தனர். அவ்வமயம் அணி வகுப்பைப் பார்வையிட்டு, முந்திய இரவு விடுத்த போர்ப் பிரகடனத்தை, நேதாஜி மக்களின் முடிவுக்கு விட்டார். அனைவரும் உள்ளம் பூரித்தவர்களாய் தங்கள் கைகளை உயர்த்திப் பிரகடனத்தை அங்கீகரித்தனர் ராணுவத்தினர்களும் தத்தம் துப்பாக்கிகளையும் வாட்களையும் உயர்த்திச் சம்மதம் தந்தனர் அவ்வமயம் எழுந்த "டில்லி சலோ" கோஷம் உலகையே ஓர் அசைப்பு அசைத்த தென்னலாம். கோஷத்தின் பின்னர் நேதாஜி, இந்தியா அடிமையிலாழ்ந்து கிடப்பதற்குக் காரணமாக இருக்கும் பிரிட்டன் — அமெரிக்கா ஆகிய நாடுகளின் மீது போர்ப் பிரகடனம் செய்ய ஆஸாத் ஹிந்த் சர்க்கார் ஏகமனதாகத் தீர்மானித்துள்ள தென்றும் செயலில் இறங்க-உத்தியோக முறையில் உத்தரவு கொடுக்கப்பட்டு விட்டதென்றும், இந்தியாவை விடுதலை செய்ய வேண்டியது ஆஸாத் ஹிந்த் பௌஜின் கடமையென்றும் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

நண் பகலில பததிரிகைக காரர்களின மகாநாடு நடை-
பெறறது. அம மகாநாட்டில நேத்தாஜி விடுதத அறிககை கூறியதாவது.—

எனது அரசியல வாழ்ககையில நான கணட மூனறு கனவுகளில, இரணடு கனவுகள நனவாகி விட்டன. முதற கனவு தேசியப புரட்சி ராணுவம, இரணடாவது கனவு சுதந்திர இந்திய சாககார இபபொழுது நம தறகாலிக சாககாரை இபபிரியல நிபபொன சாககார அங்கீகரித திருபபது மகிழ்சசி தருகிறது கடைசிக கனவாகிய விடுதலைப போரை நடததி வெறறி பெறுவது தான நனவாக வேண்டும. அதுவும விரைவில நிறைவேறு மெனபதில எளளளவும சநதேகமிலலை.

1939ல தொடஙகிய ஐரோபபிய யுததம, நம எதிரிககு முதன முதலாகக கிடைதத பெரிய இடி. கிழககாசியாவில சமாதானம நிலவிய காலம வரை, இந்தியாவிலுளள பிரிட்டிஷ் ஆட்சிககுச சிறிது கூட அசைவு ஏறபடவிலலை. 1941 டிசமபருககுப பின நிபபொன பெறற வெறறிகள, இந்தியாவின கிழககு-வட கிழககு-எலலைபபுற வாசல களுககு ஆபததைக கொணடு வநது சேரததிருககினறன. பிரிட்டிஷார கையாண்ட ராணுவப பாதுகாபபுத திட்டஙக ளெலலாம, நிபபொனது வெறறியால முடமாகிவிட்டன. இநதச சநதாபபததில, நமது யுததப பிரகடனம வெறும பிரசாரப பிரகடன மலலவெனபதை உணர வேணடும. மனம நொநது கிடககும இநதிய மகா ஜனங்கள, பழிககுப பழி வாஙகும பொருட்டு எடுததுளள நடவடிககையே இது. இநதத தீரமானததைச செயலில நிறைவேறற நான அவநமபிககை கொண்டிருநதால, இநதத தீரமானத-
துககே இட மளிததிருகக மாட்டேன. ஆகவே போதிய

சாடசியஙகளுடன, பிரகடனததைச செயலில் நிரூபிததுக காடடுவோம”

அனறு மாலையில சிஙகபபூர் பாதாங்கில ஓர பொதுக கூடடம். எள விழவும இடமிலலாதபடி இநதியாகள கூடியிருநதனா. சுதநதிர இநதிய தறகாலிக சாககார முநதிய நாள இரவு விடுதத போாப பிரகடனம பறறிய விபரஙகளை இநதிய மகா ஜனஙகளுககுத தெரி விபபதறகாகவே இநத ஏறபாடு. இக கூடடததில நேதாஜி நீணட நோம சொறபெருக காறறினா. அதன சாரம வருமாறு —

“பிலிபபைனும பாமாவும சுதநதிர மடைநத பிறகு, இந்தியாவின விடுதலைககுக காலம வநது விடடது. அதற காகவே ஆஸாத ஹிநத சாககார அமைததிருககிறது. இநத ஸ்தாபித அறிவிபபு சரியான காலததில கால நிலைக கேறபவே நடைபெறறதாகும. நமது ஜெனம விரோதியான பிரிடடிஷாருககு, ஐரோபபாவில பலமான உதை மேறகே உதை விழுநதுகொண்டிருநதால மடடும நம சுதநதிர லடசியததுககு எவவித நனமையும ஏறபடா தலலவா? மகா கிழககாசியப போா கிழககில ஆரமபித் ததும, நமது விரோதிகள அடிமேல அடிவாங்கினா; தோலவிமேல தோலவியுறறுப பலங்குனறினா இது ஒரு அதிசயமலல, இநதியாவின விடுதலைககுப புதிய தொரு பாதை கிழககில திறககபபடடதுதான அதிசயம இபபடி நேருமென பிரிடடிஷாா கனவில கூட நினைததிருகக மாடடாாகள.

வடமேறகு எலலைபபுறததிலிருநது தான இநதியா வுககு ஆபதது நேருமென பிரிடடிஷாா எதிாபாாததனா.

வடகிழக்கு எல்லையில் எவ்வித நிகழ்ச்சியையும் எதிர்பாராததால், தாக்குதலைச் சமாளிப்பதற்கான முஸ்தீபுகள் எதுவும் செய்யாமல் விட்டுவிட்டனர். இதுவும் விதியின் நியதியே. இந்தப் பொன்னான தருணத்தை கிழக்காசிய இந்தியர்கள் பயன் படுத்திக்கொள்ள முன் வராவிட்டால், இதுவும் இழக்கப்பட்டே போயிருக்கும். நல்ல வேளையாக இந்தியச் சுதந்திரக் கழகத்தை இந்தியர்கள் இங்கு அமைத்துக் கொண்டார்கள். அத்துடன் இந்திய தேசிய ராணுவத்தையும் அமைக்கத் தொடங்கினர். பின்னர் நடந்த நிகழ்ச்சிகளும் பொருத்தமானவைகளே! இந்தியாவின் விடுதலைக் காலம் கடவுளின் கருணையால் வந்துவிட்டதென்று கூறினால், யாரும் மறுக்க முடியாது.

நான் இங்கு வந்து கழகத்தின் தலைமைப் பதவியை ஏற்றதும், கழகத்தையும் ராணுவத்தையும் திருத்தியமைக்கும் வேலையில் அதிகக் கவனம் செலுத்தினேன். நான், சென்ற ஆகஸ்ட் 15-ம் தேதி கூறினேன், இவ்வருட முடிவுக்குள் புனித பூமியாகிய இந்தியாவில் காலடி வைக்க உறுதி கொண்டிருப்பதாக அன்று முதல் நம் முயற்சிகள் மெதுவாக — ஆனால் நிதானமாக நிறைவேறி வந்திருக்கின்றன. இன்று காலை நடைபெற்ற ராணுவ அணிவகுப்பில் கலந்து கொண்ட வீரர்களைவிட, சென்ற ஜுலை 9-ம் தேதி நடைபெற்ற அணிவகுப்பிலிருந்த வீரர்கள் மிக மிகக் கொஞ்ச எண்ணிக்கை யுடையவர்கள்தான். நமது ஆஸாத் ஹிந்த் பௌஜைச் சேர்ந்த பெரும்பாலான வீரர்கள், இப்பொழுது இந்தியாவுக்குச் செல்லும் பாதையிலிருக்கிறார்கள். நம் முஸ்தீபுகளனைத்தும் திருப்திகரமாகவே இருக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில், நமது பௌஜ் யாருடைய தலைமையில் போரிடுமென்ற கேள்வி எழலாம். அது சகஜமே. இந்தக் கேள்விக்கு, பொதுவாக உலகத்தினருக்கும் சிறப்பாக இந்தியர்களுக்கும் நான் பதில் கூற வேண்டியது மிகமிக அவசியம். ஆகையால்தான், அக்டோபர் 21-ல் கூடிய கிழக்காசிய இந்தியர்களின் மகாநாட்டில், ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரை அமைத்தோம். மூன்று ஆண்டுகளுக்கு முன் இப்படி ஒரு சர்க்காரை அமைத்திருந்தால், அதை ஓர் நாடகமென்றுதான் உலகம் கேலி செய்யும். இப்பொழுது அதற்கு இடமில்லை. கிழக்காசியாவிலுள்ள 30 லட்சம் இந்தியர்களைக் கொண்ட ஸ்தாபனத்திலிருந்து தற்காலிக சர்க்கார் தோன்றியிருக்கிறது. அந்த சர்க்காருக்கு சக்திவாய்ந்த இராணுவமும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த சர்க்கார் ஓர் விளையாட்டுக் கருவியல்ல, பிரசாரத் தந்திரமுமல்ல என்பதை, நமது எதிரிகள் கூட நன்கு உணர்ந்து கொள்வர்.

இவ்வரசாங்க அமைப்பில் புதிதாக எதுவும் நாம் செய்து விடவில்லை. ஏனெனில், சுதந்திரத்துக்கான கடைசிப் போராட்டத்தைத் தொடங்கு முன், ஓர் தற்காலிக சர்க்காரைப் பிரகடனம் செய்வது புரட்சியின் ஓர் அம்சம். இதற்குச் சரித்திரம் பல ஆதாரங்கள் தருகிறது. ஐரிஷ்காரர்களும், செக் நாட்டார்களும் நமக்கு உதாரணமாக இருக்கின்றனர். துருக்கியின் சுதந்திரப் போரில் கூட இப்படித்தான் நடந்தது. இம்மாதிரி ஒரு சர்க்காரை இந்தியாவிலுள்ள இந்நேரம் அமைப்பதென்பது காரிய சாத்தியமன்று. ஆகவே நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர்தான் இந்த வழிக்கு வந்தோம். நமது சர்க்கார்

சாதாரணக் கால நிர்வாகத்துக்காக அமைக்கப்படவில்லை. சுதந்திரப் போரை நடத்துவதற்காகவே அமைக்கப் பட்டிருக்கிறது. விடுவிக்கப்படும் பிரதேசத்தின் நிர்வாகம் இவ்வரசாங்கத்தினிடம் தான் இருக்கும். கடைசி ஆங்கி லேயன் இந்தியாவினின்று துரத்தப்படும்வரை — சுதந்திர இந்தியாவில் நீதியும் ஒழுங்கும் சமாதானமும் நிலவும் வரை - இந்தியாவிலுள்ள 38 கோடி இந்தியர்கள் தங்கள் விருப்பப்படி ஓர் நிரந்தர ஆஸாத் ஹிந்த் சர்க்காரை அமைக்கும் வரை, இந்தத் தற்காலிக அரசாங்கமே வேலை செய்து கொண்டிருக்கும்.

இவ்வியக்கம் - இவ்வரசாங்கம் எல்லாம் உங்க ளுடையது. ஆகவே இந்தியச் சுதந்திரக் கழகத்தின் அங்கத்தினர்களாகிய உங்கள் கடமை இப்பொழுது பன மடங்கு அதிகரித்து விட்டதல்லவா! எப்பொழுதும் மறந்து விடாதீர்கள். நம் முன்னர் இரண்டு பெருங் கடமைகள் இருக்கின்றன. இந்திய எல்லை தாண்டி - இவ் வாண்டு முடிவுக்குள் இந்திய மண்ணில் கால் வைப்பதற் கான இறுதி முயற்சிகள் யாவும் செய்ய வேண்டுமென்பது ஒன்று. அதனைத் தொடர்ந்து நீண்ட காலப் போருக்கு நம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டுமென்பது மற்றொன்று.

இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் பின் வாங்குவ தென்பது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அழிவையே குறிக்கும். ஆதலால் எந்த விதத்திலும் ஒட்டிக் கொண் டிருக்கவே அவர்கள் முயற்சி செய்வர். இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரை விரட்டுவதென்பது சுலபமான காரியமு மல்ல. ஆனால் நாம் இந்தியாவிலுள்ள காலடி வைத்ததும்,

அங்குள்ள இந்தியர்களின் பரிபூரண உதவியும் ஆதரவும் திட்டமாகக் கிடைத்துவிடும். ஆதலால் நோக்கம் ஈடேறும் வரை, உங்கள் கடமைகளைத் தொடர்ந்து செய்து வர வேண்டும். தற்காலிக சர்க்கார் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து சர்வாம்ஸப் படை திரட்டல் திட்டமும் மிக விரைவில் சுறுசுறுப்பாக நிறைவேற வேண்டும். இறுதி வெற்றி கிடைக்கும் வரை, நமக்கு வேண்டிய ஆள்பலம் — பொருள் - தளவாடச் சாமான் அனைத்தும் தங்குதடையின்றி அளிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

இதற்கிடையில் நமது சர்க்காரை இம்பீரியல் நிப்பான் சர்க்கார் அங்கீகரித்திருக்கிறதென்ற ஓர் நற்செய்தியும் கிடைத்திருக்கிறது. அதன் அந்தரங்க சுத்தியை — நல்லெண்ணத்தைப் பாராட்டி ஓர் தீர்மானத்தையும் நமது சர்க்கார் நிறைவேற்றியிருக்கிறது. அதற்கு உங்கள் அங்கீகாரம் தேவை. இந்தியாவின் அரசியல்—பொருளாதார—ராணுவ நிலைமைகளைப் பற்றி விவாதித்த பின்னர், நமது சர்க்கார், பிரிட்டன் அமெரிக்கா மீது தனது போர்ப் பிரகடனத்தை கடந்த இரவு 12-55 மணிக்கு வானொலி மூலம் விடுத்திருக்கிறது. அந்தப் பிரகடனத்தை எதிரி நாடுகளிலுள்ள ஒலி பெருக்கி நிலையங்களும் இன்று காலை 2 மணிக்கு வெளியிட்டிருக்கின்றன. நம் எதிரிகள் நமது நடவடிக்கைகளில் அவ்வளவு கவனம் செலுத்துகின்றனர். நம் நோக்கம் நேர்மையானதென்பதற்கு இது ஒன்றே போதும். நமது போர்ப் பிரகடனத்துக்கும் உங்கள் சம்மதத்தை எதிர் பார்க்கிறேன்.”

இச் சொற்பெருக்கைக் கேட்டதும், கூட்டத்திலிருந்த 50000 இந்தியர்களும் எழுந்து நின்று அங்கீகாரமளித்தனர். சுமார் 15 நிமிடங்கள் வரை புரட்சிக

கோஷங்களை எதிரொலித்தன. சிறிது நேரத்துக்கு முன் 50000 தலைகளை மட்டும் கண்ட இடத்தில், எங்கு பார்த்தாலும் ஒரே துப்பாக்கி மயமாகத் தெரிந்தது.

பின்னர் இரவு 8-மணிக்கு சிங்கப்பூர் நீந்தல் நிலையத்தில் ஓர் விருந்து. உயர்தர நிப்பொன் ராணுவ அதிகாரிகளும் இதரர்களும் கூடி யிருந்தனர். அக் கூட்டத்தில் நேதாஜி, "எங்களது நன்றியை, போர்க் களத்தில் எங்கள் செயல் மூலம் நிப்பொனுக்கு நிரூபித்துக் காட்டுவோம்" என்று குறிப்பிட்டார்.

அன்று தினமே சுதந்திரப் பர்மிய அரசாங்கம் ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரை அங்கீகரித்திருப்பதாக, பர்மிய அயல் நாட்டு மந்திரி ஸ்ரீ தக்கின் நூ அனுப்பிய தந்தி நேதாஜிக்குக் கிடைத்தது. அடுத்தபடியாக மற்றொரு தந்தி

"உங்கள் தலைமையில் ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்கார் அமைத்திருக்கும் செய்தியை, சுதந்திர பிலிப்பைன் சர்க்காரும் — மக்களும் மனமகிழ்ந்து வரவேற்கின்றனர். நீதியின் பேரால் அமைக்கப்படும் புதியதொரு உலக ஒழுங்குக்கு, இந்தியச் சுதந்திரம் மிக இன்றியமையாதது என்பது பிலிப்பைன் சர்க்காரின் திட நம்பிக்கை. தங்கள் சர்க்காரை பிலிப்பைன் சர்க்கார் அங்கீகரிக்கிறது. மனித நாகரிகத்துக்கே பெருந் தொண்டாற்றியுள்ள இந்திய சமுதாயம் சுதந்திர இந்தியாவைக் காண வேண்டுமென்று மனதார விரும்புகிறது" என்று பிலிப்பைன் குடியரசுத் தலைவர் லாரலிடமிருந்து வந்தது.

உஅ. பிறநாட்டு சர்க்கார்கள்

நேதாஜி சிங்கப்பூருக்கு வந்தது முதல் அவரது விருப்பத்துக்கு இணங்க கிழக்காசிய இந்தியர்கள் அனைவரும் நடந்து கொண்டனர். அது குறித்து மகிழ்ச்சி யடைந்தாராயினும், பூரண திருப்தி யடைந்தாரென்று கூற முடியாது. அவரது லட்சியத்துக்குச் செவி சாய்த்த இந்தியர்களுள் பலர் ராணுவத்தில் சேர்ந்தனர். ஏழைகளும் மத்தியதர வகுப்பாரும் தங்கள் உடைமைகளையெல்லாம் தேசத்துக்காக அர்ப்பணம் செய்துவிட்டனர். தற்காலிக சர்க்காருடனும் ஐக்கியமாகிவிட்டனர் ஆனால் பெரும் பணம் படைத்த முதலாளிகள் மட்டும் அரை குறை மனதுடன் மதில்மேற் பூனையாக இருந்தார்கள். எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியில் இவர்களும் பெரும் பங்கு எடுத்துக்கொள்ளாவிட்டால், நினைத்தபடி காரியம் சாதிப்பது எளிதல்ல. ஆகவே நேதாஜி, புதிய துறையில் முயற்சி செய்யவேண்டியதாயிற்று. அகில மலேயாவிலுமுள்ள இந்திய பணக்காரர்களின் மகாநாடொன்று 1943 அக்டோபர் 25ம் தேதி சிங்கப்பூர் ஜலான் பஸார் ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இந்திய வியாபாரிகளும், செல்வந்தர்களும், நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் ஏராளமாக கூடியிருந்தனர்

அவர்கள் முன்னிலையில் நேதாஜி மிக உருக்கமான வேண்டுகோள் - அல்ல — கண்டிப்பான உத்தரவொன்றை விடுத்தார். அதில், மலேயாவில் இந்தியர்களின் மூலதனம் — பணக்காரர்களின் ஏமாற்றும் மனப்பான்மை — ஏழைகளின் உறுதி நிறைந்த தியாக சிந்தை — உயிருக்கும்

பணத்துக்குமுள்ள வேற்றுமை — சுதந்திர இந்தியத் தற்காலிக சர்க்காரின் நடவடிக்கை — அந்த சர்க்கார் எதிர்நோக்கி யிருக்கும் செயல்கள் — ஆகியவைகளை விரிவாக – தெளிவாக – ஒவ்வொருவர் மனதிலும் ஆழ மாகப் பதியும்படி விளக்கினார் இறுதியில், உடனடியாக ஒரு கோடி ரூபாய் கைமேல் வேண்டுமென்று கூறவே அதே இடத்தில் 70 லட்சம் டாலர்களும், அடுத்த 24 மணி நேரத்தில் 1 கோடி 30 லட்சம் டாலர்களும் வசூலாயின. எவ்வளவு பலம் பொருந்திய சர்க்காரானாலும், பலாத்கார மின்றி இந்தப் பெருந்தொகை வசூலிப்ப தென்பது முடியுமா? என்ற ஒரு கேள்வி யெழுந்தால், ஒரே குரலில் "முடியாது" என்ற பதில் தான் கிடைக்கும். ஆகவே, தனக்குத் தானே நிகரான – நேதாஜியின் சக்தி, அவ்வளவு வெற்றியைத் தந்தது. அந்த வெற்றி சுதந்திர இந்தியத் தற்காலிக சர்க்காரின் வெற்றி — இந்தியர்களின் வெற்றி — இந்தியாவின் வெற்றியே யாகும் என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது.

அன்று தினம் மற்றோர் மகிழ்ச்சி தரும் செய்தி. 'ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரை ஜெர்மன் அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது' என்று ஜெர்மன் அயல்நாட்டு மந்திரி ரிப்பன் ட்ராப், உத்தியோக தோரணையில் அனுப்பிய தந்திதான் அது. ஏற்கனவே, ஆசியாவிலுள்ள நிப்பொன் – பர்மா – பிலிப்பைன் ஆக மூன்று நாடுகள் அங்கீகரித்து விட்டன, ஐரோப்பாவில் ஜெர்மனியின் அங்கீகாரத்தோடு நான்கு நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது நேத்தாஜி அமைத்த சுதந்திர இந்திய தற்காலிக சர்க்கார்.

27—10—43ல் ருரோஷியா சர்க்காரும் தனது அங்கீகாரத்தை யளித்துச் செய்தி தெரிவித்தது. நவம்பர் முதல் தேதியன்று சீனாவின் தேசீய சர்க்காரும், மஞ்சுகோகு சர்க்காரும், தத்தம் அங்கீகாரத்தை உத்தியோக தோரணையில் அளித்தன. நவம்பர் 9-ம் தேதி பாஸிஸ்ட் இத்தாலியக் குடியரசு சர்க்கார், ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரை அங்கீகரித்திருப்பதாகவும், இது விஷயத்தை ஆஸாத் ஹிந்த் சர்க்காருக்குத் தெரிவிக்கும்படியும், இத்தாலிய நலன்களை நிப்பொனில் கவனித்துவரும் கான்ட் ஓமேரோ பிரினஷி பினிக்கு அறிவித்தது. நவம்பர் 18-ம் தேதி யன்று தாய்லாந்து சர்க்காரின் அங்கீகாரம் பாங்காக் ரேடியோ மூலம் கிடைத்தது. ஆக ஒன்பது சட்டபூர்வமான சர்க்கார்களின் அங்கீகாரத்துடன் ஆஸாத் ஹிந்த் சர்க்கார் செயலாற்றத் தொடங்கிறது.

இந்த நிலைமையில் நவம்பர் ஆரம்பத்தில் அயர்லாந்து குடியரசு வாதிகளிடமிருந்து நேதாஜிக்கு வாழ்த்துகள் வந்தன. அவைகளைக் கண்டதும் நேதாஜி, பக்கத்திலிருந்த நண்பர்களுடன், அயர்லாந்தில் தான் தோழமை கொண்ட நண்பர்களைப் பற்றியும், வீரசெயல்களால் புனிதம் பெற்ற பல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தது பற்றியும் கூறி மகிழ்ந்தார். கடைசியில் "நமது இலட்சியம் நியாயமானது, நாம் விரும்புவது நமது பிறப்புரிமை, ஆதலால், வெற்றியடைந்தே தீருவோம். அயர்லாந்துக்குச் சுதந்திரம் கிடைத்தது போலவே, இந்தியாவுக்கும் சுதந்திரம் கிடைப்பது நிச்சயம்" எனக் கூறினார்

௨௯. டோக்கியோவில் புதிய சரித்திரம்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் அதன் நேசநாடுகளையும்
எதிர்த்துப் போரிடுகின்ற கிழக்காசிய நாடுகளின் மகா
நாடொன்று ஜப்பானியத் தலைநகரான டோக்கியோவில்
நடந்த ஏற்பாடாகியிருந்தது. அம் மகாநாட்டுக்கு வரும்
படி ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்காருக்கும் ஓர் விசேட
அழைப்புக் கிடைத்தது. அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு
நேதாஜியும் தனது காரியதரிசிகளுடன் நவம்பர் ஆரம்
பத்தில் டோக்கியோவுக்குப் பிரயாணமானார். அம் மகா
நாட்டுக்குப் பிரதிநிதியாகச் செல்ல நேதாஜியின் மனம்
சம்மதிக்கவில்லை. தமது சர்க்கார் தற்காலிக சர்க்காராத
லாலும், இனிமேல் அமைக்கப்பட விருக்கும் நிரந்தர
சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலையை முன்
கூட்டியே கட்டுப்படுத்த, தான் காரணமாகவிருக்கக்கூடா
தென்றும் கருதினார். ஆதலால், ஓர் பார்வையாளராகவே
டோக்கியோ மகாநாட்டுக்குச் சென்றார்.

சுதந்திர இந்திய தற்காலிக சர்க்காரின் தலைவராகவும்
இந்திய தேசிய ராணுவத் தளகர்த்தராகவும் நேதாஜி
பதவி ஏற்றபின் டோக்கியோவுக்குச் செல்வது இதுதான்
முதல் தடவை. நவம்பர் 6-ம் தேதி நிப்பொன் ஏகாதி
பத்திய டயட் சபை மண்டபத்தில் மகாநாடு நடை
பெற்றது. கிழக்காசியாவிலுள்ள சுதந்திர நாடுகளின்
பிரதிநிதிகள் எல்லோரும் வந்திருந்தனர். டயட் சபை
மண்டபத்தின் முன் வாயிலில் கட்டப்பட்டிருந்த பிற
நாட்டுக் கொடிகளுடன் நமது மூவர்ணக் கொடியும் பட்
டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. மகாநாட்டின்

நடவடிக்கைகள் சரித்திர முக்கியத்துவம் பெற்றவைகளே. அவைகளில் ஐந்து முக்கிய தீர்மானங்கள் நிறைவேறின.

சுதந்திர இந்தியத் தற்காலிக அரசாங்கம், ஓர் சுதந்திர நாட்டு சர்க்காருக்கு இருக்க வேண்டிய எல்லா அம்சங்களுடன் உலகமே அதிசயிக்கத் தக்கவாறு அமைந்திருந்தது. ஆனால், அதற்கு ஓர் பெருங்குறையும் இருக்கத்தான் செய்தது. தனக்கெனச் சொந்தமாகப் பூமி எதுவும் இல்லையல்லவா? பிரிட்டிஷாரிடமிருந்து கைப்பற்றியதும் இந்தியாவுக்கு உரிமையானவையுமான அந்தமான் - நிகோபார் தீவுகளை நிப்பொன் சர்க்கார் இம் மகாநாட்டின் போது நம் சுதந்திர இந்தியத் தற்காலிக சர்க்காருக்கு அளித்தது. அதனால் அப் பெருங் குறையும் நிவர்த்தி செய்யப்பட்டது. ஆதலால், இம் மகாநாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததென்று கூறத் தேவையேயில்லை. அப்பொழுது நேதாஜி, "இந்தியா - இந்தியாவுக்குச் சொந்தமாகும்வரை உருவிய கத்தியை உறையில் போடுவதில்லை, இந்தியாவின் சுதந்திரத்துக்காக உதவிபுரியும் நிப்பொனுக்கு வந்தனம்" என்று பதிலளித்தார். பின்னர் ஜப்பான் சக்ரவர்த்தியையும், பிரதம மந்திரி டோஜோவையும், நிப்பொன் ராணுவத் தலைவரான பீல்டு மார்ஷல் ஜெனரல் சூஜியாமாவையும் பேட்டி கண்டார். ஜப்பானில் பத்துக்கோடி நிப்பொனியர்களும் நேதாஜியைக் கௌரவித்தனர். நேதாஜிக்காக பல பொதுக் கூட்டங்களும் விருந்துகளும் நடைபெற்றன. ஒவ்வொரு கூட்டத்துக்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடினர்.

நவம்பர் 7-ம் தேதியன்று டோக்கியோவில் தோமேய்க்கு நேதாஜியின் பேட்டி. அப்பொழுது நேதாஜி கூறினார்.— "அந்தமான் நிக்கோபார் தீவுகளை

இந்தியருக்குத் திருப்பிக் கொடுப்பதனால், பிரிட்டிஷ் நுகத் தடியிலிருந்து முதன் முதலில் விடுவிக்கப்படும் பிரதேச மாகவே அவைகளை இந்தியர்கள் கருதுவர். இதைப் பெற்றதன் மூலம் தற்காலிக சர்க்கார் பெயரிலும் செய லிலும் உண்மையாகவே ஓர் தேசீய உருப்பெற்றுவிட்டது. அரசியல் கைதிகளின் சிறைச்சாலையாக பிரிட்டிஷாரால் உபயோகிக்கப்பட்ட அந்தமான் தீவுகள் இந்தியருக்குக் கிடைத்தது ஓர் விசேடக் கருத்தைக் கொண்டிருக்கிறது.

பிரஞ்சுப் புரட்சியின் போது பாரிஸிலுள்ள பாஸ்டீலி ஜெயிலிலிருந்து அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டது போல், இந்தியச் சுதந்திரத்துக்காக நடைபெறும் இந்தப் போரில், அந்தமான் சிறையில் அவதியுற்ற நம் தேச பக்தர்கள் முதன் முதலாக விடுவிக்கப் பட்டிருக்கின்றனர். கொஞ்சம் கொஞ்சமாக இந்தியப் பிரதேசங்கள் விடுவிக்கப் படுமெனினும், முதன்முதலில் விடுவிக்கப்படும் பிரதேசமே அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தச் சமயத்தில் இந்த இடத்தில் இந்தப் பிரகடனத்தை வெளியிட நிப்பொன் தோநெதடுத்தமைக்குக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்தச் செய்தி கேட்டதும் உலகம் முழுதுமே நிப்பொனின் அந்தரங்க சுத்தியைத் தெரிந்து கொள்ளும். இப் பிரகடனம் இந்தியாவிலும் விசேடப் பலனளிக்கும். இனிமேல் எந்த இந்தியனும் நிப்பொனின் அந்தரங்க சுத்தியைச் சந்தேகிக்கமாட்டான்."

இந்தப் பேட்டியைத் தொடர்ந்து ஆஸாத் ஹிந்த் தற்காலிக சர்க்காரின் பேச்சாளர், ஷோனானில் ஓர் அறிக்கை விடுத்தார். அதில், "நிப்பொனுக்கு இந்தியாவில் மண்ணாசையில்லை யென்பதை இப் பிரகடனம் 38 கோடி

இநதியாகளுககும உறுதி செய்கிறது. நிபபொன கொளகை பறறி வீணாக விஷமப பிரசசாரம செயதுவரும ஆஙகிலோ - அமெரிககப பிரசசாரகாகளுககு இப் பிரகடனம ஓா சவுககடியே யாகும" எனக குறிபபிடடாா.

ஜபபானில நேதாஜியைக கெளரவிககும பொருட்டு நடைபெறற ஓா பெருங கூடடததில, நேத்தாஜி பேசும பொழுது சில முககிய குறிபபுகளை வெளியிடடாா "ஆங்கிலோ – அமெரிககப பிடியபிலிருநது கிழககாசியாவிலுளள மககளை விடுவிககவே இநத யுததததை ஜபபானியா நடததுகினறனா. அவாகளோடு சோநது இநதிய விடுதலைககாகத தொண்டாறறவும மரணம வரைப போரிடவும தயாராக யிருககினறேன வாழககையில பெருமையும மரணததில அசசமும எனககிலலை இநதிய விடுதலைககான எலலா ஏறபாடுகளும பூாததியாகி விடடன ஆயுதம தாஙகி, எதிரிகளை வீழத்தும்பொருடடு போாககளததில குதிகக வேண்டியது தான பாககி இபபொழுது கிழககாசியா முழுமையும ஒறறுமைபபட டிருககிறது, எனினும, ஆசியா முழுமையும ஒனறுபட வேண்டுமானால, இநதிய மண்ணிலிருநது வெளளையனை கருவுககும இடமிலலாமல விரடடிததானாக வேணடும. அபபொழுது தான அது சாததியமாகும. மகாதமா காந்திஜிககும எனககும, மலைககும மடுவுககுமுளள விததியாசம தான. சுதநதிரம பெற ஆயுதமெடுகக வேண்டு மெனபது என கருத்து, காந்திஜியோ அது கூடவே கூடாது எனகிறாா" எனக காஜிததாா

நவமபா 17-ந தேதி யன்று, டோககியோ ரேடியோ மூலம இநதியாவிலுள்ள மககளுககும ஐரோபபாவி

லுளள இநதிய மககளுககும ஓர் உருககமான செய்தி விடுததாா.

"வலலமை பொருநதிய நணபாகளது உதவியுடன கிழக்காசிய இநதியாகள எலலாவித முயறசிகளையும செயது வருகினறனா. விரைவில இநதிய எலலை தாணடி பாரத பூமியில சுதநதிரக கொடியை நிலை நாடட வேணடும. பாரத நாடடிலுளள நீங்களும கசசையை வரிநது கடடிககொண்டு இறுதிப போரைத தொடங குங்கள

இஙகு விடுதலை யடைநதுளள கிழககாசிய நாடுகள, நெருஙகிய உறவுடன புதிய தோா ஒழுஙகை அமைகக முன வநதிருபபது நவீன சரிததிரததிலேயே இதுதான முதல தடவை. முனனா ஆரமபிககப பெறற சாவதேச சஙகததைப போலலலாமல நோமாறாக கிழககாசிய நாடுகளின கூடடுறவு காடசி தருகினறது. சாவ தேச சங்கம், சுய நலம் — பேராசை — பொறாமை ஆகிய காரணங்களால தோலவி யடைநதது. கிழககாசிய சங்கமோ, நியாயம — உரிமை — பரஸபர உதவி போனற அடிபபடைக கடமைகளைக கொண்டிருககிறது. ஆதலால, உலகததின இதர பாகஙகள கணட தோலவிககு இஙகு இடமிலலை. கிழககாசியா வெறறி பெறுமெனபதில சநதேகமேயில்லை. இநதிய விடுதலைப போருககு பூரண உதவியளிபபதறகாக ஓா தீாமானததை பாமா பிரதமா டாகடா பாமா பிரரேபிககவும அது ஏக மனதாக மகா நாடடால ஒபபுககொளளப பெறறும இருககிறது. இநதிய சுதநதிர இயககம, இபபொழுது தனககென ஓா தறகாலிக சாககாரையும, தேசிய இராணுவத்தையும, சொநதமான பிரதேசததையும பெறறு விடடது. ஆகவே, நமது

நினைவுகளும் நோக்கங்களும், இனி மேல் நிறைவேறுவதற்கான வழிகளைச் செய்ய வேண்டியதே இந்தியர்களின் கடமை. இந்தக் கடமையின் மகத்துவத்தை, கிழக்காசியாவிலுள்ள நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அடுத்து வரும் போர் எவ்வளவு நீண்டதாவும் கடினமாகவும் இருந்தாலும் எவ்விதக் கஷ்ட நஷ்டம் தியாகம் ஆகியவைகளுக்குட்பட நேர்ந்தாலும், இறுதி வெற்றியிலும் முடிவான இந்திய விடுதலையிலும் திட நம்பிக்கை கொண்டுள்ளோம்.

கடந்த ஐந்து மாதத்தில் இந்திய சுதந்திர இயக்கம் சம்பந்தமான தீவிர வேலைகளும் நடவடிக்கைகளும் மிகுந்த பலனளித்திருக்கின்றன. கழகம் திருத்தியமைக்கப்பட்டு பலப்படுத்தப் பட்டிருக்கிறது. தேசிய ராணுவம் விரிவடைந்திருக்கிறது. இந்திய நிலைமையும் புரட்சிக்குத் தகுதியாகி விட்டது. இறுதிப் போரைத் தொடங்கி இந்தியாவினுள் பிரவேசித்து, சுதந்திரக் கொடியை நாட்ட வேண்டியதுதான் பாக்கி. அது பூர்த்தியானதும், டில்லியை நோக்கி சரித்திர பூர்வமான — நீண்டதோர் "மார்ச்" ஆரம்பமாகும். புது டில்லியில், வைசிராய் மாளிகையில் மூவர்ணக் கொடியை ஏற்றினால் தான் அந்த "மார்ச்" முற்றுப் பெறும்.

நாளை, சூரியன் மீண்டும் உதிப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயம் நமது இறுதி வெற்றியும். இது எனது திட நம்பிக்கை. இந்த விடுதலைப் போருக்கு அனுதாபமும் ஆதரவும் அளித்து வரும் — ஐரோப்பாவிலுள்ள நண்பர்களுக்கு எனது வந்தனம். நமது பொது வெற்றி இறுதியாகக் கிடைக்கும் வரை, கிழக்காசியாவிலுள்ள நாங்கள், நம் பொது எதிரிக்கு எதிராக, உங்களுடன் தோள் கொடுத்து நின்று போரிட உறுதி கொண்

டிருக்கிறோமென்பதை மீண்டும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று அச் செய்தியில் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில், நாங்கிங் தலைவர் – வாங்வெயிங் வெய், பிலிப்பைன் தலைவர் - ஜோஸ் பிலாரல் ஆகியோர் தத்தம் சர்க்கார்களின் சார்பில் நேதாஜியைத் தங்கள் தங்கள் நாடுகளுக்கு அழைத்தனர். அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டு நேதாஜியும், நாங்கிங் — மணிலா — ஷாங்காய் — பிலிப்பைன் முதலிய இடங்களுக்குப் பிரயாணமானார். சிங்கப்பூர் திரும்பும் வழியில் ஜாவா— சுமத்ரா — போர்னியோ ஆகிய இடங்களிலுள்ள இந்தியர்கள் ஆடம்பரமாகவும் உற்சாகமாகவும் வரவேற்றனர். டிசம்பர் 29-ந் தேதியன்று தனது சர்க்கார் அதிகாரிகளுடன் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு விஜயம் செய்தார். அந்தமானில் கால் வைத்ததும் அத்தீவுக்கு தியாகிகள் தீவு என்றும், நிக்கோபாரில் கால் வைத்ததும் சுயராஜ்யத் தீவு என்றும் பெயர் சூட்டப் பெற்றது.

"1943-ம் ஆண்டு முடியுமுன்னர் இந்திய மண்ணில் காலடி வைப்போம்" என்று நேதாஜி அடிக்கடி கூறுவதுண்டு. அது அந்தமான் நிக்கோபார் தீவுகளில் காலடி வைத்ததன் மூலம் பலித்து விட்டது. இந்தியாவிலிருந்து வெளியேறிய மூன்றாண்டுகளுக்குப் பின், சுதந்திர இந்திய மண்ணில் நேதாஜி காலடி வைத்தது பற்றி, நேதாஜியும் கிழக்காசிய இந்தியர்களும் கொண்ட மகிழ்ச்சி கரை புரண்டது. அத்தீவுகளில் பல சொற்பொழிவுகளை ஆற்றி

விடடுபாமா பிரயாணததை மேறகொணடாா அவவிரு தீவுகளுககும லெபடினெனட கானல ஏ டி லோகநாதன ஹை கமிஷனராக நியமனம பெறறாா

நடய் ஓராண்டில் கண்ட காட்சிகள்

1943-ம் ஆணடு டிசமபா முடிய 12 மாதஙகளில கிழக காசியாவில இநதிய மகா ஜனஙகள செயதறகு முடிதத காரியஙகள அளவிறநதன. சுதநதிரப போராடடததின இறுதிக கடடததை நேதாஜி தொடஙகி வைததாா. சுதநதிர இநதியக கழகம பல கிளைகளுடனும உப கிளைகளுடனும பரநது விரிநது விடடது ஏறககுறைய மூனறு லடசம இநதியாகள அஙகததினாகளாகி விடடனா. அங்கததினாகள ஒவவொருவரும ஒவவொரு சிறு கொடியை உடையில அணிநது காடசி தநதனா. கிழககாசியா முழுமையும ஏராளமான தீவிர ஊழியாகள வேலை செயதனா மலேயாவில மடடும 15000 தீவிர ஊழியாகள இருநதனா அவாகளுககு நீலக கரையுடைய ஊழியா கொடிகள சினனமாகத தரபபடடன எநத நிமிஷமும கழகததின வேலை தவிர வேறெவவித வேலையும அவாகளுககுக கிடையாது

ஊழியா கொடியணிபவா அனைவரும சமமாகவே பாவிககப படடனா. இவாகளது உழைபபால கழக அங்கததினாகளின எண்ணிககை உயாநதிருபபினும, ஒருவா கூட பாககியிலலாமல அஙகததினராகி விடவிலலை. இந்தியன எனறால அவன கணடிபபாக அஙகததினராகி இருகக வேண்டு மெனபது நேததாஜியின விருபபம. மலேயாவில உளள இநதியாகள 54 சத விகிதமும ஜோகூரில 66 சத விகிதமும அங்கததினராகிவிடடனா.

இநதியச சுதநதிரக கழகம எடுததுக கொணட முயறசிகள எதுவும வீணுகவிலலை சமூக சேவை-அரசியல பிரசாரம — -ராணுவததுககு ஆள சேரபபது—நிதி திரடடுவது—கலாசசார அபிவிருததி ஆகிய நடவடிககைகள பெரும பலனளிததன. ஹிநதுஸதானி வகுபபுகளின எணணிககையும பெருகிறறு. இநதியாகள குடியேறிய ஒவவொரு இடததிலும ஹிநதுஸதானி வகுபபுகள நடைபெறறன கோலாலமபூரில ரேடியோ மூலம ஹிநதுஸ்தானி வகுபபுப பாடஙகள கறபிககப படடன. தமிழாகளின குழநதைகளுககு தமிழப பளளிககூடஙகளும நடைபெறறன. ஹிநதுஸதானி பிரசசார வேலைககு இராம கிருஷண மிஷன அதிக உதவி செயதது. "பூரண சுய ராஜயம" என்ற தமிழத தினசரியும, "ஜேய ஹிநத" என்ற தமிழ வாரப பததிரிகையும வெறறிகரமாக நடைபெறறன எழுதப படிககத் தெரிநத இநதியாகள் வசிககும எலலா இடஙகளுககும அவை சென்றன.

ஒவவொரு தேசியப பளளிககூடங்களிலும, ஹிநதுஸ்தானி—இநதிய தேசிய சரிததிரம—தேசத தலைவாகளின வரலாறுகள இநதியப பூகோளம — சஙகீதம — தேசிய கீதம — கைததொழில — சிததிரவேலை — கணககு — சுகாதாரம — தோடடவேலை — உடறபயிறசி — விளையாடடு—சோப,மை, மினசாரப பூசசு ஆகியவை செயதல—தணணீரைச சுததிசெயதல — சைககிள, கடிகாரம, கிராமபோன பழுது பாாததல ஆகிய பாடங்களும—காலாட்படைப பயிறசியும போதிககப் படடன. 12 வயதுககு மேறபடட இரு பாலருககும கடடணமினறியே கலவியளிககபபட்டது.

இராணுவத்தின் நிலைமையும் அதிசயிக்கத்தக்கதே. பிரிட்டிஷ் ஆட்சியால் மறுக்கப்பட்டு வந்த ராணுவப் பயிற்சி இங்கு இலவசமாக எல்லா இந்தியர்களுக்கும் அளிக்கப்பட்டது. ஆரம்பத்தில், நாற்பதாயிரம் பேருக்கு மேல் இந்தியத் தேசிய ராணுவத்தில் சேர்க்கூடாதென்ற ஓர் விதி எப்படியோ நுழைந்திருந்தது இந்தியர்கள் அதிக பலம் பெற்று விடக்கூடாதென்று ஒரு சமயம் ஜப்பானிய அதிகாரிகள் நினைத்ததுதான் அதற்குக் காரணம் அவ் விதியும் நேதாஜியால் மீறப்பட்டது. சுதந்திர இந்திய தற்காலிக சர்க்காரை பொம்மை சர்க்காராகவே வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஜப்பானியரின் கருத்தும் நேதாஜியால் அழிக்கப்பட்டுவிட்டது ஒவ்வொரு இந்திய ஆணும் பெண்ணும் கொஞ்ச காலத்துக்கேனும் ராணுவப் பயிற்சி பெறுவதன் மூலம், இந்திய சமூகம் முழுவதையுமே ஓர் பலம் பொருந்திய போர் இனமாக்கிவிட பகீரத முயற்சிகள் நடைபெற்றன ஆனால் ஜப்பானிய வீரர்களுக்கே அன்றாடத் தேவைகளுக்கு வேண்டிய பல சாமான்கள் கிடைக்கவில்லை அதனால், இந்திய ராணுவத்துக்கும் வேண்டிய தேவைப் பொருள்கள் கிடைப்பது அரிதாகி விட்டன அதையும் நேதாஜி பொருட்படுத்தவில்லை. கள்ள மார்க்கட்டில்கூட கம்பளிகள் வாங்க நேர்ந்ததாம். இந்தியச் சுதந்திரப் பிரச்னைமீது நேதாஜி கையாண்ட களங்கமற்ற கொள்கைகளும் நடவடிக்கைகளும், ஜப்பானியரைக் கதிகலங்க வைத்தன.

தவிர, ராணுவத்தில் இந்திய சமூகத்தின் பல்வேறு வகுப்பினர்களும் கலந்திருந்தனர் நீண்ட காலமாகத் தலைவிரித்தாடிய சாதிப் பித்தும் சமயச் செருக்கும் மத வெறியும் மடிந்துவிட்டன. ஹிந்து — முஸ்லிம் - கிறிஸ்தவர்

யூதர் — டோகரா ஆகிய அனைவரும் எவ்வித வேற்றுமை மனப்பான்மையுமின்றி ஒற்றுமையாகவே உழைத்து வந்தனர். வைதீகம் என்பது ஆழப் புதைக்கப் பட்டு விட்டது. சைவ உணவு கொள்வோரும் மாமிச உணவு கொள்வோரும் ஒரே வரிசையில் கூட உட்கார்ந்து ஒன்றாகவே உணவு கொண்டனரென்றால், அதிகம் கூறுவானேன்?

இராணுவத்தின் வாழ்க்கைத் தரமும் அதிசயிக்கத் தக்கதே. ஒரு கர்னலுக்கு 250 ரூபாயும், ஒரு மேஜருக்கு 185 ரூபாயும் தான் மாதச் சம்பளம். உணவும் உடையும் தற்காலிக சர்க்காரின் சப்ளை. இவ்வளவு குறைந்த சம்பளத்தில் பூரண திருப்தியடைந்தனர் இராணுவத்தினர். உண்மைப் புரட்சி வாதிகள் போலவே நடந்தும் வந்தனர். இந்தக் குறைந்த சம்பளத்திலும் சிக்கன வாழ்க்கை நடத்திச் சேமித்து வைத்த தங்கள் சிறு தொகைகளைக் கூட நாட்டு நிதிக்கே திரும்பவும் அர்ப்பணித்தனர் இந்தப் புரட்சிக்காரர்கள். பொழுது போக்குக்காக இராணுவத்தினர்களே நாடகங்கள் தயாரித்து அவைகளைத் திறம்பட நடிக்கவும் செய்தனர். போர்க் கலையில் மட்டுமல்ல, நடிப்புக் கலையிலும் அவர்கள் கவனம் செலுத்தி வந்தனர். பார்வையாளர்களான இராணுவத்தினருக்கு மேலும் மேலும் உணர்ச்சியையும் ஆவேசத்தையும் வளர்ப்பதற்காக நவீன நாடகங்கள் பல தயாரிக்கப்பட்டன. "ஜாலியன் வாலா பாக்" — "சலோ டில்லி" — ஆகிய நாடகங்கள் முதல் தரமானவை. இவைகளைத் தயாரித்தவர்கள் இராணுவத்தினர்கள் தான் என்றால், மறுமலர்ச்சி எழுத்தாளர்களும் இந்தச் சுதந்திர ராணுவத்தில் பங்கு பெற்றிருந்தனரென்பது சொல்லாமலே விளங்கும்.

நிதி திரட்டல் நடவடிக்கைகளும் வெற்றிகரமாகவே யிருந்தது. வருட முடிவுக்குள் 77,27,947 டாலர்கள் சேர்ந்துவிட்டன. எல்லா இடங்களையும்விட சிங்கப்பூர் தான் அதிக வசூலைத் தந்தது. சிங்கப்பூரில் வசூலானது மட்டும் 29,94,000 டாலர்கள். இது ரொக்க வசூல். தவிர சுமார் 90,000 டாலர் மதிப்புள்ள நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் திரட்டப்பட்டன. ஒரு சமயம் பாதாங்குக்கு நேதாஜி சென்றபோது ஓர் ஏழை, தனது அன்னை மரணத் தறுவாயில் விட்டுச் சென்ற பூக்கடை யொன்றை நேதாஜியிடம் சமர்ப்பித்தானாம். அதுதான் அவன் சொத்து. அதனை ஏற்றுக்கொண்ட நேதாஜி ஏலம் கூறினார். 25,000 டாலருக்குக் குறைவாக எந்தத் தொகையும் ஏற்றுக்கொள்ள முடியாதென்று தெரிவிக்கவே, போட்டி பலமாயிற்று. கடைசியாக, ஒரு சில நூறு ரூபாய்கூடப் பெறாத அந்தப் பூக்கடை, ஒன்றரை லட்சம் டாலருக்கு ஏலம் போயிற்று.

இத்தனை முஸ்தீப்புகளும் செய்து முடிந்தன. சுதந்திரப் போரை வெற்றிகரமாகத் தொடங்கி நடத்த வேண்டு மாயின. போர்முனைக்குச் சமீபத்தில் முன்னணித் தலைமைக் காரியாலயம் இருக்க வேண்டியது அவசியமல்லவா? ஆதலால் பர்மாத் தலைநகரான ரெங்கூனுக்கு தலைமைக் காரியாலயம் 1944 ஜனவரி ஆரம்பத்தில் மாற்றப்பட்டது. சுதந்திர பர்மாவின் பிரதமர் டாக்டர் பாமா அவரது சர்க்காரின் சார்பாக, சுதந்திர இந்தியத் தற்காலிக சர்க்கார் தலைவர் நேதாஜியையும் இதர மந்திரிகளையும் வரவேற்று உபசரித்தார். பர்மிய சர்க்காரும் அதன் மக்களும், இந்தியச் சுதந்திரப் போருக்குத் தேவையான

சகல உதவிகளையும் அளிக்கத் தயாராக யிருப்பதாக உறுதி மொழியும் கொடுத்தனர்.

ஜனவரி கடைசி வாரத்தில் ரெங்கூன் பக்கத்தி லுள்ள இன்ஸீன் சிறையைப் பார்வையிடச் சென்றார் இந்தச் சிறை அவருக்குப் புதிதல்ல; முன்னொரு முறை கைதியாக இருந்து அனுபவம் தந்த சிறைதான். அந்தக் காலத்திலிருந்த ஜெயிலரே இப்பொழுதும் இருந்தார். நேதாஜியை மறுமுறை பார்வேறும் பாக்கியமும் அந்த ஜெயிலருக்கே கிடைத்தது இந்தச் சம்பவத்தில் ஓர் அதிசயத்தைக் குறிப்பிடத்தான் வேண்டும். பிரிட்டன் ஆட்சி காலத்தில் வெள்ளையருக்கே யன்றி வேறெந்த நிறத்தவர்க்கும் திறக்கப்படாத அதன் முகப்புக் கதவுகள், நேதாஜியின் காலடிச் சத்தம் கேட்டதும் திறக்கப் பட்டன வென்னின் அதிசயந்தானே! வேகமாய் உள்ளே நுழைந்த நேதாஜி சுவரைப் பார்த்ததும் திடீரென நின்றுவிட்டார் குறிப்பறிந்த அந்த ஜெயிலர் (இப் பொழுது பிரதம ஜெயில் அதிகாரி) நேதாஜியைப் பார்த்து, "முன்பு தாங்கள் (கைதியாக) இருந்த அறை யைப் பார்க்க விருப்பமா?" எனப் பணிவுடன் கேட்டார் "ஆம், அவசியம் பார்க்க வேண்டும்" என்றார் பதில் அதனைப் பார்த்ததும் பழைய நினைவுகள் தோன்றின. அங்கு தனக்கு நேர்ந்த முன் அனுபவங்களை யெல்லாம் வெளியிட்டுச் சொன்னார்.

இதற்கிடையே சுதந்திர தினம் வந்துவிட்டது. ஜனவரி 26-ந் தேதி அவ்விழா அதில் 60,000 பேருக்கு மேல் கலந்து கொண்டனர். அம் மாபெருங் கூட்டத் திற்குப் பல மைல் தூரத்திலிருந்து கூட இந்தியர்கள் நடந்து வந்திருந்தனர். உணர்ச்சி மிகுந்த நேதாஜியின்

சொற் பெருக்கு, வந்திருந்தவர்களைப் பரவசப் படுத்திற்று. தனக்கு அணிவித்த மலர் மாலையைக் கையிலேந்திக் கொண்டு நேதாஜி, வழக்கம்போல் ஏலம் கூறத் தொடங்கினார் எடுத்த எடுப்பில், ஓர் பஞ்சாப் இளைஞன் (பணக்கார வகுப்பைச் சேர்ந்தவன்) லட்ச ரூபாய்க்குக் கேட்டான். சில நிமிடங்களில் அது ஒன்றரை—இரண்டு மூன்று — நான்கு — நாலேகால் — ஐந்து லட்ச மென்று கேள்வி உயர்ந்து கொண்டே போயிற்று. ஏழு லட்சத்தையும் எட்டிப் பிடித்துவிட்டது கேள்வி. பார்த்தான் பஞ்சாப் இளைஞன், மனதிலே வேதனையும் போராட்டமும் குமுறின. ஒரே பாய்ச்சலில் மேடை மீது தோன்றினான் "என் சொத்து முழுவதும் — எனக்குச் சொந்தமான ஒவ்வொரு காசும் — இந்த மாலைக்கு" என்று கதறினான். உணர்ச்சித் துடிப்பால் உடல் நடுங்கி நின்ற அவ் விளைஞனை, நேதாஜி தன்னிரு கரங்களாலும் அணைத்துச் சாந்தப்படுத்தினார். "மாலை உனக்கே உரியது; நம் சேனையின் பெருமை யெல்லாம் உன்னதே" என்று கூறிய அவரது ஆசீர்வாதம் அவன் காதுகளில் ஏறவேயில்லை.

மாலையைத் தன்னிரு கைகளாலும் இறுகப் பற்றிக் கொண்டான், மார்போடு அணைத்தான், கண்ணிலே ஒத்திக் கொண்டான், பொங்கிய உணர்ச்சியால் ஆனந்தக் கூத்தாடினான். "பணம் பெறும் பந்தத்திலிருந்து விடுதலை பெற்ற நான் தாய் நாட்டின் விடுதலைக்காக உயிரையும் தியாகம் செய்யத் தீர்மானித்து விட்டேன். சேனையிலே எனக்கு இடம் வேண்டும்" என்று முழங்கினான். அவனையும் அணைத்துக் கொண்டது இந்தியத் தேசிய ராணுவம்.

